
பிப்ரவரி '95 விலை ரூ.6



ஜனவரி மே
இதழ் இல்லை

அமுதசுரபி


Acc. NO. 10595

உள்ளே

காமிரா மேதை
திரு. யு. ராஜகோபால்

திரு. ராஜகோபால், தாசரி நாராயண ராவின் கோரின் தாகு, கே. விசுவ நாத்தின் - சீதா மகாலட்சுமி, செம் மீன் (மார்கஸ் பார்ட்லியுடன்), ஒளி விளக்கு போன்ற பல வெற்றிப் படங் களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணி யாற்றியவர். கேரள அரசின் விருது களைப் பலமுறை பெற்றவர். அரசு விருதுகளை நிர்ணயிக்கும் தேர்வுக் குழுக்களில் நடுவராகப் பணிபுரிந்துள் ளார். தென் னிந்திய ஒளிப்பதிவாளர்கள் சங்கத் திற்கும், தென்னிந்திய சினிமா தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்கத் திற்கும் உப தலைவராக இருந்தவர். இந்த இதழின் மேலட்டை போட்டோவை, சென்ற ஆண்டே நமக்கு அளித்திருந்தார். அவர் 25.1.95 அன்று திடீர் மரண மடைந்தார் என்று அறிய வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்ப்பதற்கு எளியவர், பழகுவதற்கு இனியவர், இறுதி நாள்கள் வரை தன் தொழிலை நேசித்து, பூஜித்தவர் - அன்னாருக்கு எங்கள் இதய பூர்வ மான கண்ணீர் அஞ்சலி.



பிப்ரவரி '95
பவ - மாசி
மலர் : 47
இதழ் : 10

அமுதசுரபி

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே - பாரதியார்

◆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா
◆ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்
◆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியம்
◆ ஆண்டு சந்தா : ரூ. 72/-
◆ தனி இதழ் விலை : ரூ. 6/-
◆ ஆயுள் சந்தா : ரூ. 1000/-
◆ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்
◆ அட்டை வண்ணப்படம் : அமரர் யு. ராஜகோபால்

Protection என்பதை, பாதுகாப்பு என்றால், security என்பதையும் பாதுகாப்பு என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆபத்திலிருந்து காப்பாற்றுவது protection (பாதுகாப்பு). ஆபத்து வராமல் தடுப்பது security (பாதுகாப்பு). இக் கட்டுரை ஆபத்திலிருந்து நம்மை அன்னை பாதுகாக்கும் சட்டம், நியதி, முறை, வகை, வழி, அன்பு, ஆதரவு ஆகியவற்றைப் பற்றியது.

இதுவரை உலகத்திலில்லாததை எந்த விஷயத்திலும் புதியதாக அளிப்பது அன்னை சக்தி. அதுபோன்ற புதியது இல்லாவிட்டால் அது அன்னை சக்தியுல்ல. உதாரணமாக உடலுக்கு வியாதி வந்தால் மருந்து குணம் செய்கிறது. (மந்திரம், மணியும் குணப்படுத்தும்). நாம் ஒன்றும் செய்யாவிட்டாலும் சில வியாதிகள் நாளடைவில் - காலத்தால் - குணமாகும். உடலே குணப்படுத்திக் கொள்ளும் திறன் உடையது. நம்பிக்கை குணப்படுத்தும்; வியாதியின் வேர் மனத்திலிருந்தால், அதை மாற்றினால் குணமாகும். அன்னையின் அருளும் குணப்படுத்தும்; அன்னையின் அருள் இவற்றின் மூலமாகவும் குணப்படுத்தும், நேரடியாகவும் குணமாக்கும். அன்னையின் அருள் நேரடியாக ஒரு வியாதியை - தலைவலி, வயிற்றுப் போக்கு, நெஞ்சடைப்பு, சர்க்கரை - மாற்றி குணத்தைக் கொடுத்தால், அந்த வியாதியால் மீண்டும் ஒரே ஒரு முறையும் வரமுடியாது. எந்த நேரமும், எல்லா வேலையிலும் தன் அருள் முத்திரை, சிறப்பான முத்திரையாக இருப்பதை அன்னை ஊர்ஜிதம் செய்வார்.

திராட்சை ஏற்றுமதியில் இலாபமிருப்பதால், உற்பத்தி ஏராளமாகப் பெருகுகிறது. உற்பத்தி பெருகினால் இலாபம் குறையும். மகாராஷ்டிர மாநிலத்தில் திராட்சை உற்பத்தி, ஏற்றுமதி பெருகப் பெருக விலை ஏறியதைக் கண்டு அனைவரும் வியந்தனர். வாழ்க்கை நியதிக்கும் புறம்பாக, உலகத்திலில்லாத பழக்கம் இது. அன்னை செயலில் இதுபோன்ற ஓர் அம்சமாவது தவறாது இருக்கும்.

பயங்கரவாதி மிரட்டி வாங்கிக்கொண்டு போன பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் அதிசயம் அன்னை அருளுக்குண்டு. சமரசம் என்றால் ஒருவர் விட்டுக்கொடுக்க வேண்டும். அருளால் சமரசமானால் இருவருக்கும் இலாபமுண்டு.

பாதுகாப்பு

கர்மயோகி



விழிப்பாக இருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்கிறோம். சமூகம் சட்டத்தாலும், பழக்கத்தாலும் அனைவருக்கும் பல விஷயங்களில் பாதுகாப்பை அளிக்கிறது. பூர்வ ஜென்ம பலனால் நம்மையறியாமல் (கர்மத்தால்) வந்த ஆபத்து விலகுகிறது. இவற்றைத் தாண்டி வாழ்வில் பாதுகாப்பில்லை. அன்னை சக்தி செயல்படும்பொழுது நம்முடைய விழிப்பை அதிகமாக்கி, சமூகத்தின் பழக்கத்தை நீட்டி, பூர்வஜென்ம புண்ணியத்தை அதிகப்படுத்திப் பாதுகாப்பை வழங்குகிறது.

கடலில் நீந்திக் கொண்டிருந்தவர், தூரத்தில் ஒருவர் மூழ்குவதைக் கண்டு உதவப் போன போது, அவன் உதவிக்கு வந்தவரை இரு கைகளாலும் அணைத்துப் பிடித்துக் கொண்டான். இவரும் சேர்ந்து மூழ்குகிறார். இவர் தற்செயலாக ஆசிரமத்திற்கு வந்தார். அன்னையைத் தரிசனம் செய்து, ஆசிரமத்தில் சேர்ந்தார். கொஞ்ச நாளில் இங்கு நடக்கும் விஷயங்களைப் பார்த்து, அன்னையின் இலட்சியங்கள் அளவு கடந்து புறக்கணிக்கப்படுவதைக் கண்டு மனம் நொந்து நம்பிக்கை இழந்துவிட்டார். வாயால் Mother என்று சொல்வதையும் நிறுத்திவிட்டார். ஆரம்ப, தீவிர பக்தியால் அன்னையின் அருளை அனைத்திலும் கண்டதையெல்லாம் மறந்துவிட்டார். இவர் அன்னையை மறந்தாலும், அன்னை இவரை மறக்கவில்லை. அவரும் இடைவிடாது அன்னையை அழைத்த நெஞ்சம், திடீரென "Mother, அன்னை" என்று இந்த ஆபத்து நேரத்தில் கூவி அழைத்தது. மூழ்கியவன் பிடி தளர்ந்தது. பிழைத்துக் கொண்டார். அவனையும் காப்பாற்றினார். நாம் மறந்தாலும், அன்னை நம்மை மறக்காத தன்மையை Divine solicitude இறைவனின் ஆதரவு என்கிறோம். அதைக் குறிக்கும் மலர் ஒன்றுண்டு. அழைத்தால் ஆதரவு தருவது தெய்வம். அழைக்க மறந்தாலும், நினைவூட்டி, அழைக்கச் செய்து, ஆதரவு அளிப்பவர் அன்னை.

சிறுவன் டேப்ரெக்கார்ட் செய்யும்பொழுது சிறிய ட்ரான்ஸ்பார்மர் ஷாக் கொடுத்தது. கையில் ஒட்டிக் கொண்டது. அவனுடன் எவருமில்லை. 'ஓ' என அலறினான். அடுத்த அறையிலிருந்த தகப்பனாருக்கு ஆபத்து என்று தெரிந்தது. எலக்ட்ரிக் ஷாக் எனவும் மனதில் பட்டது. அன்று வந்து தங்கிய புது இடமாதலால், எந்த சுவிட்ச் எங்கிருக்கிறது என்று எவருக்கும் தெரியாத நிலை. ஆபத்து ஒரு நிமிஷத்திற்கு மேல் நீடித்தால் பிறகு உதவி தேவையிருக்காது. தகப்பனாருக்கு அன்னையைக் கூப்பிடத் தோன்றவில்லை. மகன் பெயரை 'ஓ'வென்று கூப்பிட்டு ஓடிவந்தார். டிரான்ஸ்பார்மர் தானே கையிலிருந்து விழுந்துவிட்டது. அறுபது வருஷக் கட்டடம். எலக்ட்ரிக் ஒயரிங் பழையது. பையன் விவரம் தெரியாமல் வம்பில் மாட்டிக் கொண்டான். உதவி அடுத்த விநாடி வரவில்லை எனில் பிறகு உதவிக்கு வேலையில்லை. தானே ஷாக் நின்றது அருள். தானே நிற்பதும் உண்டு. நிற்காமலிருப்பதும் உண்டு. அன்னையைக் கூப்பிட பையனுக்கோ, தகப்பனாருக்கோ தோன்றவில்லை. கூப்பிடா விட்டாலும், சூழலில் அன்னையிருந்ததால், அன்னை தானே செயல்பட்டார். எந்தக் கருவி மூலம் செயல்படும் சந்தர்ப்பமில்லாவிட்டாலும், அருள் தானே செயல்படவும் முடியும். அது போல் செயல்படுவது அன்னையின் பாதுகாப்பு.

விவரம் தெரியாமல் ஓர் அடாவடிக்காரனிடம் பெரும் தொகையைக் கொடுத்தபின், கோர்ட்டும், அமீனாவும், அவனை அசைக்க முடியாது என்ற சமூக சூழ்நிலையில், அருள் அடாவடிக்காரனை, தானே அந்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் செய்கிறது என்றால் அது உலகில் இல்லாதது. இத்தகைய பாதுகாப்பை அருள் எப்படி வழங்குகிறது? ஏன் வழங்குகிறது?

மனிதனை எதையும் சாதிக்கக் கூடியவன் என்று சாதனையாளர் சொல்வார்கள். கீதையும் அதையே சொல்கிறது. நாம் ஆசையால் காரியங்களைச் செய்கிறோம். ஆசை சமூகத்தால் அனுமதிக்கப்பட்டால், சூழ்நிலை இணங்கினால், மனஉணர்வும் மனச்சாட்சியும் இசைந்தால், திறமையால் ஆசை பூர்த்தியாகிறது. அறிவுக்குத் தெளிவுண்டு; சாதிக்கும் ஆற்றலில்லை. அறிவின் தெளிவை, ஆசையின் ஆற்றல் ஆமோதித்தால், அறிவு நினைத்ததைப் பூர்த்தி செய்து கொள்ளும். ஆன்மா அதைவிடப் பெரியது. அருள் ஆன்மாவை விழிப்புறச் செய்து செயல்பட வைக்கிறது. அறிவில்லாமல் அடாவடிக்காரனிடம் மாட்டிக் கொண்டால், பிரார்த்தனை அருளை அழைத்து, ஆன்மாவை விழிப்புறச் செய்கிறது. ஆன்மாவுக்குப் புறச்சூழல் கட்டுப்படும். நாம் மாட்டிக்கொண்ட அடாவடிக்காரன் புறச் சூழலில் உள்ளவன். விழிப்புற்ற நமது ஆன்மா தன் சூழலிலுள்ள அடாவடிக்காரன் எண்ணத்தை நிர்ணயிக்கும் திறனுள்ளது. அதனால் அவன் மனம் நமக்கு இசைவாக மாறுகிறது. நமது பிரார்த்தனை பூர்த்தியாகிறது.

சர்க்காரில் என்.ஜி.ஓ.வாக ரிடையர் ஆன ஆபீசர்களுக்கு வேலை கிடைப்பது அரிது. கிடைத்தால் சம்பளம் அவர்கள் பென்ஷனில்

பாதியாக இருக்கும் நிலை நாட்டிலுள்ள பொழுது. அதுபோன்று ஓய்வு பெற்ற ஆபீசரை ஒரு கம்பெனி அழைத்து, அவர் கடைசியில் வாங்கிய சம்பளத்தை அவருக்கு அளித்தது. இந்த ஆபீசர் அன்னை பக்தர். நல்லவர். உயர்தனிச் சிறப்புடைய நல்ல குணம் படைத்தவர். ஒரு ஸ்தாபனம் பொது சேவையில் இறங்கினால், சில நல்லவர்களும், பல அநியாயக்காரர்களும் அங்குள்ள வசதியை நாடி வருவார்கள். சேவையை ஏற்பவர் குறைவு. பலனை அனுபவிப்பவர்கள் அதிகம். தவறு செய்பவர்களுக்கு அங்கு வசதியிருந்தால் கொண்டாட்டம். அதுபோன்ற சேவையை ஒருவர் ஆரம்பித்தார். நல்லவர்களாக சேவையை விரும்பிப் பலர் வந்தனர். வந்தவர்களுடைய குறையால் சேவை ஸ்தாபனம் தன் உச்சகட்டத்திலிருந்து தாழ்ந்த நிலைக்கு வந்தது. நல்லவர்களும் தங்கள் சௌகரியத்தை மட்டுமே கருதினர். ஸ்தாபகர் நிலை அவல நிலையாயிற்று. இதைவிட பாதாளத்திற்குப் போக முடியாது என்ற நிலை வந்தவுடன், அவரவர் தங்களுக்கென்ன கிடைக்கும் என் பதை மட்டும் நினைத்துச் செயல்பட்டனர். தினமும் ஸ்தாபகரை 10,20 பேர் சந்திப்பார்கள். அந்நிலையில் அவர் சந்தித்த பலரும் அவரவருடைய நண்பர்கள், சக ஊழியர்கள், ஊரார் என சில நூறு பேர். இந்த ஆபீசரும் வருவார். ஒரே ஒரு மனிதன்கூட ஸ்தாபனம் என்ன ஆவது, சேவை என்னாவது என்று கேட்கவில்லை. எவர் மனதிலும் ஸ்தாபகர் நிலையை நினைத்துப் பார்க்கும் எண்ணமுமில்லை. சிலர் அவர் கெட்டுப் போக விரும்பினார்கள். உயிருக்குயிராக இருந்தவரும் "நீங்கள் என்ன ஆவது, உங்கள் குடும்பத்தின் கதி என்ன?" என்று கேட்கவில்லை. இந்த ஆபீசர் மட்டும் அதை மட்டும் கேட்பார். கனிந்து உருகுவார். நெகிழ்ந்து பேசுவார். அன்பான ஆதரவைத் தெரிவிப்பார். ஸ்தாபனம் சிக்கலிலிருந்து மீண்டது. ஸ்தாபகர் நிலை உயர்ந்தது. வீணர்கள் விலகினார்கள். இந்த ஆபீசர் மட்டும் எட்ட இருந்தாலும், நன்றியுடன் வருவார். நல்லது சொல்வார். ஸ்தாபகர் தெளிந்தபின் இவர் ஒருவர் மட்டுமே சந்தோஷத்தைத் தெரிவித்தவர். நல்லுணர்வுக்கும் நன்றிக்கும் எடுத்துக்காட்டாக இருந்தார்.

அவரைத் தேடி, அவர் விண்ணப்பிக்காமல், வேலை வந்தது. உலகிலும், மார்க்கட்டிலும் இல்லாத பழக்கப்படி சம்பளம் வந்தது. இது அன்னையின் பாதுகாப்பு. அவர் நல்லெண்ணம் மூலம் அன்னை ஸ்தாபகருக்கு அழிவிலிருந்து பாதுகாப்பை அளித்தார். அதன் மூலம் ஆபீசருக்கு நல்லதைச் செய்தார்.

புரிந்தாலும் புரியாதவை

வெ. இறையன்பு, ஐ.ஏ.எஸ்.

தீபாவளியன்று
நாங்களெல்லாம்
எண்ணெய்தேய்த்து
புதுச்சட்டை, பாவாடை, ரவிக்கை
என உடுத்தி
வெளிவர
நீ மட்டும் பழைய வேட்டியுடன்
இருக்கையில்

"ஏனப்பா
புதுசு போடலியா"
எனக்கேட்டால்

அப்பா நீ
புன்னகைப்பாய்.

அப்போது
புரியவில்லை.

இப்போது
எனக்குப் புரிகிறது
ஆனால்
புன்னகைக்கத் தான் முடியவில்லை.

பெரியவர் என்று சட்டத்திலில்லாத உரிமையைத் தலைவருக்குக் கொடுத்த சொஸைட்டி, தலைவர் பெரியவரல்லர், சின்ன புத்தியுள்ள மட்டமான மனிதர் என்று காணும் நேரம் வந்தது. குதர்க்கம், வக்கிரம், கோணல், பொறாமை, அல்பம் நிறைந்தவர் இந்தப் "பெரியவர்". இவருக்கு எடுக்க முடியாத அதிகாரத்தைக் கொடுத்தது, நரிக்கு நாட்டாண்மை கொடுத்தாற் போலாயிற்று. வெறியாட்டம் ஆடினார். அத்தனையையும் அழிப்பேன் என்று கூச்சமில்லாமல் கொக்கரித்தார். சர்க்காரும், சட்டமும், கோர்ட்டும், வக்கீலும், கைவிரித்தனர். பாதுகாப்புக்காக அருளை நாடினார். அருள் கைவிரிக்கவில்லை. அறிவில்லாமல் அதிகாரத்தை சூனியக்காரனிடம் கொடுத்த நேரத்திலும், கொடுத்தவர் சொஸைட்டியில் மெஜாரிட்டியாக இருந்ததால், "பெரியவரை" விலக்க முடியும் என்று பெரியவருக்குத் தெரிந்தவுடன் பெரியவர் சிறியவராகி ஓடிவிட்டார்.

உலகமே கைவிட்டாலும், அருள் கைவிடாமல் பாதுகாப்பு அளிக்கும்.

சங்கப்பலகை:

பெருந்தகை பி.ஏ.சி.ஆர்



ஆசிரியர்: குன்றக்குடி பெரியபெருமாள்–கிடைக்குமிடம்: அமரர் பி.ஏ.சி.ராமசாமி ராஜா நூற்றாண்டு விழாக்குழு, இராஜபாளையம். 626117– பக்கம் 372 விலை ரூ.60.00

தமிழில் புதிதாய் வளர்ந்துவரும் இலக்கிய வகைகளுள் வாழ்க்கை வரலாற்று இலக்கியமும் ஒன்று. நடமாடும் இலக்கியங்களைப் பற்றி உணர்வதற்கு வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் பயன்படுகின்றன.

நூறு ஆண்டுகளுக்கு முன் இராஜபாளையத்தில் வாழ்ந்த, வரலாற்றில் அமரத்துவம் பெற்ற அமரர் பி.ஏ.சி.ராமசாமி ராஜா பற்றியது இந்நூல். நூலின் நாயகர் பி.ஏ.சி.ஆர். சிறந்த தொழிலபதிர் மட்டுமன்றி, சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்ட பண்பாளர். எப்படியும் வாழலாம் என்பதிலிருந்து விலகி, இப்படித்தான் வாழ வேண்டும் என்று நெறிப்படுத்திக் கொண்டவர்.

வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களுக்கு உண்மைகளையும் (Facts) நிகழ்ச்சிகளையும் தேர்வதற்கு வல்லமை வேண்டும். அப்பண்பு நூலாசிரியர் குன்றக்குடி பெரியபெருமாளிடம் இயல்பாய் மிளிர்கிறது. வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளில் எதைவிடுவது, எதைச் சேர்ப்பது? என்பதில் குழப்பமில்லாமல் திட்டமிட்ட வரையறை, நூலின் தொடக்கம் முதல் இறுதிவரை இடம்பெற்றுள்ளது.

டைரிகள், பி.ஏ.சி.ஆருடன் பழகியவர்கள், அறிந்தவர்கள் போன்ற பல நிலைகளைக் கருத்தில் கொண்டு நூல்களுக்கான செய்திகள் சேகரிக்கப்பட்ட விதம் நினைந்து போற்றற்குரியது.

இராஜபாளையத்து ராஜுக்களின் பூர்விகம் பற்றிய வரலாற்றாராய்ச்சி, ஊர்ப் பெயர் ஆராய்ச்சி போன்றவை ஆசிரியரின் ஆய்வுப் போக்கை வெளிப்படுத்துகின்றன. ஆசிரியர் குரல் மட்டுமில்லாமல் ஆங்காங்கே நூலுடைத் தலைவரின் குரலும் கேட்பது வரவேற்கத் தக்கது. 'வாழவைத்து வாழ்வது' என்பதற்குச் கதை மூலம் விளக்கம் கொடுத்த பி.ஏ.சி.ஆர்.படிப்பவர் மனதில் இடம்பெறுகிறார்.

படிப்போரை வயப்படுத்தும் உணர்ச்சி உரைநடை (Emotional Prose), ஆர்வமுடன் படிப்பதற்கேற்ற கவிதைச் சாயலில் சந்தம் மிகுந்த ஆற்றொழுக்கு நடை, கவரும் தலைப்புகள், பொருத்தமான இடங்களில் இலக்கியங்களைக் கையாண்ட விதம் போன்றவை நூலாசிரியரிகன் திறமைகளை வெளிப்படுத்துகின்றன.

மகாபாரதத்தில் கீதை பெறும் சிறப்பைப்போல பி.ஏ.சி.ஆர் தன் மகனுக்குக் கூறும் அறவுரைப்பகுதி (ப.165) அமைந்துள்ளது. நூலின் செய்திகளைச் சாறாகத் தருவது போலக் 'குணப்பண்பு' என்ற இறுதிப்பகுதி அமைந்துள்ளது.

'Money is important, Priniciple is most important' பி.ஏ.சி.ஆரின் இந்தக் கோட்பாடு நெஞ்சில் நின்று கமழும். ஆங்காங்கே யுள்ள நிழற்படங்கள், வரைபடங்கள் போன்றவை கருதத்தக்கன.

பி.ஏ.சி.ஆர்.காலத்துச் சமூக அரசியலின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை இந்நூலில் காணலாம். இராஜபாளையத்தின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்குப் பெருந்தகை பி.ஏ.சி.ஆரின் வரலாற்றை அறிந்தால் தான் முடியும்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.வி.யின் பாராட்டுரை, அமரர் பி.ஏ.சி.ஆரின் அருமைப் புதல்வர் பி.ஆர்.ஆரின் பதிப்புரை அழகிற்கு அழகுசேர்க்கின்றன. முன்மாதிரி வாழ்க்கை வாழ்ந்து காட்டிய பெருந்தகை பி.ஏ.சி.ஆரின் இந்நூல் மானுட வாழ்விற்கு ஒரு கலங்கரை விளக்கம். அவசியம் படிக்கப்பட வேண்டிய, நூல்! போற்றப்படவேண்டிய கருவூலம்!

— டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்

கீத கோவிந்தம்

ஸ்ரீ ஜயதேவ கவியின் கீத கோவிந்தம்: டாக்டர் என்.கங்காதரன் எழுதியது. வெளியிட்டோர்: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை– 17, விலை ரூ.20.00.

ஜயதேவர் மகாகவி. இசைபாடி இறையடி அடைய வழிவகுத்தவர். அவர் இயற்றிய கீதகோவிந்தம் இந்திய நாடு முழுமையும் பாடப்படும் காவியம். பன்னிரண்டு ஸர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இருபத்தி நான்கு அஷ்டபதிகள் கொண்டது இந்தக் காவியம்.

பத்து அவதாரங்களைக் குறிக்கும் பாடல்களுடன் கண்ணனைப் போற்றும் அஷ்டபதிகள் பிரபலமானவை. கடவுள் நாமத்தைத் துதிக்கும் பஜனைப் பாடல் பாடுபவர்கள் மிகவும் ஏற்றுப் பாடும் பாடல்கள். ஆடிக் கொண்டே பாடும் அஷ்டபதிகளை மிக அநுபவிக்கலாம். நடனத்திற்கேற்றவை.



கீதகோவிந்தப் பாடல்களைப் பொருள் தெரிந்து பாடினால், படித்தால் மிகச் சிறப்பாக இருக்கும். மேதை டாக்டர் என்.கங்காதரன் அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அருமையான உரை எழுதியுள்ளார்கள். பாடல்கள் ஸம்ஸ்கிருதம், தமிழிலும், உரை ஆங்கிலம், தமிழிலுமாக அளித்திருப்பது மிகச் சிறப்பாகும்.

லிப்கோ நிர்வாகத்தினர் பக்தி சம்பந்தமான ஏராளமான நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். பொருள் புரிந்து அநுபவிக்கும் விதத்தில் பல பக்தி நூல்களைத் தயாரித்து அளிக்கிறார்கள்.

அநுபவித்துப் படிப்பதற்கு ஏற்ற முறையில் இதனை வெளியிட்டுள்ள திரு.தி.ந.ச.வரதன் அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

விவேகானந்தா கல்வி நிலையம்



விவேகானந்தா கல்வி நிலையத்தின் முதல்வர் வி. ராஜகோபாலன்.



தளராத ஈடுபாடும் அயராத உழைப்பும் கொண்டு அசைக்க முடியாத தன்னம்பிக்கையில் 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட விவேகானந்தா கல்வி நிலையம், எளிய முறையில், தரமான, சீரான ஆங்கிலப் பயிற்சி வழங்கி வருகிறது.

முதல் பத்து ஆண்டுகளில் ஒரு லட்சம் மாணவ – மாணவியரைக் கொண்ட தபால் முறைப் பயிற்சி, இன்று நான்கு லட்சத்தை எட்டியுள்ளது.

பயிற்சி பெற்றோர் வாழ்க்கையில் வளர்ச்சி கண்டதன் பிரதிபலிப்பு, தொடர்ந்து பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை வளர்ச்சியில் தெரிகிறது.

தொடக்கத்தில் தமிழ் மூலம் மட்டுமே ஆங்கிலம் கற்பிக்கப் பட்டது. இன்று தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி மூலமாகவும் கற்பிக்கப்படுகிறது.

"சுருங்கக் கூறினால், விவேகானந்தா கல்வி நிலையப் பயிற்சியினால், பயனடைபவர்கள் இன்று நம் பாரத நாடு முழுவதும் பரவி இருக்கிறார்கள். நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களில் இல்லத்தரசிகள் 65 சதவிகிதமும் மாணவர்கள் 20 சதவிகிதமும், வியாபார பேர்வழிகளும், வெளிநாடு செல்கிறவர்களும் மற்ற சதவிகிதங்களிலும் பயனடைகிறார்கள்" என்றார்

பயிற்சி பெற விரும்புவோரது கல்வித் தகுதிக்கு ஏற்பவும், பல்லாண்டுகால அனுபவத்தின் அடிப்படையிலும் தபால் முறை ஆங்கிலப் பயிற்சி மூன்று பிரிவுகளாக அமைக்கப் படுகிறது.

'ஏ' பிரிவில் அடிப்படை ஆங்கிலப் பயிற்சியும், 'பி' பிரிவில் ஆங்கில இலக்கணப் பயிற்சியும், 'சி' பிரிவில் ஆங்கில உரையாடல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 'சி' பிரிவு பயிற்சியுடன் ஆங்கில வாக்கியங்களை உச்சரித்துப் பழக ஓர் ஒலி நாடாவும் வழங்கப் படுகிறது. ஒவ்வொரு பிரிவின் பயிற்சிக் காலமும் 3 மாதங்கள். 1984 ஆம் ஆண்டு வசூலித்த ரூபாய் 350/- கட்டணத்தையே இன்றும் தவணையில் பெற்றுக் கொள்கிறார்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தினர். மாதம் ஓர் ஊரில் நேர்முகத் தொடர்பு வகுப்புகள் நடத்தப் படுவது குறிப்பிடப்பட வேண்டிய விஷயமாகும்.

1994 டிசம்பர் மாத முடிவில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை நான்கு லட்சமாக உயர்ந்தபோது, விவேகானந்தா கல்வி நிலையத்தின் பணியினைப் பாராட்டி நடிகர் ரஜினிகாந்த், உங்களது ஆங்கிலப் பயிற்சி பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். பயிற்சியின் மூலம் நான்கு லட்சம் பேர் பயனடைந்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் பல லட்சம் மாணவர்கள் உங்களது பயிற்சியில் சேர்ந்து பயனடைய வேண்டும் என்று கூறி நான்கு லட்சமாவது மாணவிக்குப் பாடப் புத்தகங்களை வழங்கி கௌரவித்திருக்கிறார்.

இலட்சங்கள் கூடி, இலட்சியங்கள் தொடரட்டும்! ●

குன்றக்குடி அடிகளாரின் வினா – விடை அரங்கம் ஆரம்பமே வெகு ஜோர். தெரியாத பல அரிய செய்திகளை அறிந்து கொள்ள உதவிய துடன், அடுத்த இதழ் எப்பொழுது வரும் என ஏங்க வைத்துவிட்டது. திருக்கடவூர்த் தலம் பற்றிய சிறப்புக் கட்டுரையும் அருமை. சில்பியின் அம்பிகை ஓவியம் இக்கட்டுரைக்கு மேலும் மெரு கூட்டியது.

– ஸ்ரீவித்யா காளிதாஸ்,
சிதம்பரம் – 608 001.

சிமெண்ட் தயாரிப்பு பற்றிய கட்டுரை மற்றும் படங்களை வைத்தே கட்டடக் கலைப் பற்றிய அடிப்படை உண்மைகளைப் படிப்பவர்களின் மனங்களில் அஸ்திவாரமாகப் போட்டுக் காட்டி விட்டீர்கள்.

– அய்யாறு வாசுதேவன்,
சென்னை – 600 081.

மதுரை தந்த மதுரவாணியின் "மதுரக் குரல்" போலவே அட்டைப் படமும் மகிழ்ச்சியைத் தந்தது.

சிலர் வயதுக்குத் தகுந்தபடி உடைகளைத் தேர்ந்தெடுத்து அணியாமல், தன் மதிப்பைத் தானே இறக்கிக் கொள்கிறார்களே என்று நான் பல வருடங்களாகவே மனநெருடலுடன் எண்ணிப் பார்த்திருக்கிறேன்.

நாகரிகப் போர்வை என்னும் பெயரால் சில பெண்கள் கணவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதுடன் (அவர்கள் மாமனார், மாமியாருக்கு எதிரிலேயே) வா, போ என்று பேசுவதையும் நிறைய பார்த்து மனம் வெம்பியிருக்கிறேன். பாவையர் பக்கங்களில் இந்த என் எண்ணம் எதிரொலித்துள்ளது.

அதே செய்திகளை முந்தித் தந்து சிறப்பாக எழுதியதற்காக பாராட்டுதல்களைப் பெறுகிறார்கள் திருமதி சந்திரா ஜானகிராமனும், திருமதி மீனாட்சியும்.

— இந்திரா ஆராவமுதன்,
ஸ்ரீரங்கம்.

வண்ண மலராய் 'அமுத சுரபி' ஜனவரி இதழ் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகளின் படங்களும், குறிப்பும் அருமை. முதல் பரிசுக் கதை, மனித சமுதாயம் மறந்து விடும் மனித நேயம் பற்றி அக்கறையுடன் எடுத்துக் காட்டியது. தகுதியான கதை பரிசு பெற்றதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. போட்டிக்கான மற்ற கதைகளையும் படிக்க ஆவல்!

– ரிஷபன், திருச்சி – 620 006.

திரு. முக்தா சீனிவாசன் எழுதிய 'இரண்டாம் தாலி' புதினத்தைப் படித்தேன். சரளமான நடையில் – சஸ்பென்ஸை கடைசியில் காட்டி திகைக்க வைத்து விட்டார்.

– திரு. பி.கே.ஈ. அப்துல்லா,
வலங்கைமான்.

கண்கவரும் வண்ணப் பக்கங்களுடன், கருத்து பெட்டகமாய் அதிகப் பக்கங்கள் கொண்ட 'அமுதசுரபி'யின் விலை ரூபாய் 6/- என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

– சத்யா, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

மனம் விட்டுப் பேசுவோம்

ஜனவரி 95 மாத இதழ் கண்டேன். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்த புகழ்மிக்க தஞ்சையின் கோபுரமும், கோபுரம் போல உயர்ந்து நிற்கும் திருமதி ரேவதி ராமச்சந்திரன் அவர்களின் வண்ணப்படமும் இம்மாத இதழுக்கு மெருகூட்டின.

– ஏ. கோவிந்தன், சாந்தி நகர்.
சென்னை.

கர்மயோகியின் அக்ஷய பாத்திரத்தில் எடுக்க எடுக்க வளரும் என்ற அன்னையின் அருள்வாக்குகள் மனதுக்கு இதத்தையும், தைரியத்தையும் தருவதாக அமைந்தது.

– அ. செபாஸ்டின்.
களியல் – 629 101

இந்த மண்ணில் எவரும் இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி, தனக்கு முக்கிய தேவை பணம் ஒன்றுதான் என்ற குறிக்கோளுடன், 'தஞ்சம்' என வருபவர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கும் சுயநலவாதிகளும், மனிதன் மன்னிக்கக் கூடியவன் என்பதை மறந்து தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுக்காக சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து பழி வாங்கத் துடிப்பவர்களும், இந்த மண்ணில் பிறந்து உலகினை அழிவுப் பாதையை நோக்கிச் செலுத்துகின்றனர் என்பதை உணர்த்துகிறது, 'ஈரமில்லாத இதயங்கள்' சிறுகதை.

– ஜி. கனகராஜ்,
திருவில்லிபுத்தூர் – 626 110.

யோகியின் 'என்று தணியும் இந்த மோகம்?' அற்புதமான சிறுகதை. இங்கு இட ஒதுக்கீட்டின் பெயரால் திறமைப் புறக்கணிக்கப்படுவது நிஜமே. இருப்பினும் நாம் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்ய வேண்டியது நமது கடமை. மனமிருந்தால் மார்க்கமுண்டு. செல்வம் சேர்ப்பதற்காக நான் கைந்து வருடங்கள் வெளிநாடு சென்று வருவதில் தவறில்லை. ஆனால் அதன் பிறகாவது நமது திறமையும் உழைப்பும் நமது தேசத்திற்குப் பயன்பட வேண்டும். சாமுவேல் ஸார் போன்ற பற்றற்ற கடமையாளர்களால் தான் பாரதம் வாழ்கிறது என்றால் அது மிகையில்லை.

– தி. அ. பாலசுப்பிரமணியன்,
திருவண்ணாதபுரம்

இப்படியும் சிலர் இருக்கிறார்கள்

இதோ சில உதாரணங்கள் :-

சிறு குழந்தைகள் முதல் வளர வளர அந்தந்த வயதுப் பிரகாரம் வித்தியாசமான பேச்சுகளைப் பேசுகிற பெற்றோர்களும் இருக்கிறார்கள். "உன் நிறத்துக்கு உனக்கு இந்த டிரஸ்தான் (கலர் சொல்லி) நன்றாக இருக்கும்" என்று சொன்னால், அந்தக் குழந்தையின் மனம் எப்படி இருக்கும்? நீ குள்ளம், நீ உயரம், உன் மூக்கு சப்பை, உன் கண் சரியே இல்லை. பல் சரி இல்லை' என்று பேசும் பெற்றோரைவிட, மற்றவர்கள் இப்போது ரொம்பவும் அதிகம். "அழகு நிலையத்திற்குப் போய்ச் சரி பண்ணிக்கோ". "பல் டாக்டரிடம் போ" என்றெல்லாம் பல விதப் பேச்சுகள்.

பள்ளிக்கூடம், ஆபீஸ், காலேஜ் எல்லா இடங்களிலும், கல்யாணம் போன்ற விசேஷங்கள் பார்ட்டிகள், கெட் டுகெதர், பிக்னிக் ஒன்றையுமே விடவில்லை நம் சமூகம். இதற்கு மாற்று உண்டா? உண்டு.

முகத்திற்கு நேர் விமரிசிக்கக் கூடாது. நாசூக்காக விஷயத்தை எடுத்து யாரிடம் சொல்ல வேண்டுமோ அவரிடம் சமய சந்தர்ப்பம் பார்த்துப் பேச வேண்டும்.


உதாரணமாக ஒரு மாமிக்கு இரண்டு மாட்டுப் பெண்கள். ஒருத்தி எல்லாவற்றிலும் நிதானமாக இருப்பாள். இன்னொருத்தியோ துடுக்கு. மாமி இருவரையும் வித்தியாசமில்லாமல் பழகுவதற்குப் பதிலாக, கோயிலுக்குப் போவதிலிருந்து, சமையல், சிநேகிதர் வீடு, விசேஷங்கள் எல்லாவற்றிலும் ஒரு மாட்டுப் பெண்ணைத்தான் புகழ்வாள். மற்றவளுக்கு சாமர்த்தியம் போதாது என்று வெளிப்படையாகவே விமரிசிப்பார். இப்படிச் செய்வது தவறு.

ஒரு பெண்ணோ, ஆணோ, அழகிலோ அறிவிலோ, வேறு எதிலும், குறைபாடுடையவராய் இருந்தாலும் அதை அழகாக, நயமான பேச்சால், செயலால் தெரியப்படுத்த வேண்டுமே தவிர, ஏளனப் பேச்சாலோ செயலாலோ சுட்டிக்காட்டவே கூடாது.

இதைத் தெரிந்து கொண்டு நல்ல முறையில் பழகினால் சமூகம் மேம்பாடடையும் என்பதைச் சகோதரிகள் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.


— ஸ்வர்ணா ஜி, பம்பாய் 77

பாவையர் பக்கங்கள்



போட்டோ : பி. சுந்தரம்

நல்ல பழக்க வழக்கங்கள்



நிறைய வீடுகளில் குழந்தைகள் பள்ளிக்குப் போகும்போது அவர்கள் கையில் காசு கொடுக்கும் பழக்கம் இருக்கிறது. காசு கையில் கிடைத்ததும், குழந்தைகள் கடைக்குத் தானே ஓடுகிறார்கள்? இதைத் தடுக்க, பிள்ளைகளுக்கு உண்டியல் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். காசு கிடைக்கும் போதெல்லாம் உண்டியலில் போடச் சொல்லுங்கள். உறவினர் யார் காசு கொடுத்தாலும் உண்டியல் பணத்தில் பிள்ளைகளுக்குத் தேவையான பொருள்கள், படிப்பதற்கு வேண்டிய பொருள்களை வாங்கித் தரலாம்.

நம் வீட்டிற்கு உறவினர்களோ, தெரிந்தவர்களோ வந்தால், நாம் நம் குழந்தைகளிடம், 'பாட்டுப் பாடிக் காட்டு, ஏ.பி.ஸி.டி சொல்லு, டான்ஸ் ஆடிக்காட்டு' என்று சொல்கிறோம். அது தவறு. 'குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்பது குறள். தம் மக்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார். அதனால் இது, வீட்டிற்கு வந்திருப்போருக்கு அதிகமாக ரசிக்காது. பெற்றோர் இதை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

எல்லாம் நமக்குத் தெரியும் என்று இருந்து விடக் கூடாது. நமக்குத் தெரியாத நிறைய விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கலாம். சமையல் செய்வதிலோ, பலகாரங்கள் செய்வதிலோ, கைவேலைப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் செய்வதிலோ சிலர், நம்மைவிடச் சிறப்பாயிருக்கலாம். அவற்றை எப்படிச் செய்வதென்று அவர்களிடம் கேட்பதைச் சில பெண்கள் கௌரவக் குறைச்சலாக எண்ணுகின்றனர். அப்படி எண்ணாமல், தெரியாதவற்றைத் தெரிந்தவரிடம் கேட்டு, நாமும் அவற்றைச் செய்ய வேண்டும். நாம் கேட்பதால் அவர்களும் மிகப் பிரியமுடன், நமக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.

நாம் உறவினர் வீட்டுக்குப் போய், அங்கு இரண்டு, மூன்று நாள்கள், தங்கப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது முன்கூட்டியே உறவினர் வீட்டிற்கு, நாம் வருவதைத் தெரிவிக்க வேண்டும். நமக்கு வேண்டிய டவல், சோப், சீப்பு, பல்பொடி (டூத்பேஸ்ட்) தலைக்குத் தேய்க்கும் எண்ணெய், பவுடர் எல்லாம், நாமே எடுத்துச் செல்ல வேண்டும். சென்ற இடத்தில் அது வேண்டும், இது வேண்டும் என சதா கேட்டு உறவினருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. காலையில் அதிக நேரம் படுத்திருக்காமல் சீக்கிரமாக படுக்கையை விட்டு எழுந்துவிட வேண்டும். அவர்களின் வீட்டில் அவர்களுடன் சேர்ந்து வீட்டு வேலைகளில், நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். உறவினர் வீட்டு டி.வி. ஷோகேஸ், டேப்ரெக்கார்டர் ஆகியவற்றில் நம் குழந்தைகளை விளையாட விடக் கூடாது. (நாமும்தான்)

ஊரைச் சுற்றிப் பார்க்க நாம் கிளம்பினால், உறவினர் வீட்டில் யாவரையும் நம்முடன் வருமாறு அழைத்துச் செல்ல வேண்டும். உறவினர் வீட்டுக் குழந்தைக்குப் பிரியமான பொம்மை அல்லது 'ட்ரெஸ்' வாங்கிக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட விருந்துதான் கலகலப்பாக மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உறவினர் வருகிறார்கள் என்றால், வீட்டுக்காரர்கள், 'ஐயையோ இவர்கள் வந்தால் பெரிய தொல்லையாக இருக்குமே' என்று பதறாமல், மறுமுறையும் ஆவலோடு எதிர்பார்க்கும் உறவினராக நாம் இருக்க வேண்டும்.

—'தேவி, கோவைபுதூர்

'என் இலக்கிய வாழ்க்கை'

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

2

என்னை இலக்கியவாதியாக நாட்டுக்கு அறிமுகப் படுத்தியது, சிலப்பதிகாரம் தான். எனவே என் இலக்கிய வாழ்க்கையில் சிலப்பதிகாரம் இரண்டறக் கலந்துள்ளது.

நான் கொஞ்சம் வளர்ந்த போது என் அன்னையார், வீட்டிலே தனக்கு ஓய்வு இருக்கிற போது அம்மானை இலக்கியங்களைப் படிப்பார். புலவர் புகழேந்தியின் பெயராலுள்ள கோவலன் கதை, பவளக்கொடி மாலை, அல்லி அரசாணி மாலை போன்ற அம்மானைப் பாடல்களைக் கற்றேன்.

அந்த நாளில் அம்மானை இலக்கியங்களைப் பரப்புவது ஓர் இயக்கமாகவே வளர்ந்தது. இதை ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் பல்கலைக் கழகங்களில் பி எச்.டி செய்து வளர்க்கவில்லை.

அம்மானை இலக்கியங்களைப் பெரிய எழுத்தில் போடுவார்கள், கொஞ்சம் வயதானவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும்படி! அன்னையார், வீட்டில் இதைப் படிப்பார்கள். அடுத்த வீட்டுப் பெண்கள் எல்லாம் உட்கார்ந்து கேட்பார்கள்.

என் தாய் படிக்கக் கேட்டு, அதன் மூலம் அறிந்து கொள்வார்கள். இந்த அம்மானை இலக்கிய நூல்கள் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் காப்பாற்றி வைப்பதற்கு நான் தமிழ் வளர்ச்சிக் குழுவின் தலைவராக இருந்தபோது அறிக்கை விட்டு சேகரித்துக் காப்பாற்றி வைக்கத் திட்டமிட்டிருந்தேன். இப்போதுள்ள நவீன சாதனங்கள் மூலம் பாமர மக்களைப் பண்டிதர்களாக்கிய இலக்கியங்களைக் காப்பாற்றி இருக்க முடியும்.

இது விஷயமாக அரசாங்கத்திடம் அறிக்கை கொடுக்கவும் எண்ணியிருந்தேன். அதற்குள் 1989இல் ஆட்சி மாறியதால் அந்தப் பதவியைத் துறக்க வேண்டி வந்தது. அதற்குப் பிறகு அதை வேறு யாரும் செய்ய முடியவில்லை.

சாமான்யர்கள் அந்த அம்மானை இலக்கியங்களைப் படித்து முடித்த பிறகு இராமாயணத்தைப் படிப்பார்கள்; மகாபாரதத்தைப் படிப்பார்கள். இன்னும் தேசிங்கு ராஜன் கதை, காத்தவராயன் கதை என்று சரித்திரப் போக்கில் இருக்கும் இலக்கியங்களையும் என் அன்னையார் படிக்கிறபோது நானும் உட்கார்ந்து கேட்பேன்.

அவருக்கு ஓய்வு தேவைப்படுகிறபோது என்னிடம் கொடுத்து "நீ படியடா" என்பார்கள்; படிப்பேன். மற்றவர்கள் எல்லாம் கேட்பார்கள். இப்படி சிற்றிலக்கியங்களைப் படிக்கிற பழக்கமும் ஏற்பட்டது.

நான் கல்வியில் முதிர்ச்சியடைவதற்கு நாளிதழ் பத்திரிகையில் இருந்ததும் பயன்பட்டது.

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு என்ற பெரும் தேச பக்தர் 'தமிழ்நாடு' என்னும் பெயரில் நாளிதழ் நடத்தினார்.

மதுரையில் நாயுடு மீது ராஜத்துவேஷ வழக்குப் போடப்பட்டது. அதை எதிர்த்து வாதாடிய வழக்கில் ராஜாஜி வெற்றி பெற்றார்.

அந்த தினசரிப் பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தேன். பத்திரிகையில் நான் கம்பாசிடராக எழுத்துக் கோத்தபோது என் மனத்தில் அந்தச் செய்திகள் அப்படியே ஒட்டிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது தேச பக்தி செய்திகள்தான் வெளியாகும். இப்போது ஒருவரை ஒருவர் திட்டுகிறதெல்லாம் வருகிறதே!



தினசரிப் பத்திரிகைக்கு மற்ற நாளிதழ்கள், பருவ இதழ்களெல்லாம் மாற்றுப் பிரதிகளாக வரும். அவை ஸ்டோர் ரூமில் குவியும். மாற்றுப் பிரதிகளை ஒன்று விடாமல் படித்து விடுவேன். பெரியார் ஈ.வெ.ரா.வின் 'குடியரசு' பத்திரிகையும், ஜஸ்டிஸ் கட்சியின் 'திராவிடன்' பத்திரிகையும் வரும். அவற்றைத் தூக்கி ஸ்டோர் ரூமில் போட்டுவைப்பார்கள்.

ஸ்டோர் ரூமுக்குப் போய் அந்தப் பத்திரிகைகளை எல்லாம் படித்து அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை ஆதியில் இருந்தே அறிந்து கொள்ளும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

அதற்குப் பிறகு நாள்கள் நகர்ந்து 1942ஆம் ஆண்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்ற கிளர்ச்சியில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குப் போனேன். 1100 மைல்களுக்கு அப்பாலுள்ள அமராவதி சிறையிலும் இருந்தேன்.

மாகாணத்திற்கு மாகாணம் அரசியல் கைதிகளை மாற்றிக் கொள்வது என்று ஓர் ஏற்பாடு செய்வார்கள். வைஸ்ராய்தான் அதற்கு வாரண்ட் கொடுக்க வேண்

டும். கவர்னரோ, தலைமைச் செயலாளரோ வாரண்ட் பிறப்பித்தால் முடியாது.

அப்படி, சென்னை மாகாண வாசிகள் 30 பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். பிரகாசம், வி.வி.கிரி, சஞ்சீவரெட்டி, காமராஜ், சத்தியமூர்த்தி போன்றவர்கள் பின்னாளில் குடியரசுத் தலைவர்களாக, முதல்வர்களாக, மந்திரிகளாக, பேரவைத் தலைவர்களாக, மேலவைத் தலைவர்களாக வந்தார்களே அவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்தார்கள்.

மத்திய பிரதேசத்திலிருந்து ஆச்சார்ய விநோபாஜி போன்ற முப்பது பேரைத் தேர்ந்தெடுத்து இங்கே வேலூர் சிறைக்குக் கொண்டு வந்து வைத்தார்கள்.

அமராவதி சிறைச் சாலையில் மரண பயத்தை மறப்பதற்கு நான் சிலப்பதிகாரம் படித்தேன். அந்த சிலப்பதிகாரம் படிக்கும் ஆசையே எனக்கு அங்குதான் தோன்றியது. என்னுடன் இருந்த யாருக்கும் இலக்கிய ஞானம் கிடையாது. அவர்களில் பலர் பெரிய பட்டதாரிகளாக இருந்த வர்கள்.


சிறையில் சிலப்பதிகாரம் படித்தபோது, முன்பு படித்த இந்த அம்மானை இலக்கியம் - அன்னையார் சொன்ன - கோவலன் கதை ஞாபகம் வரும். அதற்கும் சிலப்பதிகாரத்திற்கும் சம்பந்தமே இல்லை.

இப்படி, இலக்கிய ஞானத்தை நானாக கற்று வளர்த்துக் கொள்ள முயன்று வந்தேன். சிறையில் எல்லாரும் என்னைக் கேலி செய்வார்கள். வேறு சிலர், 'இன்னைக்கோ, நாளைக்கோன்னு இருக்கான்;இவன் போய் ஓயாமல் படிக்கிறானே' என்பார்கள்.

சிறை அதிகாரிகளிடம் சொல்லி வெளியிலிருந்து வெற்றுக் காகிதங்களை வாங்கி வரச் சொல்லி குறிப்புகள் எடுப்பேன். என் அறையில் பினாங்கு சொக்கலிங்கச் செட்டியாரும் இருந்தார்.

சத்தியமூர்த்திகூட கேட்பார், "என்டாப்பா, ஓயாமல் படிக்கிறியே. இதுவே உனக்கு நோய் இல்லையா?" என்பார்.

இன்னொரு தடவை, "கண்ணாடியில் உன் முகத்தைப் பார்க்கிறதில்லையா?" என்றும் கிண்டல் செய்தார்.



அப்படி சிறையில் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தபோது உடல் நிறை - பவுண்ட் குறைந்து கொண்டே போனது எனக்கு. 31 பவுண்ட் எடை குறைந்து திடீரென்று ஒருநாள் குளிக்கும் அறைக்குப் போனவன் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். கதவை உடைத்து என்னை வெளியே எடுத்தார்களாம். மருத்துவக் காரணத்திற்கு என்னை நிபந்தனையின்றி விடுதலை செய்தார்கள்.

வெளியே வந்த பிறகு - நாடு வெறும் பாலையாக இருந்தது. தலைவர்கள் எல்லாம், தொண்டர்கள் எல்லாம், தேச பக்தர்கள் எல்லாம், என் சகாக்கள் எல்லாம் சிறைக்குள் இருந்தார்கள். வெளியே நான் மட்டும் தனியாளாக வந்தேன்.

எனக்கு வாழ்க்கையே ரொம்ப அலுத்துப் போனதால் சிறையில் ஆரம்பித்த இலக்கியப் பயிற்சியைத் தொடர்ந்து மற்ற காப்பியங்களையும் படித்தேன்.

இன்னொன்று, சிலப்பதிகாரத்தை நான் படித்தபோது என் வாழ்நாள்களை நான் பின்னே சென்று பார்த்தேன்.

அய்யர்வாள் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்துக் கொடுத்து நூறு ஆண்டுகள் ஆகின்றன.

இளங்கோ அடிகள் செய்ததை - 1500 ஆண்டுகளுக்கு அப்புறம் அய்யர்வாள் அச்சேற்றினார். அவர் அச்சேற்றி இப்போது நூறு ஆண்டுகள் ஆகின்றன. குடந்தையில் விழாகூட கொண்டாடினார்கள்.

அய்யர் அச்சேற்றி 50 ஆண்டுகள் முடிந்தபோது நான் அதைப் படிக்கத் தொடங்கினேன். முதல் 50 ஆண்டுகள் வரை இது கல்லூரியிலே மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்ததே தவிர, நாட்டிலே அதைப் பற்றி யாருக்கும் தெரியவே தெரியாது.

அதைப் பற்றித் தெரிந்திருந்ததெல்லாம் முரண்பாடுகள் நிறைய உள்ள புகழேந்தி எழுதிய 'கோவலன் கதை'யைத்தான்!

சிலப்பதிகாரத்தை உரைநடையில் கல்லூரிப் பாடங்களுக்கு எழுதியிருக்கிறார்கள்; பள்ளிப் பாடத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அது என் பிரசாரத்தில் இளங்கோ எழுதிய . சிலப்பதிகாரத்தை சாமான்யர்களிடம் பரப்பிய பின்னர்தான் கோவலன் கதை பிறந்தது; அதன் பின் கோவலன் நாடகம் வந்தது. கண்ணகி மறைக்கப்பட்டாள். உண்மையில் சிலப்பதிகாரக் கதைக்கு நாயகி கண்ணகிதான்.

கோவலன் கண்ணகிக்கு நாயகனே தவிர, சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு நாயகன் அல்லன் எலிஸபெத் ராணியார் பிரிட்டனுக்கு அரசி; அந்த அரசிக்கு நாயகன் அவளுடைய கணவன். அதுபோலத்தான் கண்ணகி - கோவலன் நிலை, காப்பியத்திலே!

ஆனால் புகழேந்தி, 'கோவலன் கதை' என்று பெயர் வைத்துப் பரப்பி விட்டார். இதையெல்லாம் சிலப்பதிகாரம் படித்த பின்பு என் ஆராய்ச்சியில் கண்டுபிடித்து மக்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

சிலப்பதிகாரம் இல்லையானால் 'நாட்டியக் கலை தமிழருடையது அல்ல' என்று சொல்ல உலகம் தயாராக இருந்திருக்கும்.

நாட்டியக் கலையின் சாத்திரம் சிலப்பதிகாரம். யாரோ எழுதிய

கோலமயில் குமரன்

ஜெ. கமலநாதன்

கொதிதிரை யெறிகடல் கொந்தளிக்கும் ஒலி
குமரா நின்புகழ் தினம்பாடும்.
மதியினைத் தழுவிட மனதினில் எண்ணியே
வான்தொடும் தருநின் முகம்தேடும்.
விதியெனும் நினைவினை விஞ்சிடும் நின்பெயர்
வீரரின் நெஞ்சில் மறம்கூட்டும்.
துதிப்பவர் நெஞ்சினில் துயிலுறும் உன்னுடை
தொல்புகழ் அன்னவர் யாழ்மீட்டும்.

அறிஞர்தம் நெஞ்சினில் அழியாக் கல்வி
ஆனவன் நீயே திருமுருகா!
வறியவர் வேண்டும் வளரும் பேரருள்
வடிவம் நீயே ஒருமுருகா!
அரிய நின் புகழினை இசையினில் பாடி
அழைப்பவர் நெஞ்சில் வருமுருகா!
சிறியவன் நான்உனை உருகியே கேட்டேன்
சிந்தையில் அமர்வாய் வளர்முருகா!

வேலினை எண்ணி வேண்டிடும் இதயம்
வேதனை மறந்து சிலிர்க்காதோ?
கோலம் நிறை மயில் கும்பிடும் கைகள்
கொடுந்துயர் துறந்து திருந்தாவோ?
வேலவன் பாதம் கனவிலும் காண்பவர்
துன்பம் மறந்து சிரியாரோ?
பாலகன் அருள்திரு முகந்தனை நினைவோர்
பாசம் அறுத்து உய்யாரோ?



கதையை, புகழேந்தி என்ற புலவர் பெயரில் வெளியிட்டார்கள் என்பதே என் முடிவு.

அந்தக் கதையில் மாதவி விலை மாது. சிலப்பதிகாரத்தில் வரும் மாதவிக்கும் – 'கோவலன் கதை'யில் வரும் மாதவிக்கும் நிறைய வித்தியாசம்.

சிலப்பதிகாரத்தில் தமிழருடைய பெருமைகள் எவ்வளவோ உள்ளன. நமக்கே உரிய கலைகள் எவ்வளவோ இருக்கின்றன. இலக்கிய வாழ்க்கை நெறிகள் எவ்வளவோ இருக்கின்றன.

கோவலன் தவறு செய்கிறான். அவன் தவறு செய்யப் போய் – அவன் தன் மனைவிக்குத் தீமை செய்யப் போய் – அவனுக்கு வாய்த்த மனைவி கண்ணகி உயிர் துறக்கிறாள்; மாதவியும் இல் வாழ்க்கையைத் துறந்து துறவியாகிறாள். பூம்புகாரைக் கடல் கொண்டது; அவன் புகுந்த மதுரையைத் தீயுண்டது. இவ்வளவுக்கும் காரணமான அவனே கொலையாகிறான். புலவர்களெல்லாம் சிலம்பு, பெண்கள் கற்பைப் போதிப்பதாகச் சொல்வார்கள்.


நான் இதை மாற்றிப் பிரசாரம் செய்தேன். பெண் கற்புக்கு சிலம்பு தேவைப்படவில்லை. ஓர் ஆண் கற்பு இழந்தால் எவ்வளவு கேடுகள் நாட்டிற்கு வரும் என்பதை நானே உணர்ந்து, நாட்டிற்கும் உணர்த்தினேன். இதை நான் பரப்பாமல் இருந்திருந்தால் ஒரு பெரும் காப்பியம் மக்கள் பார்வையிலிருந்து மறைந்திருக்கும்.

இதைத் தமிழக அரசாங்கமும் ஒப்புக் கொண்டது. கடற்கரையில் வழக்குரை காதையில் வரும் கோலத்தில் கண்ணகி சிலையை நிறுத்தியிருக்கிறது.

அமுதசுரபி வினாவிடை அரங்கம்

உண்மையான துறவு எது?

அமுதசுரபி வாசக அன்பர்களின் கேள்விகளுக்கு டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பதிலளிக்கிறார்.



இர. அன்பரசன், சூளைமேடு, சென்னை.

மனிதனால் சமூகம் கெடுகிறதா? சமூகத்தால் மனிதன் கெடுகிறானா?

சமூகத்தால்தான் மனிதன் கெடுகின்றான்.

என்.எஸ். முத்துகிருஷ்ணராஜா, இராஜபாளையம்.

குன்றக்குடிக் கிராமத்தில் குடும்பத்திற்கு ஒருவர் வீதம் வேலை கொடுத்தும், ஏனைய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தும் இந்தியாவிலேயே மாதிரிக் கிராமமாக உயர்த்தியுள்ளீர்களே? இதைப்போல இந்தியாவில் எல்லாக் கிராமங்களையும் உருவாக்கத் தங்களிடம் திட்டம் உள்ளதா? அதற்காக என்ன செய்து உள்ளீர்கள்? அதைச் செயல்படுத்த எந்தச் சக்தி தடையாக நிற்குமெனக் கருதுகிறீர்கள்?

ஒரு மாதிரித் திட்டமே, இந்தியாவிற்குப் பொருந்தும். இந்திய அரசு 'குன்றக்குடி மாதிரித் திட்டம்' இந்தியாவிற்குப் பொருந்தும் என்று அறிவித்து விட்டது. நாட்டளவில் நிறைவேற்ற நாம் ஒன்றும் செய்யவில்லை. முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் முதல் சக்தி, "நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற பரந்த நோக்கில்லாமல் எங்கும் நிர்வாணமான சுயநலம் இருப்பது. இரண்டாவது, பெரும்பாலோரிடத்தில் 'கடின உழைப்பு' என்பது இன்று காணப்பெறமுடியாத ஒன்று. அடுத்து அரசுகள் நெடிய வரலாற்று நோக்கில்லாமல் இருப்பது.

சி.பி. சிவலிங்கம், கோவை.

'மனம், நினைவுகளின் நீச்சல் குளம்' என்கிறேன். சரிதானே?

இல்லை! நாற்றிசையும் சென்று செய்திகளைப் பற்றுவதுதான் மனத்தின் முதற் பணி.

ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

இத்திருக்குறள் இக்காலத்திற்கும் பொருந்துமா?



இக்காலத்திற்கு மட்டுமல்ல, எக்காலத்திற்கும் பொருந்தும். 'இதுவென வேண்டா' என்ற சொற்றொடரை வியங்கோளாக எடுத்துக் கொண்டு, சிவிகையில் ஊர்வதையும் சிவிகையைச் சுமப்பதையும் கண்டு இது அறத்தின் பயன் என வேண்டாம் என்று பொருள் கொண்டால் எக்காலத்திற்கும் பொருந்தும்.

சி.பி.எஸ். தமிழ்ச் செல்வன், கோவை.

பெரியது எது? சிறியது எது?

பெரியது கடமை. சிறியது புகழ் என்ற பெயரில் விளம்பரம் செய்து கொள்வது.


கவி. இளங்கதிரவன், கோவை.

பூமி எப்போது தன் சுழற்சியை நிறுத்திக் கொள்ளும்?

நிறுத்தாது.

எஸ். நாரம்புநாதன், காஞ்சிபுரம்.

நம் நாட்டின் கல்வி முறை எப்படி அமைய வேண்டுமெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?



செயல்முறை மூலம் கல்வி, தொழில் சார்ந்த கல்வி, தமிழ் வழிக் கல்வி என்று அமைய வேண்டும்.

ஜே.எஸ். சொக்கலிங்கம், சென்னை.

சதாபிஷேகம் எண்பது வயது பூர்த்தியாகிற தினத்தன்று நடத்தலாமா?

ஆயிரம் பிறை வரை வாழ்ந்தபின் செய்வது நல்லது.

சி.பா.சந்தானகோபாலகிருஷ்ணன், வேலாயுதம் பாளையம்.

தாங்கள் முதன் முதலில் எழுதி வெளியிட்ட நூல் எது? தாங்கள் முதன் முதலில் உரை யாற்றத் தொடங்கிய களம் எது?

'சமய மறுமலர்ச்சி'. பாரி நிலையம் வெளியிட்டது. தருமபுரம் ஆதீனம் கல்லூரி இலக்கியமன்ற மேடைகள்.

சாமி கிருஷ்ணன், கும்பகோணம்.

வீட்டில் பூஜையறையில் உள்ள மூர்த்தி களுக்கு துளசி மாலை, உருத்திராக்க மாலை மற்றும் பிளாஸ்டிக் கறுப்பு மணி மாலை அணி விக்கலாமா? அல்லது எந்த மாலை உகந்தது?



வீட்டில் பூசை அறையில் உள்ள மூர்த்தி களுக்கு உருத்திராக்க மாலை, துளசி மாலை அணிவிக்கலாம். பிளாஸ்டிக் கறுப்பு மணி மாலை அணிவிக்கக்கூடாது. எல்லா மாலை களையும் விட மலர் மாலைகளே ஏற்றன.

எம். ராமநாதன், மதுரை.

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் சுவாமிக்கு எதிரில் மயில், ரிஷபம், பன்றி ஆகியவை நிறுவப்பெற்றுள்ளன. இந்த அமைப் பின் விளக்கத்தைத் தாங்கள் கூறி உதவ முடியுமா?

திருப்பரங்குன்றம் முருகன் கோயில் சுவாமிக்கு எதிரில் கற்பக விநாயகருக்கு மூஞ்சூறும், சத்தியகிரீசுவரருக்கு (சிவபெரு மானுக்கு) நந்தியும், முருகனுக்கு மயிலும் நிறுவப் பெற்றுள்ளன. பன்றி இல்லை.

ஆர். பரமசிவம், திருவானைக்காவல்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனும் வாசகம் பிரபலமடைந்ததுபோல, 'என்னப்பன், எல்லாருக்கும் தாம் ஈசன்' எனும் மணிவாக்கும் பிரபலமடையவில்லையே! ஏன்?

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற திருமூலரின் அருள்வாக்கில் உள்ள மோனை வளம் அற்புதமானது. மனிதகுலம் முதன்மைப் படுத்தப் பெற்றுள்ளது. இதனை அரசியல் இயக்கம் எடுத்துக் கொண்டது. அதனால், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற மந்திர மொழி மக்களிடையே பரவியது.

'என்னப்பன் எல்லார்க்கும் தாம் ஈசன்' என்பதில் தமிழ் வளம் போதாது. அரசியல் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் பிரபல மடையவில்லை.

சிவ. பார்வதி, பம்பாய்.

சங்க காலத்தில் பெண்கள் அடிமைகளாய், போதைப் பொருள்களாய்த்தாம் கருதப்பெற் றார்கள் என்ற ஒரு கருத்து உள்ளதே? உங்கள் கணிப்பு என்ன?

சங்க காலத்தில் பெண்கள் அடிமைகளாய் நடத்தப்பெற்றார்கள் என்பதற்குப் போதிய ஆதாரம் இல்லை. இந்தக் கருத்து தவறு. சங்ககாலம் மதுரைத் திருக்கோயிலில் அங்கயற் கண்ணிக்கே முதன்மையிடம் தந்தது.

தாமரைச் செல்வி, திருபுவனம்.

விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானம் ஒப்பிட்டு விளக்கமளித்து அருள்செய்யுங்கள்.

மெய்ஞ்ஞானத்தில் நுண்புலனில் புலனாகும் உண்மைகளை விஞ்ஞானம் சோதனை செய்து உறுதிப்படுத்தி, மனித குலத்தின் அனுபவத் திற்குக் கொண்டு வருகிறது.

வை. குஞ்சிதபாதம்பிள்ளை, திருபுவனம்.

முற்பட்டோரிலும் பரம ஏழைகள் உள்ளனர். அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்தாலென்ன?

நியாயமான கேள்வி. முற்பட்டோருள் வாக்குகள் அதிகம் இல்லை. தம்முள் வலிமையு மில்லை. நடுவண் அரசு முற்பட்டோருக்கென்று இடம் ஒதுக்கியதையும் இந்திய உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. என்ன செய்வது? முற்பட்டோர் முன்பு செய்த தீவினை சூழ்கிறது.

கவுதமன் கும்பகோணம்.

நமது உடலில் ஏழு இடங்களில் சக்கரங்கள் (சகஸ்ர தளம், மூலாதாரம் போன்றவை) உள்ளன எனச் சொல்லப்படுகிறதே? அவை உடலின் எந்தெந்தப் பாகங்களில் உள்ளன?

மூலாதாரம் - குதத்திற்கும் கோசத்திற்கும் நடு இடம்; சுவாதிட்டானம் - கோசத்திற்கும் நாபிக்கும் நடு இடம்; மணிபூரகம் - நாபிக் கமலம். அநாகதம் - இருதயகமலம், விசுத்தி - கண்டம், ஆக்ஞை - புருவமத்தி. சகஸ்ரதளம் (சகஸ்ராரம்) - மூளையின் உச்சி.


என். நீலமணி, வேலூர்.

ஆன்மா வேறு, உயிர் வேறா? விளக்கி உதவுங்கள்.

ஆன்மா, உயிர் இரண்டும் ஒன்றுதான். ஆன்மா என்பது சம்ஸ்கிருதம், உயிர் என்பது தமிழ்.

சு. திருவரசன், பசுமலை.

அரசியல், சாதி, சமயம் ஆகியவற்றின் பெயரால் மோதல்களும், கொலைகளும், வன் முறைகளும் நிகழ்வதற்கு வேலையில்லாத் திண்



டாட்டமே காரணமென சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சுவாமிகளின் கருத்து என்ன?

அரசியல், சாதி, சமயம் ஆகியவற்றின் பெயரால் மோதல்களும், கொலைகளும், வன் முறைகளும் நிகழ்வதற்கு வேலையில்லாத் திண்டாட்டமே காரணம் என்று சொல்வது உண்மையே. மேலும் பாதுகாப்பும் உத்தரவாத மின்மையும்கூடக் காரணங்களாகும்.

என். சுதாகர், டில்லி.

உண்மையான துறவு எது? நீங்கள் கருதும் துறவு எது?

உலகைத் துறப்பது துறவன்று. அத்தகைய துறவு இருந்ததாக - இருப்பதாகத் தோன்ற வில்லை. தன்னுடைய சுகவாழ்வை மையமாகக் கொள்ளாது, மக்கள் குலத்தின் நலத்தினை மையமாகக் கொண்டு மக்களிடையில் வாழ்ந்து அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கேற்று அவர்களுடனேயே வாழ்வதுதான் துறவு. இன்று இந்தத் துறவு காணப்படுவது "அத்திபூத்தாற் போல"த்தான்.

மனோன்மணி சிவலிங்கம், கோவை.

அடிகளே! பெண்ணின் முன்னேற்றத்துக் கான படிகள் எவை?



நன்றாகக் கற்றல். தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் வாழக் கற்றுக் கொள்ளு தல், முயலுதல்.

டி.என். சீனிவாசன், சென்னை.

வர்ணாசிரம முறை சரியல்லவென்று தற் காலத்தில் ஏன் கூச்சல் மிகப் பலமாக எழுகிறது? பகவானே, பகவத்கீதை 42 ஆவது அத்தியாயம், 13 ஆவது சுலோகத்தில், "நான்கு ஜாதிகளும், ஒவ்வொன்றுக்கும் குணம், தொழில் ஆகியவற்றைப் பாகுபாடு செய்து, என்னா லேயே உண்டாக்கப்பட்டது!" என்கிறாரே?

இன்று கீதையில் சொல்லப்பெற்றுள்ள குணம், தொழில் அடிப்படையில் சாதிகள் இல்லையே! தலைகீழாக மாறிவிட்டது! அப்புறம் ஏன் வர்ணாசிரமம்?

வி. நடராசன், வில்வநத்தம்.

தாங்கள் செய்யும் சமூகப் பணிகளைத் தொடர்ந்தாற்ற, என்னைப் போன்ற இளைஞர்

களுக்குப் பயிற்சி தரும் திட்டம் தங்களிடம் உள்ளதா?

இளைஞர்கள் விரும்பி முன்வந்தால் பயிற்சி தரலாம். இப்போது ஓரிரு இளைஞர்கள் வருகிறார்கள். சிலர் சேர்ந்து வந்தால் நல்லது.

மனோமணாளன், கோவை.

நல்ல அன்பு - நட்பின் கற்பு. சரியா?

நூற்றுக்கு நூறு சரி! தூய நட்பே கற்பு. இன்று மிகுதியும் கற்பு, பெண்பாலதாகப் பேசப்படுகிறது. இரண்டு நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக, பரஸ்பர உதவியும் பணியும் செய்து கொள்பவர்களாக வாழ்வதும் நட்புமுறைக் கற்பை நிகர்த்ததுதான்.

புலவர் க. காங்கேயன், உதகமண்டலம்.

'குன்னக்குடி', 'குன்றக்குடி' இரண்டும் ஒன்றா? எனில், இசைக்கலைஞர் வைத்திய நாதன் ஏன் 'குன்னக்குடி' எனக் குறிப்பிடப் படுகிறார்?

இரண்டும் ஒன்றுதான். குன்னக்குடி "KUNNAKKUDI" வழக்கில் பொருளற்றதாக, நலக் குறிப்பிற்கு எதிரானதாக இருக்கிறது. ஊரின் நடுவில் குன்று இருக்கிறது. அதனால் குன்றக்குடி என்ற வழக்கு அறிமுகப்படுத்தப் பெற்றது. "குன்றனைய செல்வம்" என நலம் பயக்கும் சொல்லாகவும் அமைந்துள்ளது.

கே. திருநாவுக்கரசு, சென்னை.

திருமூலநாதன் என்னும் ஐந்து வயதுச் சிறுவன் திருக்குறள் முழுமையும் கற்று நாடு முழுவதும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றான். திருமுறைகள் உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து கேட்கும் பாடல்களை உடன் கூறி வியக்க வைக்கிறான். இத்தகைய ஆற்றல் பற்றிய சுவாமிகளின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்ற திருக்குறள் பொய்யாமொழியாகிறது.

புலவர் சொ. சண்முகம், கோட்டையூர்.

தங்கள் அரிய சிந்தனைகளை இதுவரை எத்தனை நூல்களில் தேக்கி வைத்துள்ளீர்கள்? எந்நூல் சமுதாயத்திற்கு அதிகப் பயனளிக்குமெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

மொத்தம் 45 நூல்கள். "ஆலயங்கள் சமுதாய மையங்கள்" என்ற நூலையும், "மனம் ஒரு மாளிகை" என்ற நூலையும் சிறந்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

அபிராமி அந்தாதி

தேவகி முத்தையா

'அபிராமி அந்தாதி' எனும் நூல் திருக்கடவூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மையின் பேரில் அபிராமி பட்டர் எனும் அருளாளரால் இயற்றப் பெற்றது. தொண்ணூற்றி ஆறு வகைச் சிற்றிலக்கியங்களுள் அந்தாதி இலக்கியமும் ஒன்று. அந்தாதி என்பது ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்று அதற்கு அடுத்த பாடலில் முதலாக வரும்படி அமைத்துப் பாடி, இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து, மாலை போலத் தொடுத்துப் பாடப் பெறும் ஒரு வகைச் சிற்றிலக்கியமாகும்.

தோற்றம்


இன்று காணக் கிடைக்கும் அந்தாதி இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி எனும் நூலாகும்.

சங்க காலத்துப் பாடல்களில் புறநானூறு, ஐங்குறுநூறு, சிறுபாணாற்றுப்படை, நற்றிணை முதலிய நூல்களுள்ளும் அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. பக்தி இயக்கக் காலத்தில் அந்தாதி அமைப்பு அடியார்களை ஆட்கொண்ட நிலையினை நாம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் பக்திப் பாசுரங்களிற் காணலாம். பிற சமய ஆதிக்கத்தினால் பல சமய நூல்கள் அழிக்கப்பட்டன. மனனம் செய்வதற்குக் கவிதைகள், அதுவும் அந்தாதி வகைப் பாடல்கள் அமைப்பின் காரணத்தால் எளிமையாக இருந்தன. இதுவே அந்தாதி அமைப்புப் பாடல்கள் பிரபலமடையக் காரணமாக அமைந்திருக்கலாம்.

அபிராமி அந்தாதியை இயற்றியவர், சோழ நன்னாட்டில் திருக்கடவூரில் இன்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்றி ஐம்பது ஆண்டுகட்கு முன் அந்தணர் குலத்தில் கௌசிக கோத்திரத்தில் தோன்றிய அபிராமி பட்டர் என்பவர். இவரது இயற்பெயர் சுப்பிரமணிய அய்யர்; இவர் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தவர்; தமிழிலும் வடமொழியிலும் இசையிலும் தேர்ந்தவர்.

சுப்பிரமணிய அய்யர்பால் பொறாமையுற்ற சிலர் இவர் ஊனும் கள்ளும் உண்டு மன மயக்கமுற்றவர் என்று பலவாறாகக் கூறி வந்தனர். அவ்வாறே காவிரிப்பூம் பட்டினத்தில் கடலாடித் திருக்கடவூர்க் கோயிலுக்கு வந்த மன்னன் சரபோஜியிடம் கூறினர். அன்று தை அமாவாசை திதி. அன்னையின் முகமதியில் ஒன்றியிருந்த பட்டரைக் கண்டு, "இன்று என்ன திதி" என்று மன்னன் வினவ, பட்டரோ "பௌர்ணமி" என்றார். 'துன்மதியினர் கூறியது மெய்' என்று கருதினான் மன்னன். "இன்று பௌர்ணமி என்று கூறிய தாங்கள், எனக்கு இன்று மாலை வானில் முழுமதியைக் காட்ட வேண்டும். இல்லாவிடில் தங்களது உயிர் தங்களிடம் இராது" என்று கூறினான்.

அதுநேரம்வரை அபிராமி அன்னையின் அருள் வெள்ளத்தில் மூழ்கியிருந்த பட்டர் உலகமுகப்பட்டார்; நிகழ்ந்ததை உணர்ந்தார். கேட்டவனோ மன்னன். அன்று திதியோ அமாவாசை. மன்னனின் வினாவிற்கு முரண்பட்ட விடை பகர்ந்தமைக்கு வருந்தினார். 'நாம் எது கூறினாலும் அன்னையின் அருள் வழியேதான் கூறியிருக்கின்றோம். எனவே, அன்னையிடத்திலேயே குறைகளை முறையிடுவோம்' என்றெண்ணியவாறு அன்னையின் மீது அந்தாதி பாடத் தொடங்கினார். "உதிக்கின்ற செங்கதிர்" என்ற பாடல் தொடங்கி



எழுபத்தி ஒன்பதாவது பாடலாகிய "விழிக்கே அருளுண்டு" என்று பாடும்பொழுது, அன்னை தன் தாடங்கத்தைக் கழற்றி வானில் வீசியதால் முழுநிலவு தோன்றியதாக அறிவது செவிவழிச் செய்தி.


அதனைக் கண்டு மன்னனும் மகிழ்ந்து அவரை வழிபட்டு அபிராமி பட்டர் எனும் பெயரை வழங்கினார். வருடம் ஒன்றிற்கு, வேலிக்கு எட்டு நாழி நெல் அவருடைய சந்ததிக்கு அளிக்கும்படி சுரோத்திரிய உரிமையை அளித்து மன்னன் சாசனம் செய்து கொடுத்தான் என்றும், திருக்கடவூர் வட்டம், ஆக்கூர் வட்டம், திருவிடைக்கழி வட்டம், நல்லாடை வட்டம், செம்பொன்பள்ளி வட்டம் என்று ஐந்து இடங்களிலும் இப்படி நெல் பெறும் உரிமை இப்பரம்பரையினருக்குக் கிடைக்குமாறு எழுதிய சாசனச் செப்புப் பட்டயம் இன்றும் அப்பரம்பரையினரிடம் உளது என்றும் கூறுவர்.


இனி, தொடர்ந்து அழகிய பாடல்கள்ான அபிராமி அந்தாதி பாடல்களையும், பொருள் விளக்கத்தையும் கண்டு மகிழ்வோம்.


அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே!
உலகேழும் பெற்ற
சீரபிராமி யந்தாதி எப்போதும் என்
சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக்
கட்டுரையே.







கொன்றை மலரையும் சண்பக மலரையும் மாலையாக அணிந்த உமாதேவியான சிவகாமியை இடப் பாகத்தில் கொண்ட தில்லைத் திருச்சபையில் எழுந்தருளி யிருக்கும் நடராஜப் பெருமானின் மைந்தனே! கார் மேகம் போன்ற நிறத்தினையுடைய கணபதியே! ஏழு உலகங்களையும் பெற்ற பெருமை வாய்ந்த அபிராமி மீது அந்தாதி பாடப் போகும் என் சிந்தையுள்ளே நின்று கருணை பொழிய வேண்டும்.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்
விழுத்துணையே. (1)

உதிக்கின்ற சூரியனைத் தனது உச்சித் திலகமாகக் கொண்டவளும், நவரத்தின சூட்சுமங்களைப் பற்றி நன்கு தேர்ந்து அறிந்தவர்கள் மதிக்கின்ற உயர்ந்த மாணிக்கக் கல்லைப் போன்ற சிவப்பு நிறத்தை உடையவளும், மாதுளம் பூப்போன்ற சரீரகாந்தியை உடையவளும், தாமரை மலரில் உறையும் மகாலட்சுமியே வணங்கிப் போற்றும் மின்னல்கொடி போன்ற

வளும், மென்மையான வாசனை பொருந்திய குங்குமக் கலவை போன்ற மேனியை உடையவளும் ஆன அபிராமியே! என்றும் என்னைக் கை விடாத உயர்ந்த துணையாக உன்னைப் பற்று கின்றேன்.

துணையும் தொழுந்தெய்வமும்
பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும்,
பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையுமென்
பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது
அறிந்தனமே. (2)

உயர்ந்த துணையாகவும் தொழும் தெய்வமாகவும் பெற்ற தாயாகவும் விளங்கும் என் அபிராமி, வேதம் எனும் மரத்தின் வேராகவும், நடுப்பாகமாகவும், கிளைகள் மற்றும் கொழுந்தாகவும் பரந்து இருக்கின்றாள். அவள் கரங்களில் ஒலி, ஸ்பரிசம் (ஊறு), ஒளி, சுவை, மணம் ஆகிய ஐந்து இந்திரியங்களைக் குறிக்கும் தாமரை, செங்கழுநீர் (ஸ்ரீலோத் பலம்) செவ்வல்லி, செவ்வாம்பல், மாம்பூ என்ற ஐந்து புஷ்பபாணங் களையும், மனத்தைக் குறிக்கும் கரும்பு வில்லையும், ஆசையைக் குறிக்கும் பாசமெனும் கயிற்றை யும், தவறான வழியில் செல்லாது மனத்தைத் தடுத்து நிறுத்தக்கூடிய அங்குசத்தையும் ஏந்தி இருக் கின்றாள். இத் திருக்கோலத்தில் அமர்ந்திருக்கும் திரிபுரசுந்தரியை நான் அறிந்துகொண்டேன்.

அறிந்தேன் எவரும் அறியா மறையை;
அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே;
திருவே! வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை
எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குற வாய
மனிதரையே. (3)

மனிதரோ, தேவரோ, முனி வரோ அல்லது மூவருமோ, யாரா லுமே அறிய முடியாத மிகச் சூட்சுமமான உன்னை நான் அறிந்து கொண்டேன். அவ்வாறு அறிந்து, தெளிந்து, உனது திரு வடியையே தஞ்சமெனக் கொண் டேன். திருமகளே! உன்னுடைய அன்பர்களின் பெருமையை எண்ணாத தீவினை நெஞ்சை உடையோர் தலைகீழாய் நரகத்தில் வீழ்கின்றனர். உன்னைத் தஞ்ச மெனக் கொண்டதால் அத்தகைய கொடிய நட்பை விடுத்து விலகி விட்டேன்.

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும்
வந்து சென்னிக்
குனிதரும் சேவடிக் கோமளமே!
கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே. (4)

உலகத்து மானிடர், மேல் உல கத்துத் தேவர்கள், இறப்பே இல்லாத முனிவரான மார்க்கண் டேயர் முதலியோர் வந்து சிரந் தாழ்த்தி வணங்கிய திருவடிகளை யுடைய மென்மையானவளே! கொன்றை மலரை அணிந்த, தனது சடையில் குளிர்ச்சி தரும் பிறைச் சந்திரனையும், பாம்பையும் கங்கையையும் அணிந்திருக்கும் புனிதரான சிவபெருமானும் நீயும் இடையறாது என் புத்தியில் வந்து பொருந்திடவேண்டும்.

பொருந்திய முப்புரை செப்புரை
செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மனோன்மணி வார்சடை யோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய
அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்
என் சென்னியதே. (5)


மூன்றாகவுள்ள அனைத்திலும் (பார்வதி, லட்சுமி, சரஸ்வதி என்ற மூன்று சக்திகள், ரிக், யஜுர், ஸாம என்ற மூன்று வேதங்கள், படைத் தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்கள், சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணங்கள் போன்றவை) பொருந்தி நிற்கும் பேரழகுடைய வளே! செப்புக் கலசங்கள் போன்ற அடர்ந்த தனங்களின் பாரத்தினால் வருந்தியதுபோல் தோன்றும் கொடி இடையினைக் கொண்ட மனோன்மணி எனும் பெயர் உடையவளே! (மனோன் மணி - அடியார்களின் மனத்தை பக்தி மார்க்கத்தில் மேல் நோக்கி எழுப்புபவள்.) நீண்ட சடையை யுடைய சிவபெருமான் அன்று உட்கொண்ட நஞ்சாகிய ஆலகால விடத்தையும் அமுதமாக மாற்றிய அம்பிகையே! தாமரை மீது அமர்ந் திருக்கும் மாசு மறுவற்ற பேரெழில் கொண்டவளே! என் இதயம் எனும் ஆகாயத்தில் உறைபவளே! உன் திருவடிகளை என் தலையில் சூட்டிக்கொள்கின்றேன்.

சென்னியது உன்பொன் திருவடித்
தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்; சிந்துர
வண்ணப் பெண்ணே
முன்னியநின்அடி யாருடன் கூடி
முறை முறையே
பன்னியது என்றும்உன்றன்
பரம ஆகம பத்ததியே (6)

எனது சென்னியால் (தலையால்) உனது திருவடிகளை வணங்குகின் றேன். எனது மனமாகிய சிந்தை யுள் என்றும் நிலைத்திருப்பது உன் மகாமந்திரமான ஸ்ரீவித்யை. சிந்துரம் போன்ற சிவந்த நிறத்தை யுடையவளே! உனது உயர்ந்த தொண்டர்களோடு கூடி உனது உயர்வான ஆகமநெறிமுறை பற்றியே மீண்டும் மீண்டும் பேசு கிறேன்.

ததியுறு மத்தில் சுழலும் என்
ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய்;
கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும்
வணங்கி யென்றும்
துதியுறு சேவடியாய்!
சிந்து ரானன சுந்தரியே! (7)

பிறப்பு-இறப்பு எனும் தயி ரிடைப்பட்டு எனது உயிர் எனும் மத்து சுழன்று, சுற்றி, அலைந்து தளர்வு அடைகின்றது. மத்தைச் சுழற்றும் கயிறாக பந்தபாசங்கள் அமைய, கயிற்றை இயக்கும் மாதாக அம்பிகையே, நீ இருக்கின் றாய். எனது உயிர் தளர்வின்றி நற்கதி அடையும்படி திருவுளம் கொள்ளவேண்டும். தாமரை யினைக் கோயிலாகவுடைய பிரம மன், சடையில் பிறைச் சந்திரனை





அணிந்த உனது அன்புக் கணவனான சிவன், திருமால் ஆகிய மூவரும் வணங்கித் துதிக்கும் சிவந்த திருவடிகளை உடையவளே! சிந்துரத் திலகம் அணிந்த திருமுகத்தினை உடைய பேரழகியே!

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்
தொடரையெல்லாம்
வந்தரி சிந்தூர வண்ணத்தினாள்
மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை
ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள்
என் கருத்தனவே (8)

பேரழகுடையவளே! என்னுடைய தந்தையான அமுதீசரின் துணைவியே! என் பாசத் தொடர்களை யெல்லாம் தானே வந்தருளித் தீர்க்கும் ஆற்றலுடைய சிவந்த நிறத்தினைக் கொண்டவளே! மகிஷாசுரன் எனும் அசுரனை வதைத்தவளே! அனைத்துயிர்களின் இதயத்தானத்தில் இருப்பவளே! நீல நிறமுடைய காளியே, என்றும் கன்னித்தன்மை மாறாதவளே! வேதப் பிரம்மனின் மண்டை ஓட்டினைத் தாங்கிய திருக்கரத்தை உடையவளே! உன் மலர்ப்பாதங்களே என் சிந்தை முழுவதும் நிறைந்த கருத்தாகும்.

கருத்தன எந்தைதன் கண்ணன
வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு
நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச்
சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே!
வந்து என் முன்நிற்கவே! (9)

என் தந்தையான சிவபெருமானின் சிந்தையில் நிலைத்த, பெருத்த அழகிய பொன்மலைகள் போன்ற தனங்கள், சீர்காழி குளக்கரையில் அழுத குழந்தையாகிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலை ஊட்டிப் பேரருள் செய்தவை. அத் தன பாரத்தின் மீது அசையும் முத்து மாலையும் சிவந்த கைகளில் அணையும் கரும்புவில் புஷ்பபாணங்கள், மயில் இறகின் அடிக்குருத்தை ஒத்த வெண்மையான பற்களுடன் கூடிய புன்முறுவலுடன் நீ என் முன் எழுந்தருள வேண்டும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்
எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே!
உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி
ஆனந்தமே. (10)

உடல் எந்த நிலையில் – நின்ற நிலையிலும், அமர்ந்த நிலையிலும், படுத்த நிலையிலும் – இருந்தாலும் என் மனம் நினைப்பது உன்னையே. நான் என்றும் வணங்குவது உன் திருவடிகளையே. எழுதப் பெறாத, எழுத்து வடிவில் இல்லாத, வேதத்தில் ஒன்றியிருக்கும் பரம்பொருளே! அருள் வடிவானவளே! உமா என்ற பெயர் கொண்டவளே! மலையரசனின் மகளாக இமயமலையில் பிறந்தவளே! என்றும் அழிவற்ற முக்தி என்ற ஆனந்தத்தின் வடிவானவளே!

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த
அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள்
மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணார விந்தம்
தவளநிறக்
கானந்தம் ஆடரங்கம் எம்பிரான்
முடிக் கண்ணியதே (11)

எனது பேரின்பமாகவும் பேரறிவாகவும் அமுதமயமாய் இருப்பவளே! எல்லா உயிர்களிடத்தும் கருவான உயிர்ச் சக்தியாக நிறைந்திருப்பவளே! காற்று, நீர், நெருப்பு, நிலம், ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களின் வடிவாக விளங்குபவளே! நான்கு வேதங்களின் எல்லையாக விளங்கும் திருவடிகளை உடையவளே! முத்துப்போன்ற வெண்மை நிறத்தினையுடைய உனது அத்திருவடிகளையே வெண்ணிறமான சுடலைக் காட்டினைத் தனது ஆடல் அரங்கமாகக் கொண்ட சிவபெருமான் தன் தலையில் சூட்டிக் கொள்கின்றார்.

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டுமணி

ரஷ்ய நாடோடிக் கதை

என்ன காரணம்?

பெத்தியா ஒரு சின்னஞ் சிறுவன். அவனுக்கு நாலு வயது ஆகிறது. ஆனால் அவன் அம்மாவைப் பொருத்தவரையில் அவன் குழந்தைதான். அவனுக்குச் சோறு ஊட்டுவாள். காலையில் அவளே அவனுக்கு உடை உடுத்தி வைப்பாள்.

ஒருநாள் பெத்தியா காலையில் எழுந்ததும் அவன் அன்னை அவனுக்கு உடை உடுத்தினாள். உடை உடுத்தியதும் அவனை நிறுத்தி வைத்தால் அவன் கீழே சரிந்தான். பல தடவை இப்படி நடந்தது. ஒவ்வொரு தடவையும் இப்படி நடக்கவே அன்னை அலறினாள். அவளுக்குப் பயம் முற்றிப்போய்க் காரியாலயத்தில் இருந்த தன் கணவனுக்குப் போன் செய்தாள்.

"சீக்கிரம் வீட்டுக்கு வாருங்கள். நம் சின்னப் பையனுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அவனால் சரியாக எழுந்து நிற்க முடியவில்லை" என்றாள். வீட்டுக்கு வந்ததும் தந்தை, "சின்னவன் எப்பொழுதும் நன்றாக நடப்பானே!" என்றார்.

தந்தை வந்தும் ஒரு தடவை அன்னை அவனைப் பாயில் நிற்க வைக்க முயன்றபோது, அவன் சரிந்துவிட்டான். தந்தை உடனே, "நான் போய் டாக்டரை வரவழைக்கிறேன். அவனுக்கு உடல் நிலை சரியில்லை!" என்றார்.

போனில் பேசி டாக்டர் வரவழைக்கப்பட்டார். கண்ணாடி அணிந்த டாக்டர் ஸ்டெதஸ்கோப்புடன் வீட்டினுள் நுழைந்தார்.

டாக்டர் பெத்தியாவைத் தட்டிக் கொடுத்தபடியே, "இதற்கு என்ன அர்த்தம்? அடிக்கடி நீ ஏன் சரிந்து விழுகிறாய்?" என்று கேட்டார்.

"என்னால் எழுந்து நிற்கமுடியவில்லை!" என்று பெத்தியா பதில் சொன்னான்.

"கால் சட்டை, சட்டைகளைக் கழற்றுங்கள், அம்மா! நான் பையனை டெஸ்ட் செய்கிறேன்!" என்றார் டாக்டர்.

பெத்தியாவின் உடைகளைக் கழற்றியதும் டாக்டர் ஸ்டெதஸ்கோப்பினால் பரிசோதித்தார்.

"சிறுவன் ஆரோக்கியமாக இருக்கிறான். ஆனால் அவன் ஏன் கீழே சரிகிறான் என்பது தெரியவில்லை. மறுபடியும் உடை உடுத்தி, நிற்க வையுங்கள்!" என்றார் டாக்டர்.



அன்னை மறுபடியும் படுவேகமாகப் பெத்தியாவுக்கு உடைகளை அணிவித்து நிற்கவைத்தபோது அவன் மறுபடியும் கீழே சரிந்தான்.

"நீங்கள் உடனே ஒரு வைத்திய நிபுணரிடம் காட்டினால் அவர் அவன் சரிவதற்கான காரணத்தைச் சொல்லலாம்!" என்று சொன்னார் டாக்டர். தந்தை ஒரு வைத்திய நிபுணரை அழைத்து வரச் சென்றார்.

அப்பொழுது பெத்தியாவின் நண்பன் கோலியா அங்கே வந்தான்.

"பெத்தியா சரிந்து விழுவதற்கான காரணம் எனக்குத் தெரியும்!" என்றான் கோலியா.

"என்ன? டாக்டரான என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தச் சிறுவனா கண்டுபிடித்து விடுவான்?" என்று நகைத்தார் டாக்டர்.

"பெத்தியாவின் உடைகளைப் பாருங்கள். ஒரு டிரவுசர் கால் காலியாக இருக்கிறது. இரண்டு கால்களும் டிரவுசரின் ஒரு பகுதியில் நுழைக்கப்பட்டுள்ளன."

எல்லாருக்கும் ஒரே வியப்பு.


பெத்தியா தலைகுனிந்தபடியே, "என் அம்மாதான் இப்படி உடுத்தி விட்டாள்!" என்றான்.

"வைத்திய நிபுணர் தேவையில்லை! இப்பொழுது பெத்தியா சரிவதற்கான உண்மையான காரணம் தெரிந்து விட்டது" என்றார் டாக்டர் அசடு வழிய.

"எனக்கு நானே உடை உடுத்திக் கொள்வேன். அதனால் இப்படி சங்கடங்கள் எதுவும் எனக்கு வருவதில்லை!" என்றான் கோலியா.

"இனிமேல் நான் அம்மாவின் உதவியை நாடமாட்டேன். நானே உடைகளை உடுத்திக் கொள்வேன்" என்றான் பெத்தியா.

அன்னை வெட்கத்தினால் தலை குனிந்தபடியே இருந்தாள். தந்தையும் நீண்ட பெருமூச்சு விட்டு ஆபீசுக்குச் சென்றார். சிறுவர்கள் பெத்தியாவும் கோலியாவும் விளையாடத் தொடங்கினார்கள்.



எண்களின் விநோதங்கள்!

விந்தையான எண் ஒன்பது. அதை எந்த எண்ணால் பெருக்கினாலும் தனி ஒன்பதாகவோ ஒன்பது ஒன்பதாகவோ வரும்.

உதாரணங்கள்

$9 \times 6 = 54; 5 + 4 = 9$

$9 \times 9 = 81; 8 + 1 = 9$

ஐஸ்கிரீம்

ரோம சாம்ராஜ்யத்தில் ஐஸ்கிரீம் பிரசித்தமாகி, மார்க்கோபோலோ ஐஸ்கிரீம் போன்ற இனிப்பைத் தன் தூர கிழக்கு நாடுகளின் விஜயத் தின் போது வாங்கி வந்துள் ளாராம்!



பால் பாயிண்ட் பேனா

முதல் எழுதக்கூடிய பால் பாயிண்ட் பேனா 1937இல் லாஸ்லோ ஜோஸப் பிரோ என்ற ஹங்கேரி நாட்டவரால் பதிவு உரிமை செய்யப் பட்டிருக்கிறது. இவர் அர்ஜென்டீனாவில் வாழ்ந்த வர். ஆனால் பால் பாயிண்ட் 1890ஆம் ஆண்டே புழக்கத்தில் இருப்பதாகத் தெரிகிறது.



உயரமான மனிதன்!

உலகின் உயரமான மனிதன் ராபர்ட் பெர்ஷில் பாட்லோ. 1946ஆம் ஆண்டு இவரை அளந்த போது 8 அடி 11.1 அங்குலம் உயரம் இருந்தார்!

பேராசைக்குத் தண்டனை



ஒரு தடவை மன்னர் கிருஷ்ணதேவராயரின் அன்னை நோய்வாய்ப்பட்டார். அப்போது மாம்பழம் சாப்பிடவேண்டும் என்று பிரியப்பட்டார். அரசர் தம் பணியாட்களை அனுப்பி, அன்னைக்கு மாம்பழங்கள் எப்படியாவது பெற்று வரக் கட்டளையிட்டார்.

துரதிர்ஷ்டவசமாக அது மாம் பழ சீசன் இல்லையாதலால் அலைந்து திரிந்து பணியாட்கள் மாம்பழங்கள் கொண்டுவந்த போது அரசரின் அன்னை இறந்துவிட்டார்.

இதனால் கிருஷ்ண தேவ ராயர் மிகவும் துக்கப்பட்டார். இந்தத் துக்கத்திலிருந்து விடு படுவதற்குத் தம் மதியூகி தாத் தாச்சார்யாவிடம் யோசனை கேட்டார். அவர், "அரசே! நீர் தங்கள் அன்னையின் திதி அன்று தங்க மாம்பழங்களைப் புரோகிதர்களுக்குக் கொடுத் தால் அவரது ஆன்மா சாந்தி அடையும்!" என்றார்.

இது, புத்திசாலி தெனாலி ராமனின் காதுக்கு எட்டியது. தாத்தாச்சாரியாரிடம், "குருஜி! நாளை என் அன்னையின் திதி தினம். சில புரோகிதர்களுடன், தாங்கள் என் வீட்டுக்கு வர வேண்டும்!" என்று கோரினான் தெனாலிராமன்.

தாத்தாச்சாரியாரும் அதற்கு இசைந்தார்.

தெனாலிராமன் வீட்டுக்குப் புரோகிதர்கள் வந்தபோது அவர்கள் மீது இரு மல்லர்கள் கொதிக்க வைத்த இரும்புக் கம்பியினால் சூடு வைத்தனர். புரோகிதர்கள் அலறித் துடித் தனர். தாத்தாச்சாரியாவுக்கும் சூடு போடப்படவே, அவர் அரசனிடம் முறையிட்டார்.

தெனாலிராமனை அரசர் விசாரித்தபோது, "என் அன்னை வாய்வு உபத்திரவத் தினால் மிகுந்த அவதிப் பட் டாள். மருத்துவர், கொதிக்கும் கம்பியினால் சூடு போட்டால் குணமாகும் என்றார். ஆனால் அதற்குள் அவள் இறந்து விடவே, அவளது நிறைவேறாத ஆசையை இவ்வாறு பூர்த்தி செய்தேன்!" என்றான்.

அரசனுக்கு அப்பொழுது தான் தம் தவறு புரிந்தது! தெனாலிராமன் தாத்தாச்சாரி யாவின் பேராசைக்குச் சரியான சூடு போட்டதாகத் தெரிந்துகொண்டார்.

டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

அறவுரையும் அறிவுரையும்

காட்டையடுத்த ஒரு சிற்றூர்; ஆங்காங்கே குன்றுகளும் காணப் பட்டன. புரட்டாசி மாதம். பக லெல்லாம் வெயில். திடீரென்று கார்மேகங்கள் தோன்றி வானில் பவனிவரும். சற்று நேரத்தில் இடி மழை பெய்யும். அதனால் தான் புரட்டாசி மாதத்தில் 'பொன் னுருகக் காயும், மண்ணுருகப் பெய்யும்' என்னும் பழமொழியும் வழக்கில் வந்தது.

ஒருநாள் அந்தப் பக்கமாக அவ்வையார் மெல்லச் சென்று கொண்டிருக்கிறார். ஏதோ பறவையின் குரல் கேட்டது. அப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். ஒரு மயில், தன் வண்ணத் தோகையை விரித்து ஆடிக்கொண் டிருந்தது. அத்தோகையின் எழிலையும், பளபளப்பையும், அம் மயில் உல்லாசமாக அசைந்து ஆடும் பாங்கையும், இமை கொட் டாமல் கண்டுகளித்துக் கொண் டிருந்தார்.

எதிரில், ஒரு சிறு குடிசையி லிருந்து பறவை ஒன்று துள்ளிக் கொண்டு ஓடிவருவதைக் கண் டார். அடர்ந்து வளர்ந்த வெண்மைச் சிறகுகள். அது சற்று நேரத்தில் கொக்கரித்து, பனை யோலை விசிறி போன்ற தன் வெள்ளைச் சிறகை அகல விரித்து நடை போட்டது. அவ்வையாரின் பார்வை அப்பறவையின் பக்கம் திரும்பியது. அது ஒரு வான் கோழி. அதனைக் கண்டு அவர் மெல்லச் சிரித்தார்.

"அந்த அழகிய மயில், தன் வண்ணத் தோகையை விரித்துச் சிங்காரமாக ஆடுவதைக் கண்டு, இந்த அற்ப வான்கோழியும், தானும் மயிலாக நினைத்துக் கொண்டு ஆடுகிறது போலும்!" என எண்ணமிட்டது அவர் ஒப் புவமை காணும் உள்ளம்!

"இவை ஐயறிவுடைய அற்பப் பறவைகள். ஒன்றைப் பார்த்து மற்றொன்று நடிப்பதிலோ, செயல்பட முயல்வதிலோ ஏதும் வியப்பில்லை. ஆனால், ஆறறிவு படைத்த மனிதர்களும் இப்படிச் செய்கிறார்களே! முற்றும் கற் றறிந்த மூதறிஞர்கள், ஆழ்ந்த பொருளும், அழகிய உவமை களும், அரிய கற்பனைகளும், நெஞ்சைச் சிந்தனையில் ஆழ்த்தும் கருத்துகளும் பொதிந்த செஞ் சொற் கவிதைகளால் வள்ளல் களையும், மன்னர்களையும், செல்வச் சீலர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசுகள் பல பெறு கிறார்கள். அவர்களைத் தங்கள் இருக்கைகளினின்றும் எழுந்து நின்று இருகைகூப்பி வணங்கி, வர வேற்றுச் சிறப்பாக உபசரிக்கி றார்கள். அவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; உயர்ந்த மதிப்பு; மிகுந்த மரியாதை!

"இவர்களைப் பார்த்து, முறை யான நூல்களை முழுமையாய்க் கற்காத சில அரை குடங்கள், தாமும் கவிஞர் என்றும், புலவர் என்றும், அறிஞர் என்றும் தாமாகவே பட்டம் சூட்டிப் பறை சாற்றிக் கொள்கிறார்கள். பொ ஏற்ற வெற்றுச் சொல்லடுக் களைத் தொகுத்துக் கவிதை யென்று பாடிப் பெருமைப்பட்டு கொள்கிறார்கள். அவற்றை ரசிக் வும், அவர்களைப் பாராட்டிப் பு ழவும் சில கும்பல்களும் உள்ளன அவர்கள் கூற்று, கற்றோர் சபை யில் எடுபடுமா? அவர்களுடை வெற்று ஆரவாரங்களும், விள பரங்களும் காலத்தை வென்று நிற்குமா? நீர்மேற் குமிழிபோல அல்லவா பூரித்துப் பொசுக்கென பொரிந்து போய்விடும்?" என்று எண்ணிய அக்கவிஞர் பெருமாட்டி யின் அந்த எண்ணம் ஓர் அழகிய பாட்டாய் மலர்கிறது. அ பாடலைச் சிறுவயதில் நம்மி பலரும் படித்திருப்போம். இதே அதனை மீண்டும் நினை கூர்வோம் :-



"கான மயிலாடக் கண்டிருந்த
வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் –
தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்து ஆடினாற்
போலுமே
கல்லாதான் கற்ற கவி" –

(மூதுரை : 14

பின்னர், அவ்வையார் அ சிற்றூரிலிருந்து மேலும் நடந்து அவ்வூர் எல்லையருகில் சென்று கொண்டிருந்தபோது, ஓரிடத்தில் மக்கள் கூட்டமாகக் கூடிப் பயங் கரமான, ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு, கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருப்பதை அறிந்தார் அங்குச் சென்றார்.

அக்கூட்டத்தினர் அவ்வை யாரைக் கண்டதும் மரியாதை

அவ்வை தமிழ்

யோடு அவரை நோக்கித் துக்கம் தோய்ந்த குரலில், "பாருங்கள் அம்மா, இந்தப் பரிதாபத்தை!" என்று கூறிக் கீழே உறுப்புகள் எல்லாம் சிதறுண்டு எலும்பும் தோலுமாய்க் கிடந்த ஒரு மனித ரின் உடலைக் காட்டினார்கள். உடலின் தசைப்பகுதிகள் எல்லாம் பறிக்கப்பட்டு உதிரம் கசிந்த நிலையில் கிடந்த அந்தக் கோரக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்!

"அந்தோ! இதென்ன கொடுமை! இது எப்படி நடந்தது?" என்று வேதனை மீதூரப் படபடப் போடு கேட்டார். அவர்களுள் ஒருவர், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தழுதழுத்த குரலில்,

"அம்மா! இவர் எங்கள் ஊர் மருத்துவர். பச்சிலை மூலிகை யைக் கொண்டே எந்த நோயையும் குணப்படுத்தி விடுவார். நூற்றுக் கணக்கான நோயாளிகள் சாவக் கிடந்தவர்கள்கூட இவரால் குணப் படுத்தப்பட்டுள்ளனர். மேலும் இவர் ஒரு விஷக்கடி வைத்தியர். எங்கள் ஊர்க் காட்டுப் பகுதி யாகையால் நாள்தோறும் பலர் விஷக்கடியால் மயக்க நிலையில் வருவார்கள். கடுமையான விஷங் கொண்ட பாம்புகள், நட்டுவாக் காலிகள், செய்யான், பூரான்கள், சலமண்டலிகள் முதலிய நச்சுப் பூச்சிகள் கடித்துவிட்டால் கொஞ் சமும் அஞ்ச வேண்டியதில்லை. இவர் பச்சிலை மூலிகைகளைக் கொடுத்து விரைவில் குணப் படுத்தி விடுவார்.

"எங்கள் ஊரையடுத்துள்ள காட்டுப்பகுதியில், வேங்கைப் புலி களின் நடமாட்டம் உண்டு. ஆனால் அவை பெரும்பாலும் ஊருக்குள் வருவதில்லை.

"இன்று காலையில் காட்டை யடுத்துள்ள எங்கள் ஊர் எல்லை யருகில் ஒரு வேங்கைப் புலி படுத்துக்கிடந்தது. ஊருக்குள் வந்துவிடுமோ என்று நாங்கள் பயந்து கத்திகளும், கம்புகளும் எடுத்துக்கொண்டு அதனை அடித்து விரட்டிக் கொல்ல அங்கு ஓடினோம். ஆனால், அது உணர்ச்சியற்று மயங்கிப் படுத்துக் கிடந்தது. ஓரிருமுறை தலையைத் தூக்கித் தூக்கி நிமிர முடியாமல் மண்ணில் சாய்ந்து விட்டது. அப் போது இந்த விஷக்கடி வைத்திய ரும் இங்கு வந்தார். அதன் அருகில் சென்று பார்த்தார். அதன் காலில இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. "இதை ஏதோ விஷ நாகம் கடித்து விட்டிருக் கிறது. விஷம் தலைக்கேறி உயி ருக்குப் போராடிக் கொண்டிருக் கிறது. ஐயோ பாவம்!" என்று கூறி, அங்கிருந்த புதர்கள் பக்க மாகச் சென்றார். ஏதோ பச்சிலை யைக் கொண்டு வந்து கசக்கிச் சாற்றைப் பிழிந்து அப்புலியின் வாயில் விட்டார். சிறிது நேரத்தில் அப்புலி உடலை இலேசாக அசைத்தது. கண்ணைத் திறந்து பார்த்தது. எழுந்து நிற்க முயன்று கொண்டிருந்தது. நாங்கள் பயந்து ஓடிவந்து விட்டோம். ஆனால், இந்த மருத்துவர் மட்டும் அங்கிருந்து அசையவில்லை. பக்கத்திலேயே இருந்தார்.



சிறிது நேரத்தில் அந்தப்புலி மயக்கம் தெளிந்து நிற்பதைச் சற்றுத் தொலைவிலிருந்து நாங்கள் பார்த்துக் கொண்டிருந் தோம். நாங்கள் அவரை ஓடிவந்து விடுமாறு கூச்சலிட்டு அழைத் தோம். ஆனால் அந்த மருத்துவர் கொஞ்சமும் அசையவில்லை. தன் உயிரைக் காப்பாற்றிய புலி தம்மை ஒன்றும் செய்யாது என்று நினைத்தார் போலும்! ஆனால் சிறிது நேரத்தில் அந்தப் புலி அவர்மேல் பாய்வதைப் பார்த் தோம். அவர் 'ஐயோ! ஐயோ!' என்று கூக்குரலிட்டார். நாங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அப்புலியைத் தாக்க அங்கே ஓடினோம். அதற்குள் அப்புலி இந்த மருத்துவர் கழுத்தினைக் கடித்துக் கொன்று தசைகளைப்

பிய்த்துச் சிதைத்துத் தின்று விட்டது. நாங்கள் ஓடிவருவதைக் கண்டதும் காட்டுக்குள் விரைந்து ஓடி ஒளிந்து கொண்டது" என்றார்.

அந்தச் செய்தியைக் கேட்ட அவ்வையார், "பகுத்தறிவில்லாத மனிதன்! கொடிய விலங்குக்குப் போய் வைத்தியம் செய்யலாமா? தன் உயிரைக் காப்பாற்றியவர் என்று அந்தக் கொடிய விலங்கு கருணை காட்டுமா என்ன?" என்று கூறிக்கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்.

சிறிது தூரம் சென்ற பிறகு, அங்கே ஓர் ஆறு ஓடியதைக் கண்டார். சலசலவென்று ஓடும் நீரோட்டத்தையும், ஒரே சீரான அதன் போக்கையும், அங்கே பள்ளமும் மேடும் மாறி மாறித் தோன்றுவதையும் கண்டார். "செல்வத்தின் நிலையும் இப்படித்தான்; இன்று ஒருவரிடத்திலே இருக்கும்; மறுநாள் அவரை ஓட்டாண்டியாக்கிவிட்டு மற்றொருவர் கைக்கு மாறிவிடும். அதனால்தானே அதற்குச் 'செல்வம்' என்று அறிஞர்கள் பெயரிட்டார்கள்".

பொருள் உள்ளவர்களைப் பார்த்து, 'பெருமைப் படாதீர்கள். உங்களை விட்டு எந்தக் கணத்திலும் சென்று விடுவோம்' (செல்வோம்) என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது, செல்வம்! அதனால் தம்மிடத்தில் செல்வம் வந்தால், பாடுபட்டுத் தேடிய அப்பணத்தைப் புதைத்து வைத்து, உடலினின்று உயிர் பிரிந்தபின், வேறு யாரையோ அனுபவிக்க விடும் பாவிகளாக இராமல், பசித்தவர்களுக்கு வயிறாரச் சோறிடவேண்டும்; பருகத் தண்ணீர் தரவேண்டும். இந்தத் தருமம்தான் 'தலைகாக்கும்' என்னும் கருத்துப் பொதிந்த,

"ஆறிடும் மேடும் மடுவும் போல்ஆம்
செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் –
சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து"

என்னும் பாட்டையும்,

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து
வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் –
கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயினபின் யாரே
அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

என்னும் பாட்டையும் அவ்வையார் மெல்லப் பாடிக் கொண்டிருந்தார்.

அந்த ஆற்றில் தாம் முதலில் கண்டபோது நீர் குறைவாக இருந்தது. இடையிடையே கற்பாறைகள் சில காணப்பட்டன. வெள்ளம் பெருகியதும் அப்பாறைகள் நீரில் மூழ்கி மறைந்து விட்டன.

சிறிது நேரத்தில் அந்த ஆற்றில், மரக்கலம் (படகு) ஒன்று பாய்விரித்துக் காற்றின் வேகத்தால் அந்தப் படகு நீரைக் கிழித்துக் கொண்டு விரைவாக ஓடி



வந்து கொண்டிருந்தது. அதன் ஒய்யார ஓட்டத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார், அவ்வையார்.- சற்று நேரத்தில் குண்டு வெடிப்பது போன்ற சத்தம் அந்தப் படகின் அருகில் கேட்டது. அடுத்த கணத்தில் அப் படகு தூள் தூளாகி நொறுங்கி நீரில் மூழ்கி அழிந்துவிட்டது. இந் நிகழ்ச்சியைக் கண்டு அவர் திடுக் கிட்டார்.

அப்படகு ஓடிவரும்போது நீரில் மூழ்கியிருந்த பாறை ஒன் றின் மேல் மோதியிருக்கிறது. படகோட்டி அதனைக் கவனிக் காமல் ஓட்டியிருக்கிறான். அது உடைந்து சிதறிவிட்டது.

பின்னர், அவ்வையார் ஆற்றங் கரையின் ஒரு மரத்தடியில் அமர்ந்து முன்னர் தாம் கண்ட காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் சிந்தித்துப் பார்க்கிறார். மயங்கிக் கிடந்த வேங்கைப்புலியைக் காப் பாற்றி உயிரிழந்த விஷ வைத் தியன், பாறையில் மோதி உடைந்து அழிந்து போன படகு - இவ்விரு நிகழ்ச்சிகளும் அவர் மனக்கண்முன் தோன்றுகின்றன. மெல்லப் பேசிக் கொள்கிறார்.

"இவை ஓர் உண்மையை உணர்த்துகின்றன. நன்றியறிவு இல்லாத அற்ப குணமுடைய கயவர்களுக்கு உபகாரம் செய் தால், செய்தவர்களுக்குத் தீமை யும், கேடும்தான் விளையும் அவர்களை நெருங்குவதே மிகுந்த ஆபத்தானது".

"இந்த அறிவுரை மக்கள் மனத்தில் ஆழப் பதிய வேண்டும். அக்கருத்தினை நன்கு நினைவு வைத்துக் கொள்ளக் கவிதை வடிவில் இருத்தலே தக்கது" எனக் கூறி, பாடிய கவிதைதான் :-


"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த
விடகாரி
ஆங்கதனுக்(கு) ஆகாரம்
ஆனாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்"

மூதுரை – 15.

(விடகாரி - விஷநோய் தீர்க்கும் வைத்தியர்; பாங்கறியாப் புல் லறிவாளர் - நன்றியுணர்வில்லாத அற்பர் - கீழோர்; கல் - கற்பாறை; கலம் - படகு.

தத்துவம் வேறு: தலைப்பும் வேறு

குலோத்துங்கன்



கதிரவன் எழிலைப் பாடும்
கவிதைகள் கோடி; வட்ட
மதியினைப் புகழ்ந்து பேசும்
வரிகளுக் களவே யில்லை.

காதலில் உருவம் பெற்ற
காவியம் பலவாம். வீரர்
சாதனை கவிதைக் கீந்த
தலைப்புகள் கோடி, கோடி.

கண்ணையும், எண்ணு கின்ற
கருத்தையும் கவர்ந்து நிற்கும
வண்ணமும் வளமும் கொண்ட
மலரினம், கவிஞர் நெஞ்சை

ஆள்வதும் இயல்பே; வையம்
அழகினுக் கடிமை. இந்தக்
கோள்தரும் அநுபவங்கள்
குறைவில. உணர்வு பொங்கப்

பாடுதற் கெனது நெஞ்சைப்
பறித்தன கோடி யேனும்,
நாடுமென் கவிதை உள்ளம்
யாவினும் உயர்ந்த தென்ன

நித்தமும் எண்ணு கின்ற,
நிறைவொடு தேடு கின்ற
தத்துவம் வேறு; தேறும்
தலைப்புகள் வேறு; வேறு.

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

11

தேர்ந்த மந்திரவாதியொருவன் காற்றில் வீசிய கறுப்புக் கோலுக்குக் கட்டுப்பட்டாற் போல வாயடைத்துப் போனார்கள், அந்த வினிதாவும், பாண்டியனும்.

அவர்களின் திணறலைக் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்த அனாமிகா திடுதிப் பென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

"எனக்கெப்படி இவன் பெயர் தெரியும்னு பார்க்கிறாயா பெண்ணே? அறுபத்தெட்டி லேர்ந்து எண்பது வரை சிறைவாசம். செய்த தவறு, கற்பழிப்பு, நகைக் கொள்ளை, உயிர் போகுமளவு ஓர் ஆளை அடித்துக் கொன்றது..."

பாண்டி அதிர்ந்தான். நகர முயன்றபோது -

"இரு. உன் கதையைப் பத்திரிகையிலே படிச்சதைச் சொன்னேன். எனக்குத் தெரியும், இப்ப நீ மாறியிருப்பே. தவிர, என் மகளோட அவள் காவலுக்கு வந்திருக்கிற நீயும் எனக்கு விருந்தாளிதான். பயப்படாம தைரியமா இரு. தங்கியிரு".

"ஆனால் மம்மி!... நான் ஆச்சர்யப் படறேன்".

"ஏன்?"

"இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?"

"எது? இவன் ஜெயில் வாசம் பற்றியா? அதான் சொன்னேனே பத்திரிகையிலே இவன் கேஸ் ஹிஸ்டரியைப் படிச்சேன்னு".

"நான் அதைக் கேட்கலை. இவன் இங்கே வந்திருக்கிற விஷயம் உனக்கெப்படித் தெரியும்?"

"எப்படியோ தெரியும்".

"அதுதான் எப்படித் தெரியும்னு கேட் கிறேன்".

"ஸ்டேட்ஸிலிருக்கிற உங்க அண்ணன், இங்கே மதுரையில இருக்கிற சிநேகிதன் மூலமா தகவல் கொடுத்தான்".

பார்த்தாள்.

"நம்ப முடியவில்லை இல்லையா? பரவா யில்லை. இந்நேரம் பம்பாய் விமான தளத்திலே இறங்கி இருப்பான். அங்கிருந்து திருவனந்த புரம் வந்து காரில் ஏறி இங்கே வந்துடுவான். அவனையே கேட்டுகிட்டு அப்புறமாக நம்பு".

"அவன் ஏன் இந்த நேரத்துக்கு இங்கே வர்றான்? அதுவும் என்கிட்டேகூட ஒரு வார்த்தை சொல்லாமல்?"

"உன்னை மாதிரியே சொத்து கேட்டு வர லாம்; ஆனால் ஒண்ணு, என்னன்னு தான் கேளேன்"

"என்ன?"

"அவன் உன்னைவிட புத்திசாலி. தன்னந் தனியாக வாழ்ந்து உலர்ந்து போன என் இதயத்திலே தென்றலாக வருட தன்னோட இரண்டு குழந்தைகளோட வர்றான்".

"அவன் மனைவி?"

"அவளும்தான் வருவாள். அவனோட அமெ ரிக்கப் படிப்பு, மனோதத்துவம் சொல்லிக் கொடுத்திருக்கும் போலிருக்கு. நாடி தளர்ந்த காலத்தில் பேரப்பிள்ளைகள் பேரில ஆசை அதிகம் வருவது இயல்பு. தவிர, வாரிசு சட்டப்படி தனியான உனக்குப் போகிறதைவிட சொத்துகள் அவன் வாரிசுக்குப் போகிற வாய்ப்புகள் அதிகம். அந்த ஆசையாகவும் இருக்கலாம்".

வினிதாவின் முகம் கோபத்தால் சிவந்து போயிற்று.

"நீ வா பாண்டி" என்றவள் அந்தப் பாண்டியை இழுத்துக்கொண்டு வெளியேறிப் போனாள்.

"கெடுதல் செய்யணும். உடனடியாக அவங்களுக்கு ஏதாவது கெடுதல் செய்தே ஆகணும்".

"நீங்க கவலையே படாதீங்கம்மா. ராவோட ராவா அந்த ராங்கிக்காரியை இருக்கிற இடம் தெரியாமல் பண்ணிடறேன்".

"இல்லை. அதுக்கு முன்னாலே என்கிட்டே ஓர் ஆயுதம் இருக்கு".

கைப் பையில் இருந்த பழுப்பேறிப்போன கவரை எடுத்துக் காட்டினாள்.

"இதை வைச்சே அவளை நடத்தை கெட்டவள்னு என்னால் நிரூபிக்க முடியும். அண்ணன் வரட்டும். வச்சுக்கிறேன் கச்சேரியை".

திருவனந்தபுரம் விமான தளத்துக்கு வெளியே காத்திருந்த சிவராமன் அவர்களைக் கண்டதும் நிமிர்ந்தான். கையசைத்தான்.

டாக்டர் மகேஷும் பதிலுக்குக் கையசைத்து உற்சாகம் காட்ட -

அவனைப் பின் தொடர்ந்து வந்த அவனது அமெரிக்க மனைவி பழுப்பு நிறக் கண்களுடன் சிரித்தாள். புடைவைக்குப் புதியவள் என்பது அவள் கவனமாக நடப்பதிலிருந்தே தெரிந்தது. அவளோடு ஒட்டி உரசியபடி இரண்டு மனிதப் பிஞ்சுகள். செலுலாய்ட் பொம்மைகள் போல பளீரென்று நுனி நாக்கில் நிறைய ஆங்கிலம் பேசினர். அடிக்கடி 'நோ! 'யா! யா!' என்றனர் அமெரிக்க நெடியுடன்.

"ஹாய் அங்கிள்".

"நோ. ஸே, மாமா!"

"மம்மா! ஓய் மம்மா. மை மம்மா ஈஸ் ஹியர்".

"சரி, விடப்பா" சிவராமன் சொன்னான், "அவங்க பாஷையிலேயே பேசட்டும்".

"எப்படியாவது கொஞ்சம் தமிழில் தயார்படுத்த ஆசை!"

"ஏன்?"

"என் அம்மாவை பாட்டிமான்னு கூப்பிட்டா சந்தோஷப்படுவாங்க. அதுக்குச் சொன்னேன்".

"காரில் ஊர் போய்ச் சேருகிறதுக்குள்ளே சொல்ல வைச்சுடலாம்".

"டோண்ட் வொர்ரி டியர். தயார்ப்படுத்தித் தான் வந்திருக்கேன். ஏய் ஜெர்ரி டெல் மீ. ஹூம் டு யூ வாண்ட் டு ஸி?"

"பாட்டீம்மா" என்றான் சிறுவன் பளிச் சென்று. "எப்போ பாத்தீயைப் பார்க்கப் போறோம் மம்மீ?"

"காலையில வருகிறதாகச் சொன்னேன். ஆனால் இன்னைக்கு ராத்திரியே போகிறது நலம்னு நினைக்கிறேன்".

"ஏன் சிவராமா?"

"எந்த எச்சரிக்கையை நீ சொல்லச் சொன்னாயோ அது ஏற்கெனவே அங்கே வந்தாச்சு".

"என்ன சொல்றே?"

"உன் தங்கை வினிதா காலையிலேயே வந்து சேர்ந்துட்டதாகச் சொன்னாங்க".

மகேஷ் முகத்தில் கலவரம் படர்ந்தது. "சரி, இப்ப என்ன பிளான்?"

"முதல்லே நல்ல ஹோட்டலாப் பார்த்து ரூம் எடுத்து, குளிச்சு ஓய்வெடுத்துகிட்டு மதியம் கிளம்பி ராத்திரிக்குப் போயிடலாம்".

"நோ. உடனே போகிறோம். உடனே அம்மாவைப் பார்த்தே ஆகணும். கார்?"

"கொண்டு வந்திருக்கேன்".

"பெட்ரோல்?"

"டேங்க் ஃபுல்".

"அப்படியானால் நேராக ரிஸோர்ட்டுக்குப் போ. ஓய்வு எல்லாம் அங்கே போய் எடுத்துக்கலாம்".

கார் சரேலென்று பாய்ந்தது.

"வா" என்ற அனாமிகா இனியாவை அழைத்துக்கொண்டு வெளியேறினாள். "அப்பா காத்திருப்பார்" என்றவாறு இருவருமாக வலப் பக்கமாகத் திரும்பி நடந்து போக -

இடப் பக்கத்தில் மறைவில் இருந்து பார்த்த வினிதா கொதித்துப் போனாள். "பார்த்தியா பாண்டி! பெத்த மகள் மேலே இல்லாத பாசம் வந்தவள்கிட்டே இருக்கிறதை?"

"இப்ப மட்டும் என்ன? ஒரு வார்த்தை சொல்லுங்க. அழகு காட்டித் திரியற முகத்தை ஆசிடால குளிப்பாட்டி விடறேன்".

"உளறாதே. இவ்வளவு தூரம் நான் பேசிட்டப்புறம் அவங்களுக்கு ஏதும் ஆனால் என் பேர்லதான் சந்தேகம் வரும். உன்னை வேறு அவர்களுக்கு அடையாளம் தெரியும்".

"அதெல்லாம் மாட்டிக்கிற மாதிரியா செய்வேன்? ஆண்டவனே வந்தாலும் நம்ம ரெண்டு பேர் மேலும் சந்தேகம் வராத அளவுக்குச் செய்ய முடியும். ஏன்? இங்கே குடி இருக்கிறது நீங்களும் நானும் மட்டும்தானா? சினிமாக்காரங்க இருக்காங்க. அது யாரோ ஒருத்தர் ஒருக்கார்".

"அவர் யாரோ ஒருத்தரில்லை. அவர்தான் இவங்க மாஜி காதலர். பெயர் சஞ்சீவி".



"அப்புறமென்ன? ரொம்ப சுலபம். நான் செய்யறதைச் செய்துட்டு போலீஸ் கேட்டாப் பழைய பகையை நினைச்சு அந்த ஆள்தான் பணம் கொடுத்துச் செய்யச் சொன்னான்னு சொல்லிடுவேன். உங்களுக்கொரு சட்டம் தெரியுமா?"

"என்ன?"

"தவறு செய்தவனைவிடத் தவறு செய்யத் தூண்டியவனுக்குத்தான் தண்டனை அதிகம். தெரியுமில்லையா?"

"அப்பச் செய். ஜெயிலுக்குப் போகிறதைப் பத்திக் கவலைப் படாதே. உன் குடும்பத்துக்கு ஒரு குறையும் ஏற்படாமல் நான் பார்த்துக் கறேன். தைரியமாயிரு. ஆனால் ஒரு சின்ன சிக்கல்".

"என்ன?"

"அம்மாவுக்கு என்னைத் தெரியும். உன்னையும் தெரியும். அந்தப் பழைய காதலனையும் தெரியும். வாக்குமூலம் கொடுத்துட்டா உன்னோட சேர்ந்து நானும் மாட்டிப்பேனே".

"அதுக்கு ஏன் கவலைப்படறீங்க?. வாக்கு மூலம் கொடுத்தால்தானே?"

"என்ன சொல்றே?"

"ஆசிட் குளியல் எல்லாம் வேணாம். பங்களாவோட சேர்த்து பரலோகம் அனுப்பிட்டா யார் சாட்சி சொல்லுவாங்க? பங்களாவில டைம் பாம் வைச்சதே அந்த மாஜி காதலன்னு நீங்க நிருபிச்சிட்டா தீர்ந்தது விஷயம்".

"அதுக்கெல்லாம் ஆள் கிடைக்குமா?"

"எல்லாம் கிடைக்கும். பணம் கொடுத்தால் எதுக்கும் ஆள் கிடைக்கும். ஒண்ணு செய்யுங்க. இருபது. இருபத்தைஞ்சாயிரம் தரேன்னாங்களே, அதை வாங்கி என்கிட்டே கொடுங்க. நீங்க கிளம்பி உடனடியா ஊருக்குப் போயிடுங்க. சம்பவம் நடக்கிறச்ச நீங்க இங்கே இருக்கவே வேணாம்".

"சரி".

அதிசயமாகப் பார்த்தார் மானேஜர். "அதென்ன அது? அப்ப வேணாம்னு சொன்ன, அதே பணத்தை இப்ப கேட்கறீங்க,"

"பெத்த தாய்கிட்டே மல்லுக்கு நிக்கிறது எனக்கே கேவலமா இருக்கு. அதான் கிடைச்ச வரை லாபம்னு வாங்கிட்டு உடனே கிளம்பிப் போயிடப் போறேன்".

"இருங்க" என்ற மானேஜர் பதினாறாம் நம்பர் காட்டேஜை முயன்றார். பேசினார் "என்ன செய்யட்டும் மேடம்?"

"கொடுத்து அனுப்பிடுங்க" என்று அனாமிகா அனுமதிக்க –

பணத்தை எண்ணிக் கொடுத்தார். "எண்ணிக்குங்க".

வெளியேறி வந்ததும் அந்தப் பாண்டி சொன்னான்: "சரியாக ஆறு மணிக்குக் கிளம்பிப் போயிடுங்க. அதுக்குள்ளே நான் வந்துடுவேன். ஆனா உங்க கண்ணுக்குப் படமாட்டேன். ராத்திரி சரியாக ஏழரை மணிக்கு டைம் பாம் வெடிக்கும். சக்தியுள்ள டைம் பாம். கட்டடம் தூள் தூளாகிப் பறக்கும். அந்த அம்மா. வேலைக்காரி. மானேஜர் யாரும் அதிலேர்ந்து தப்ப முடியாது".

"செய்" என்றாள் வெறியுடன். "உடனே செய். எங்கே போய் வாங்கி வருவே?"

"அதைக் கேட்காதீங்க. ரகசியம். சொல்லக் கூடாது. தவிர, இது என்ன இடம்? இந்தியாவின் தெற்குக் கோடிக் கடற்கரை. தூத்துக்குடி சந்தையில் துட்டுக்கொரு பொண்டாட்டியே கிடைக்குமாம். இது என்ன பிரமாதம்? நீங்க கிளம்பற வழியைப் பாருங்க".

"அப்பா! இவங்களுக்கு ஒரு பிரச்னை என்றால் நீங்கள் தலையிட மாட்டீங்களா?" என்ற இனியாவை செல்லமாகக் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார் சஞ்சீவி.

"அவசியம்னு தெரிய வந்தால் கண்டிப்பாக உதவுவேன்".

"ஒரு சின்ன சட்டச் சிக்கல். அதைத் தீர்த்து வைக்க என்னை நீங்கள் அனுமதிக்கணும்".

"ப்பூ... இவ்வளவுதானா? தாராளமாகச் செய்யேன்".

"இந்த நாற்பது ஏக்கரா நிலமும் உங்க பரம்பரைச் சொத்து. இதை விற்று பணத்தைக் கொடுன்னு உங்க வாரிசுப் பெண் கேட்கிறது. சரிதானா அம்மா?"

"ஆமாம்".

"சாதாரணம். பரம்பரைச் சொத்துகளை அனுபவிக்கத்தான் முடியுமே தவிர, விக்கிறதுக்கு உரிமையில்லை. உங்களுக்கே இல்லாத உரிமை உங்க அடுத்த வாரிசுக்கு எப்படி வரும்?"

"விற்கிறதுக்கு உரிமையில்லை. ஆனால் என் பெயராலே டிரஸ்ட் ஆரம்பிச்சு நல்ல காரியங்களைச் செய்ய அனுமதியுண்டு. இல்லையா?"

"ரொம்பவும் நல்லது. உபரி நிலம்னு சொல்லி அரசாங்கம்கூட கையகப்படுத்த முடியாது.

டிரஸ்ட் ஆரம்பிச்சு என்ன செய்யப் போறீங்க? அநாதை விடுதி?"

சற்று நேர யோசனைக்குப் பிறகு - "வேண்டாம். அநாதை, தனிமை எல்லாம் எனக்கு வெறுத்துப் போச்சு. அலுத்தும் போச்சு".

"அப்ப பேசாமல் ஒரு பள்ளிக்கூடம், கல்லூரின்னு ஆரம்பிங்க. உங்களைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்துகிட்டே இருக்கும். இப்ப ஹோட்டல்ல எத்தனையோ நாளுக்கொரு தரம் வருகிற டூரிஸ்ட்களை நம்பியிருக்கிறதை விட தினம் தினம் குழந்தைகளோட - மாணவர்களோட பல விதமான டீச்சர்களோட பழகிப் பழகி உங்க தனிமை பறந்து போயிடும்".

யோசனையில் ஆழ்ந்தாள் அனாமிகா. "இது ஏற்கெனவே தீர்மானிச்சு, கிடப்பில் போட்ட திட்டம். இப்ப துணிச்சல் வந்திருக்கு. உடனே ஆரம்பிக்க வேண்டியதுதான். நாளைக்கு நல்ல நாள் இல்லையா? விடிஞ்சதுமே பூமி பூஜை போட்டு ஆரம்பிச்சிடுவோம். அப்புறமா யாருமே பங்கு கேட்க முடியாது. இப்பவே நாகர் கோயில்லேர்ந்து இன்ஜினீயரை வரவழைக் கிறேன். அப்ரூவ்ட் பிளான் வேற இருக்கு. பிரச்னையே இல்லை. சந்தோஷமாயிருக்கு..." பூரித்தாள். "எனக்குச் சந்தோஷமாக இருக்கு. நான் தனி மரமில்லை. என்னைச் சுற்றித் தோப்பு வரப் போகுது".

தொலைபேசி ஒலிக்கவே எடுத்த இனியா, "இருக்காங்க" என்று அனாமிகாவிடம் நீட்டி னாள். மானேஜர் பேசினார்.

"அம்மா! அமெரிக்காவில் இருந்து உங்க மகன் வந்துட்டார்".

"மகேஷா?"

"ஆமாம். குடும்பத்தோட வந்திருக்கார். அவரையும் முந்திகிட்டு குழந்தைகள் இரண் டும் 'பாத்தீ எங்கே?' என்று கேட்கிறார்கள். மகனுக்காக வருகிறீர்களோ... இல்லையோ, உங்க பேரக் குழந்தைகளுக்காக அவசியம் உடனே வந்தாகணும். வாங்க".

"இதோ வரேன்" பூரிப்புடன் சொன்னாள், "என் மகன், மருமகள், பேரன், பேத்தி எல்லாம் வந்திருக்காங்களாம்".

கிளம்பியவளை நிறுத்தினார் சஞ்சீவி. "அதென்ன, உன் மகனையும் மருமகளையும் பேரன்களையும் நாங்க பார்க்க வேண்டாமா?"

"ஷ்யூர். அவசியம். வாங்க" கும்பலாகக் கிளம்பி வந்தார்கள். பாதி வழியிலேயே நின்று விட்டாள், அனாமிகா.

தொலைவிலிருந்தே அந்த மகேஷ் அடை யாளம் காட்ட, மூன்றும் ஐந்தும் வயதுள்ள

பிஞ்சு உருவங்கள் கைகளை உயர்த்தி 'பாத்தீ...' என்ற உற்சாகக் கூவலுடன் ஓடிவந்து அவள் விரித்த கைகளுக்குள் அடங்கி பொச் பொச் சென்று முத்தமிட்டனர். இவளும் பதிலுக்கு முத்தம் பொதித்துப் பூரித்துப் போனாள்.

இருவரையும் ஏந்திக் கொண்டு நடந்தாள்.

"மானேஜர்! வழக்கம் போல லெட்ஜரைத் திருப்பி அட்வான்ஸுக்காகக் கையை நீட்டிடாதீங்க. இவன் என் மகன். சின்ன வயசில் எப்படியோ? இப்ப பொறுப்புள்ள குடும்பஸ்தனாகத் திரும்பி வந்திருக்கான். அதுவே சந்தோஷம். குழந்தைகள் - என்னோட பேரக் குழந்தைகள், எவ்வளவு சுவாரஸ்யமாக ஒட்டுறாங்க! மகேஷ்! சொர்க்கத்தைக் காட்டி மறைக்கிற மாதிரி நாலு நாளில் கிளம்பிப் போயிடாதே. என் பேரக் குழந்தைகளோட நான் ஆசை தீரக் கொஞ்சணும்".

"கொஞ்சு. எத்தனை நாளானாலும் தங்கை விஷயத்திலே ஒரு முடிவு காணாமல் போகப் போகிறதில்லை. வந்திருக்கிறாளாமே? எங்கே?"

"காட்டேஜிலே தங்க வைச்சிருக்கேன். ஆபத்தானவள்னு தெரிஞ்சுது. பங்களாவிலே சேர்த்துக்காமல் இருந்துட்டேன்".

"பரவாயில்லே. நான்தான் வந்துட்டேனே, கூப்பிடுங்க".

தகவல் சேர்ந்து வினிதா வந்தாள். கோபமாக முகத்தைத் திருப்பிக் கொள்ள மகேஷ் அவள் முகத்தைத் திருப்பினான், "நாட்டை விட்டுக் கிளம்பறதுக்கு முன்னே உனக்குப் போன் செய்தேன். நீ கிளம்பிட்டதாகச் சொன்னாங்க. உன் பெயருக்கு இருபத்தைஞ்சாயிரம் அமெரிக்கன் டாலர் அனுப்பி இருக்கேன். முதல் தவணை. தொடரும். அதனாலே பணம் கேட்டு அம்மாவைத் தொல்லைப்படுத்தாதே".

திணறிப் போனாள். 'இது தெரியாமல் அந்தப் பாண்டியை ஏவி விட்டு...'

அவசரமாக அவனைத் தேட வெளியேற முயன்றவளை அனாமிகா "மறுபடியும் ஏன் வெளியே பாயறே? உன் காட்டேஜ்தானே? அது தானாகக் காலியாகி இந்த பங்களாவுக்கே வந்துடும். நீயும் எங்களோடயே தங்கி இரு" என்றாள் அனாமிகா கண்டிப்புடன். நடுங்கிப் போனாள் வினிதா.


எதுவும் சொல்ல முடியாமல் திணறினாள். சங்கடமாகத் தலையசைத்தாள், வினிதா. சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஏழடித்து விட்டிருந்தது. விநாடிகள் விரைய நிமிடங்கள் நில்லாமல் நகர்ந்து அவளை நடுங்க வைத்தன.

ஏழு இருபது - ஏழு இருபத்தைந்து - ஏழு இருபத்தெட்டு...


ஏழு முப்பதை நெருங்கிக் கொண்டிருந்தது முள்.

—தொடரும்

உயிர் மெய் எழுத்துகள்



நேர்மையின் நேர்முகம்



ராஜலக்ஷ்மி சுந்தரம்

அழைப்பு மணியின் பித்தானை நான் அமுத்திவிட்டு நின்ற போது... காம்பவுண்டு கதவு கிரீச்சிட்டது. திரும்பிப் பார்த்த எனக்கு ஆச்சர்யத்தைத் தருவித்தது அந்த இருவரின் வருகை.

"என்னப்பா... நீ, எங்களை முந்திக்கிட்டே?" என் தோளைத் தட்டியவாறே அவர்களும் அமர்ந்தனர்.

வியப்பு அடங்காமல், "அடப் பாவிகளா... நீங்க ஏண்டா என்னோடு மோதுறீங்க?" என்றேன். தொழில் தந்த உரிமை 'டா' போட்டுப் பேசுவது.

தோளில் தொங்கும் பையிலிருந்து இருவரும் சின்ன நோட்டுப் புத்தகத்தையும், பால் பாயிண்ட் பேனாவையும் எடுத்துக் கொண்டனர்.

உள்ளேயிருந்து ஒரு சிறு பெண் வந்து எட்டிப் பார்த்துவிட்டுச் சென்று, மூன்று கோப்பை நிறைய சூடான காப்பியோடு மீண்டும் வெளியே வந்தாள்.

காப்பியைக் குடித்துவிட்டு கோப்பையை மேசையின் மீது வைத்துவிட்டு, கைக்குட்டையால் உதடுகளைத் துடைத்தவாறே எழுந்து சுற்றிலும் ஒருமுறை பார்த்தேன்.

"குட்மார்னிங் யங்மென்" குரல் கேட்டு சட்டென்று திரும்பினேன். திரு. தத்தாத்ரேயன் குளித்து, பூஜை செய்த மணத்தோடு எதிரே நின்றிருந்தார்.

அம்மா அடிக்கடி சொல்வது நினைவில் தட்டிய்து.

"விஷ்ணுவுக்கு வேணும்னா கண்ணு பெரிசா இருந்தா அழகா இருக்கலாம். ஆனா ஆண் பிள்ளைக்கு கண்ணு சின்னதா இருந்தாத்தான் களையா இருக்கும்; கம்பீரமாகவும் இருக்கும்".

மனம் ஆமோதித்தது...

"உட்காருங்க" அவர் காட்டிய திசையில் இருந்த மூன்று பிரம்பு நாற்காலிகளில் எங்களையறியாமல் உட்கார்ந்தோம்.

"எஸ். நீங்க இரண்டு பேரும்... நேற்று போன் செய்து சொன்ன பத்திரிகைகளிலேருந்து வர்றீங்க இல்லையா?" என்றவர்... என்னைப் பார்த்து, "நீ..." என்று சற்று இழுத்தவுடன், "யெஸ் ஸார்... நேத்து ராத்திரி ஃபோன் செய்து உங்களோடு பேசினேன்" என்று நான் முடிப்பதற்குள் அவர் முந்திக் கொண்டார்.

"ஓ. நாராயணன். சரி... சரி... நீ சொந்தமா பத்திரிகை ஏதாவது நடத்தறியா?"

"இல்லை ஸார்! நான் ஃப்ரிலான்ஸ் ஜர்னலிஸ்ட். மேலும் நான் ஒரு பதிப்பகத்தார் சார்பிலேயும் வந்திருக்கேன்" என்றேன்.

"ஓ! அப்படியா?"

மற்ற இருவரும் என்னைச் சற்றுக் கோபத்தோடும் பொறாமையோடும் பார்ப்பது போல எனக்குத் தோன்றியது. நான் அதைக் கவனிக்காததுபோல் என் நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு தயாராக முனைந்தபோது... கோபி ஒரு கேள்வியை எழுப்பினான்.

"ஸார்! உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா என்னுடைய முதல் கேள்வி - உங்களோட பேரைப் பத்தினதுதான். 'தத்தாத்ரேயன்'னு ஏன் ஸார் உங்களுக்குப் பேர் வெச்சாங்க?"

அவர் உதடுகளில் இலேசான சிரிப்பு. "என் அம்மா... சாயி பக்தை... சாயியின் முன் அவதாரம் தத்தாத்ரேயர்'னு ஒரு நம்பிக்கை அவர்களுக்கு... அதனாலே வெச்சாங்களாம்..."

இப்போது பாலாஜியின் முறை...

"ஸார்! நீங்க நேத்து ரிடையர் ஆகியிருக்கீங்க. இன்னைக்கி உங்க உணர்ச்சிகள் எப்படி இருக்கு?"

அவர் ஒரு பெரிய இராணுவச் சிரிப்பு சிரித்தார். எல்லாரும் அதில் கலந்து கொண்டோம். ஒரு கணம் சிரிப்பை நிறுத்தியவர்...

"எப்படி இருக்கு தெரியுமா? மூச்சு முட்டிக் கொண்டிருந்த அறையிலிருந்து வெளியிலே வந்த

சிறுகதை

சுத்தமான காற்றை இழுத்து சுவாசிக்கிற மாதிரி இருக்கு..." என்றார்.

"அப்படின்னா... அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட மாதிரியா ஸார்?"

கோபிதான் கேட்டான். எனக்குள் நிம்மதி. நான் கேட்கத் தயாராக இருக்கும் கோரிக்கைக்கு இந்தக் கேள்விக்கான பதில்தான் தீர்வு காண முடியும்.

அவர் ஆமாம் என்றும் சொல்லவில்லை. இல்லை என்றும் கூறவில்லை.

பாலாஜி கேட்டான்... "ஸார்! உங்கள் சர்வீஸிலே எத்தனை கட்சிகள் மாறி மாறி ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும்?"

இதற்கு அவர் ஒரு சிரிப்பை உதிர்த்தார்.

"எத்தனை கட்சிகள்... எத்தனை மந்திரிகள்... எத்தனை அதிகாரிகள்...?" என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு கூறினார். சிந்தனை வயப்பட்ட மனதை இழுத்துக் கீழே கொணர்ந்தது போன்ற தொனி... இப்போதுதான் பேட்டி சற்று சூடு பிடிக்கத் தொடங்கியதுபோல் எனக்குத் தோன்றியது.

"ஒருத்தருக்கொருத்தர் எதிரிகளா நினைச்சுக்கிட்டிருந்த முதலமைச்சர்கள் காலத்திலே கூட நீங்க சில உயர் பதவிகளில் இருந்தீங்க இல்லையா ஸார்?"

அவர் சிரித்துக் கொண்டே தலையசைத்தார்.

"ஒருத்தர் ஆட்சி இழந்து இன்னொருத்தர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது... நீங்கள் பழி வாங்கப்பட்டு, முக்கியத்துவம் இல்லாத பதவிகளில் கூட இருந்தீர்கள் போல் இருக்கிறதே..."

இப்போது அவர் மீண்டும் பெரிதாகச் சிரித்து, "இதுதான் உங்கள் பேட்டியா? நான் ஏதோ என்னுடைய எதிர்காலத் திட்டங்களைப் பற்றிக் கேட்க வந்திருக்கிறீர்கள் என்று நினைத்தேன்" என்றார்.

நாங்கள் மூவருமே நோட்டுப் புத்தகங்களைச் சற்றுத் தாழ்லாக்கிக் கொண்டோம். கோபி சற்று தைரியசாலி...

"உங்கள் சர்வீஸில நீங்கள் சந்தித்த தலைவர்களைப் பற்றிய பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் தான் எங்களுக்கு".

"ஓ! அதற்கென்ன? சொல்கிறேனே" என்று அவர் சொன்னது எனக்கு சரியான பதிலாகத் தோன்றவில்லை.

"தலைவர்களைப் பற்றி எல்லாருக்கும் தெரிந்திருக்கிற செய்தி வேண்டாம். சார்! அந்தத் தலைவர்களைப் பற்றிய 'வேறு முகம்' என்ற முறையில் செய்தி கொடுத்தால் கொஞ்சம் புது மாதிரியா இருக்கும்" பாலாஜி முடிப்பதற்குள் நான் சேர்ந்து கொண்டேன்.

"இப்போதுதான் நீங்க ரிடையர் ஆகிட்டீங்களே சார். தைரியமா உங்க சர்வீஸ் காலத்தில் நடந்த எல்லா விவரங்களையும் கொடுத்தால் புத்தகமாகப் போடக்கூட சௌகரியமா இருக்கும்".

திரு. தத்தாத்ரேயன் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் மௌனமாக இருந்தார். ஏதோ யோசிப்பது போல தெரிந்தது.

"நாங்க டேப் கொண்டு வரவில்லை ஸார்! பயப்படாதீங்க. எழுதிக்கிட்டு மட்டும்தான் போகப் போறோம்" கோபி குரல் கொடுத்தான்.

அவர் எழுந்தார். "என்னோடு வாங்களேன். வீட்டைச் சுற்றிக் காண்பிக்கிறேன். அப்படியே பேசிக் கொண்டே போகலாம்" என்று கிளம்பினார்.

பைகளை நாற்காலிகளில் மாட்டி விட்டுக் கிளம்பினோம்.

சிறிய வீடுதான்... உள்ளே வயதான ஓர் அம்மாளைக் காட்டி தன் தாயார் என்று அறிமுகம் செய்து வைத்தார். எளிமையான நூல் புடைவையில் சமைத்துக் கொண்டிருந்த மனைவி, சல்வார் கமிஸில் இரு பெண்கள்... ஏதோ ஒரு தனியார் நிறுவனத்தில் இந்த ஆண்டு வேலையில் சேர்ந்திருந்த மகன்...

கொல்லைப்புறத்தில் துணி துவைத்துக் கொண்டிருந்த வேலைக்காரி... எங்களைக் கண்டதும் எழுந்தாள்.

"என்னம்மா... புருசன் எப்படி இருக்கான்? இன்னமும் குடிதானா?" என்று அவளிடம் ஒரு கேள்வி... அவள் நெளிந்தாள்.

"இல்லைங்கய்யா... இப்ப எல்லாம் அவ்வளவாக் குடிக்கிறதில்லே... பொறுப்பு வந்திட்டுது..."

தலையை ஆட்டியவாறே வீட்டைச் சுற்றிக் கொண்டு மொட்டை மாடியை அடைந்தோம். சிறிய இடம். துணி காய வைக்கலாம். வடகம் போடலாம். நிலாவில் சாப்பிடலாம். காலை வெயில் இதமாக இருந்தாலும் அதிக நேரம் அங்கு நிற்க முடியவில்லை. கீழே இறங்கி வந்தோம்.

இரண்டு நிமிட மௌனத்திற்குப் பிறகு அவர் தொடங்கினார் :

"இந்த வீடு... நான் சர்வீஸில இருந்தபோது அரசாங்கக் கடனில் கட்டியது".

நாங்கள் ஒருவருக்கொருவர் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டோம்.


"ஸார்! மூச்சு முட்டுதலிலிருந்து விடுபட்ட மாதிரி இருக்குன்னு சொன்னீங்க. அப்போ எந்தக் கருத்தையும் சுதந்திரமா சொல்வதற்கு நீங்க தயார்னு தானே அர்த்தம்?" கோபிதான் தொடங்கினான்.

"யங்மேன்! ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கட்டுப்படுதல் என்பது பணம் வாங்கும் வரை - அதாவது சம்பளம் வாங்கும் வரைதான்... அதற்குப் பிறகு பணம் கொடுத்தவர்களோடு நமக்கு எந்தப் பொறுப்புகளும் இல்லை".

நாங்கள் நிமிர்ந்து உட்கார்ந்தோம். இப்போதுதான் அவர் முன்னுரையே சொல்லத் தொடங்கியிருக்கிறார் என்பது புரிந்தது.

"இதுதானே... நீங்க எதிர்பார்ப்பது..." என்ற அவர் கேள்விக்கு எங்கள் மௌனம்தான் பதிலாயிற்று.

"அந்த வேலைக்காரி சொன்ன பதில் நினைவிருக்கா? புருஷனை விட்டுக் கொடுக்காமல் பேசினாளே... அதுதான் உண்மையான



பொறுப்பு... அவ்வளவு ஏன்? எனக்குத் தெரிந்து எங்கப்பா உயிரோட இல்லையேன்னு, என் அம்மா அவரைப் பற்றி எந்தத் தவறான செய்தியும் சொன்ன தில்லை".

நான் இடைமறித்தேன். "அது நம்ம நாட்டுப் பெண்களுக்கே உரித்தான புருஷன் மீதுள்ள பக்தி... அதற்கும் நீங்க சொல்லப் போகிற செய்திகளுக்கும் என்ன சம்பந்தம்?"

தத்தாத்ரேயர் குரலைச் சற்று உயர்த்தினார்.

"ஏன் சம்பந்தம் இல்லை? என்னுடைய நாற்பத்தி மூணு வருட சர்வீஸுக்கு நான் அரசாங்கத்துக்கு நன்றி காட்ட வேண்டாமா? ஒரு பெண், புருஷனின் மேலே வைத்த தூய அன்பைப் போல நாங்களும் அரசாங்கத்தின் மேலே வைக்க வேண்டாமா?"

கோபிக்கு சற்று கோபம் வந்தது.

"சார்! நீங்க அரசாங்கத்து மேலே காதல் வைச்சுக்குங்க. எங்களுக்கு ஆட்சேபணை இல்லே. ஆனா, சில அரசியல்வாதிகளைப் பற்றிய விவரங்களைத் தானே கேட்கிறோம். அதுவும் இப்ப நீங்க ஃப்ரீ என்பதால்தான். இப்போ நீங்க பயப்படாம சொல்லலாமே"

அவன் குரலில் கலந்திரு சீற்றம் என்னுள் சற்று அச் தைத் தருவித்தது. மாநிலத்தி நேற்றைய மிகப்பெரிய அதிகாரி இன்று என்னதான் ஒய்வு பெ வராக இருந்தாலும் இப்ப கோபத்தைக் காட்டுவது அந ரிகம் போலத் தோன்றியது. ' யாதையும், பண்போடு பழகுத ஒருவரது தொழிலையும் ப யையும் மட்டுமே சார்ந்திருக் கூடாது. அடிப்படையில் மனித என்பவன் இன்னொரு மனிதனு முதல் மரியாதை தரவேண்டு என்று அப்பா அடிக்க சொல்வது ஏனோ... இப்போ நினைவில் தட்டியது.

"அரசாங்கம் வேறு... அரசியல் [வ]ாதிகள் வேறு என்று நீ நினைக் [கி]றாய்". கனமான குரலில் வந்த அந்தக் கேள்விக்குச் சட்டென்று [ந]ாங்கள் யாருமே பதில் சொல்ல [வ]ில்லை. அவரே தொடர்ந்தார்.

"அதிகாரிகளும் அரசியல் [த]லைவர்களும் சேர்ந்து நடத்துவது [த]ான் அரசாங்கம். இதில் எங்கள் [ச]ர்வீஸில எத்தனையோ நபர்கள் [ம]ாறி மாறி ஆட்சி நடத்தலாம். [எ]த்தனையோ விதமான உத் [த]ரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்க [ல]ாம். சில நேரங்களில் அரசியல் [த]லைவர்கள் நாங்கள் எடுத்துச் சொல்வதைக் கேட்டுக் கொள் [வ]ார்கள். சில நேரங்களில் அதுவும் நாம் 'சரியான முடிவுகள்' [எ]ன்று எடுத்து விளக்கிக் கூறியும்... அதை ஏற்கமாட்டார்கள்".

"அப்படி முரண்பாடாய் நடந்து கொண்டவர்கள் யார் யார் சார்?" [எ]ன்று கோபி அவசரமாய் இடை வெட்டியதைக் கண்டு மீண்டும் [சி]ரித்தார் அவர்.

"கோபி! யூ ஆர் வெரி செல்பிஷ்" என்றார். கோபியும் [பு]ன்முறுவலோடு அதை ஏற்றுக் கொண்டான்.

"அவர்கள் ஏற்றுக் கொண் [ட]ாலும், ஏற்காவிட்டாலும்... எங்கள் [ப]ணியும் தொடரும்... அவர்கள் அரசாட்சியும் தொடரும்... அர [ச]ாங்கத்தின் சலுகைகளையெல் [ல]ாம் ஏற்றுக்கொண்டிருந்து [வி]ட்டு நேற்று ரிடையர் ஆன [எ]ன்னை - "அரசாங்கத்தில் நீங்கள் [க]ண்ட நேர்ந்த குறைபாடுகளை [யெ]ல்லாம் இன்று பட்டியலிட்டுக் கொடுங்கள்" என்று நீங்கள் [கே]ட்பது...

அவர் இழுத்தவுடன்... பாலாஜி [ப]திலளித்தான்.

"நீங்கள் சொல்வது அந்தக் [கா]லம்... இந்தக் காலத்தில்..."

அவர் மீண்டும் குறுக்கிட் [ட]ார். "ப்ளீஸ்... ஸ்டாப் இட்... [கா]லங்கள் மாறுகிறபோது... [உ]ண்மை... சத்தியம்... நேர்மை [இ]வற்றுக்கான விளக்கம் மாறுமா [எ]ன்ன? அரிச்சந்திரன் காலத் [தி]லேயிருந்து உண்மையின் சுய [ரூ]பம் இன்று வரை மாற [வி]ல்லையே. கல்யாணமாகி [பு]ருஷன் வீட்டுக்குப் போன பெண் தன் அப்பாவின் குறையையெல் லாம் புருஷனிடம் விவரிப்பாளா? ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். முதலில் உத்தியோகத்தில் சேரும் போது, அது எந்த உத்தியோக மாக இருந்தாலும் சரி... கடமை யுணர்வோடு செய்வேன் என்று உறுதி எடுக்கிறோம். பிறகு உத்தியோக காலம் முழுவதும் கண்ணியத்தோடு அந்தப் பெரு மையைக் காக்கிறோம். உத்தி யோகத்திலிருந்து விடுபட்ட பின்னர்கூட நமக்குள் கட்டுப்பாடு வைத்துக் கொண்டு பழையதைச் சாடாமல் இருக்க உறுதி பூண வேண்டும்.

ரிடையர் ஆனபின்புகூட இந்த அரசாங்கம்தான் எனக்குச் சோறு கொடுக்கப் போகிறது. இத்தனை நாள் வாழ வைத்ததுமில்லாமல் இனியும் என்னை வாழ வைக்கப் போகும் என் அரசாங்கத்தைப் பற்றியும் நான் கண்ட அரசியல் தலைவர்களைப் பற்றியும் நான் குறை கூறி, விமரிசனம் செய்வே னானால்... நான் கடமை மறந் தவன். கண்ணியத்தைக் கைவிட் டவன். மனசாட்சிக் கட்டுப்பாடு இல்லாதவனாவேன்".

சற்று நிறுத்தினார். எங்கள் முகங்களில் ஏமாற்றம். கொஞ்ச மாய் அசடுகூட வழிந்தாற் போலிருந்தது.

"இதோ பாருங்கள்! நீங்கள் இளைஞர்கள்... இப்போது வேலை செய்யும் முதலாளியிடமிருந்து நாளை வேறு பத்திரிகைக்குப் போக நேரிடலாம். அப்போது பழைய முதலாளியின் ரகசியங் களையும் சிறுமைகளையும் புது முதலாளியிடம் சொல்ல முயலா தீர்கள். வாங்கும் சம்பளத்திற்கு உழைப்பு என்றால் வாங்கிவிட்ட சம்பளத்திற்கு நன்றி காட்ட வேண்டும். இன்றைய சம்பளம் வயிற்றுக்கென்றால் முந்தைய சம்பளம் நெஞ்சுக்கு... அதில் ஊறி வரும் நினைவுகளுக்கு - அது கொடுத்த அனுபவங்களுக்கு".

மூவருமே எழுந்து கொண் டோம்... சிரித்தவாறே விடை கொடுத்தார்.

அடுத்த நாள் மூன்று தினசரி களையும் படித்தேன்.

"ஓய்வு பெற்ற அதிகாரி... அர சியல்வாதிகளைக் கண்டு அச்சம்... சர்வீஸில் நான் பயந்தது போதும்... இனி சிறிது நாள்கள் கழித்து... இவர்களைப் பற்றிக் கூறுகிறேன். இப்போது வேண் டாம்" என்று பயப்பட்டார்... கோபி எழுதிய செய்தி இது.

"அரசியல் தலைவர்களின் கைப் பொம்மைகள் நாங்கள். என்ன செய்ய முடியும்" - இது பாலாஜி எழுதியது.

"தத்தாத்ரேயர் சிவன் - விஷ்ணு - பிரம்மா என்ற மூன்று முகம் கொண்டவர். அதைப் போல தத்தாத்ரேயர் என்ற அதிகாரி மூன்று முகங்களைக் கொண்டவர்" என்று நான் எழுதியிருந்த நல்ல செய்தியை வெளியிட அனுமதித்த அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொண்டேன். மேலும், நேர்மையான ஒருவர், தம் பதவிக் காலத்திற்குப் பிறகும், பத்திரிகை யாளர்களிடம் நேர்முகம் காண நேரும்பொழுது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய தத்தாத்ரேயர் இமயமென உயர்ந்து நின்றதை எண்ணிப் பெருமிதமுற்றேன்.

ஃ

'ஹைக்கூ' தொகை

கருமலைப்பழம்நீ

நிழல்

தொடர்ந்து வந்தாய்
பயமின்றி நடந்தேன்
இருட்டில் புரிந்தது.

தாய்மை

குப்பைத் தொட்டிக்குள் குழந்தை
எட்டிப் பார்த்தது நாய்,
குட்டிகளுடன்.

சுதந்திர அடி

அடிபட்டோம் உதைபட்டோம்
வாங்குவதற்காக அன்று!
வாங்கியதால் இன்று.

மழை வதும்

மதுமிதா

ஹேமா உள்ளே நுழைந்த போது எல்லாரும் எழுந்து நின்றார்கள்.

அவளுக்குச் சற்று கூச்சமாக இருந்தது. அவசரமாய்க் கைநீட்டி உட்காரச் சொன்னாள். நாற்காலி தவிர்த்து தரையில் விரித்திருந்த ஜமுக்காளத்தில் உடகார்ந்தாள்.

ராஜு எழுந்து நின்று சொன்னான். "மேடம்...! சேர்ல உக்காருங்க...!"

"இல்ல... ராஜு..! உங்களோடயே இருக்கேனே..!"

மெல்லிய புன்னகையுடன் சொன்னாள்.

தலையசைத்துவிட்டு உட்கார்ந்தான்.

ஆர்வமாய் இவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நாம கேள்விப்பட்டது எல்லாம் உண்மை. என்னோட கஸின் மூலமா விசாரிச்சேன்...!"

"அப்ப மரங்களை வெட்டப் போறாங்களா..?" ராஜு கேட்டான்.

"ஆமாம்... மரம் வெட்ட காண்ட்ராக்ட்கொடுத்துட்டாங்க..!"

"யாரு...?"

"மங்கள் ராம்சேட்...!"

"சேட்டுக்கு ஏற்கெனவே இருக்கிற காசு பத்தாதா?"

யாரோ ஆபாசமாய்த் திட்டினார்கள்.

ராஜு எழுந்து சப்தம் போட்டான்.

"தவறு... இது மாதிரி அசிங்கமா இனிமே பேசறதா இருந்தா.. வெளியில போய்டுங்க..!"

ஹேமா குறுக்கிட்டாள்.

"சரி. விடுங்க அடுத்து என்ன செய்யலாம்...?"

"ஆளாளுக்கு யோசனை சொல்வாங்க. ஒத்து வராது. நீங்களே சொல்லுங்கமேடம்..!"

ஹேமா யோசித்தாள். தலையசைத்தாள்.

"நாம் முதலில் கலெக்டரைப் பார்ப்போம்...!"

"செய்யலாம்... பலன் இருக்குமா..?"

"இருக்கும்..!"

"எப்ப..?"

"இப்பவே..!"

எழுந்தார்கள்.

கலெக்டர் ஆபிஸ், கூட்டம் பார்த்து மிரண்டது. உதவியாளன் பரபரத்தான்.

"அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கியிருக்கீங்களா..?"

ஹேமா முன் வந்தாள்.

"இல்லே...அவசரம்..!"

யோசித்தான்.

"சரி. கேட்டு வருகிறேன்..!" உள்ளே போனான்.

"வாங்க... கூட்டம் வேண்டாம்..!"

ஹேமா உள்ளே போனாள்.

கலெக்டர் மிக இளைஞனா
தெரிந்தார். அறிமுகப்படுத்
கொண்டாள்.

"மிகப் பெரிய அளவ
மரங்கள் வெட்டக் காண்ட்ரா
விட்டிருக்கறதாகக் கேள்
பட்டோம்...!"

"ஆமாம்..!"

"ஏன்..!"

"ஓர் எஸ்டேட் உருவ
கறதுக்கு...!"

"இப்படி மரங்களை வெ
டிட்டே இருந்தா... அதன் ப
விளைவு பற்றி..?"

கலெக்டர் குறுக்கிட்டார்.

"புரியுது... ஆனா என் மு
வல்ல இது... அரசாங்கத்
முடிவு..?"

"அரசாங்கம்... வீட்டுக்கு
மரம் வளர்க்கணும். அப்படின
எல்லாத்திலேயும் விளம்ப
படுத்துது. ஆனா இப்படி ம
களை வெட்டிக் குவிக்க கா
ராக்ட் விடுது... ஏன் இந்த இரட்
வேஷம்..?"

"மேடம்! வேண்டாம். ந
அரசாங்க ஊழியன், விமர்ச
வேண்டாம்..!"

"ஸாரி... இதைத் தடுக்க மு
யாதா?"

"முடியாது. மலைஜாதி ம
ளுக்கான சமூக நலத் திட்
இது... ஓர் எஸ்டேட் உருவா
அதுல ஆயிரம் பேருக்கு வே
கொடுக்கப் போறாங்க...?"

"அதுக்காக... மரங்களை வெ
டித்தான் அவங்களுக்கு வா
கொடுக்கணுமா..?"

"தெரியலை... அரசாங்கத்
திட்டங்களுக்கு யாரும் குறு
நிற்க முடியாது. மன்னிக்கவு
இதில் நான் செய்வதற்கு ஒன
மில்லை. நான் வெறும் க
அவ்வளவே..!"

கலெக்டர் கை கூப்பினார்.

மங்கள்ராம் முகம் கோபத்
சிவந்திருந்தது.

"யார் அந்தப் பெண்...?"

அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி '94 - இரண்டாம் பரிசு ரூ 1500/- பெற்ற சிறுகதை

"ஹேமா. ஊர் கொடைக் கானல்... இங்கே எக்காலஜியில் பி.ஹெச்டி. செய்றா."

"எக்காலஜி..?"

"சுற்றுப்புறச் சூழல் பற்றி..!"

"எதுவோ இருக்கட்டும்... ஏன் நம்பள் விஷயத்தில் தலையிட ணும்..?"

"சேட்..! நீ வெட்டப் போறியே ஆயிரக்கணக்கான மரம்... அதுக் காகத்தான்.!"

"அதுக்காக.. கலெக்டர்கிட்ட போனா தடுத்திடலாமா? நான் பெரிய திமிங்கலத்துக்குத் தீனி போட்டு இந்தக் காண்ட்ராக்ட் எடுத்திருக்கேன்...!"

"இருக்கலாம் சேட்! கூட்டம், பஸ் மறியல், உண்ணாவிரதம்னு வந்ததுன்னா... கட்சிக்காரனுங்க வேற சேந்துடுவாங்க. அப்ப பிரச்னையாய்டும். போதாதுக்கு பத்திரிகை வேற..!"

"என்ன செய்யலாம்..?"

"அவங்களைப் பிரிக்கணும்..!"

"எப்படி..?"

"அத நான் பாத்துக்கறேன்..!"

"அதான் எப்படி..?"

"குதிரை கண்ணுக்கு நேரா கேரட் காட்டினா.. ஓடி வர்றது..!"

"எந்தக் குதிரை..?"

"ராஜு..லோக்கல் ஆசாமி..!"

"என்ன செய்வே..?"

"படிச்சவன்.. வேலை இல்லை. பலவீனமான இடத்திலே தட்டினா.. சாஞ்சிடுவான்..!"

மங்கள்ராம் சிரித்தான்.

"பலே கில்லாடிதான்... என்ன வேண்டும்?"

"எனக்கு என்ன வேணும்னு உனக்கே தெரியுமே..!"

மங்கள் ராம் கண் சிமிட்டிச் சிரித்தான்.

ராஜு தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான்.

"என்னாச்சு ராஜு உனக்கு..?"

கோபத்தில் ஹேமாவின் உடம்பு ஆடியது.

"அரசாங்கத்துக்கிட்ட மோதி ஜெயிக்க முடியுமா..?"

"ஏன்முடியாது..?"

"இன்னும் ரெண்டு மூணு நாள்ல வேலையை ஆரம்பிக்கப் போறாங்க..?"

"ஏன் ராஜு.. இப்படி மாறிட்டே..?"

ராஜு சற்று நேரம் யோசித் தான்.

"இங்க பாருங்க மேடம்... இங்க இருக்கற எல்லாருமே நடுத்தர வர்க்கத்துக்குக் கீழே... மோதற துணிச்சல் கிடையாது... அப்புறம் ஏதோ எஸ்டேட் வரப் போவு தாம்..!"

"அதனால...?"

"அதுல ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்குமாம்... என்ன மாதிரி படிச்ச ஆளுங்களுக்கும் வேலைஉண்டாம்...!"

ஹேமா கூர்ந்து அவனைப் பார்த்தாள். பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

"ராஜு! வேண்டாம்... மனசு மாறாதே... சொல்லுவாங்க. அப் புறம் குறைச்ச விலைக்கு வெளிலேர்ந்து ஆள் கொண் டாருவாங்க...ப்ளீஸ்ராஜு..!"

ராஜு அவள் முகத்தைப் பார்த்தான். எங்கிருந்தோ வந்த பெண் இப்படி போராடும்போது நான் ஏன் பின் வாங்குகிறேன்?

தலையைக் குலுக்கிக் கொண் டான்.

"சரி... ஆனா.. மத்தவங்க... காசு கொடுத்து உனக்கு எதிரா பேசச் சொல்றாங்களே..?"

"மாட்டாங்க... எனக்கு நம் பிக்கை இருக்கு..!"

"இல்லே... பேச ஆரம்பிச் சிட்டாங்க...!"

"நான் அவங்களைப் பாக்க ணும்...பேசணும்... ராஜு!"

"சரி.. அவங்க எல்லாரையும் ஸ்கூலுக்கு வரச் சொல்றேன்..!"

ராஜு சொன்னான்.

அவர்கள் மௌனமாக இருந் தார்கள்.

"என்னாச்சு உங்களுக்கு...? ஏன் இப்படி மாறிட்டீங்க.?"

ஹேமா கேட்டாள்.

ஓர் இளைஞன் எழுந்து கத்தி னான். "இதுல உங்களுக்கு என்ன நஷ்டம்..? ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்... ஏன் தடுக்கறீங்க..?"

ஹேமா எழுந்தாள்.

"எனக்கு என்ன நஷ்டம்..? நியாயமான கேள்வி... ஆனா கேள்வியில ஒரு சின்ன மாறுதல் செய்யணும்... இதுல நமக்கு என்ன நஷ்டம்..?"

கூட்டம் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

"மலைப் பிரதேசம்னு நாம சொன்னாலும்.. உண்மையிலே இது மண்தான். மண் மேடு. இது சரியாம பலப்படுத்துவது எது தெரியுமா..? மரங்கள். அதன் வேர்கள் பின்னிப் பிணைந்து மண்ணில் புதைந்து இருப்பது தான்... இந்த மண்மேடுகளின் பலங்கள்... மரங்கள் வெட்டப் பட்டால்...?"

சற்று நிறுத்தினாள்.

"இந்த மண் மேடுகள் சரியும்... வாகனங்களின் அதிர்வே தாங்க முடியலை. இதில் மரங்கள் வெட்டப்பட்டால்... வருஷா வருஷம் நிலம் சரிஞ்சு குறைச்சலா இங்க ஐம்பது உயிர்கள் பலியாகின்றன.. ஏன்..?"

"இங்க மட்டுமா பலி? தரைல கூடத்தான். பஸ் உருண்டு ஐம்பது பேர் சாகறாங்க. எல்லாம் விபத்துதான்..!"

"முட்டாள்தனமாய்ப் பேசாதே. அது விபத்து. ஆனா இது விபத் தில்லை. இதைத் தடுக்கலாம்!"

"இருக்கட்டும். எல்லாருக்கும் வேலை தர்றேன்னு சொல் றாங்களே..?"

"உன் அம்மா கையை வெட் டிட்டு வந்தா வேலை தர்றேன்னு சொன்னா வெட்டிடுவியா..?"

விவாதித்தவன் தலைகுனிந் தான்.

ஹேமா தொடர்ந்து பேசினாள்.

"இப்ப நடக்கப் போறது வெறும் மரம் வெட்டற வேலை இல்லே. மழை வதம்... ஆமாம். மழைக்கும், மரத்துக்கும் இயற்கை ஒரு முடிச்சு போட்டு வச்சிருக்கு. அதை மனிதர்கள் துண்டிக்க முயலுவது வதம்தான்..!

"நல்லா யோசிங்க. நாம் அடுத்த தலைமுறைக்கு எதை விட்டுட்டுப் போகப் போகிறோம்? மரங்கள் அடிபட்டு வெறும் கான்கிரீட் மரங்கள் முளைத்த சுடு காட்டையா..? இயற்கையோடு கை கோத்து வாருங்கள்... இயற்கையை எதிர்த்து எதிர் வரும் சந்ததியை சிரமத்திற்குள்ளாக்க வேண்டாம். இன்னும் உங்களுக்குப் புரியாமல் போகலாம். ஆனா இருபது வருடங்களுக்குப் பிறகு நாம் எல்லாரும் பொட்டல் வெளியில் நிற்கும்போது புரியும்..!"

நீளமாகப் பேசி நிறுத்தினாள்.

கூட்டம் அமைதியாக இருந்தது.

"என்ன சொல்றிங்க...? என் பக்கம் வர்றீங்களா.. அல்லது எதிர்ப்பக்கமா..?"

கூட்டம் மேலும் அமைதி காத்தது.

ராஜு எழுந்து கத்தினான்.

"சொல்லுங்கடா..!"

"உங்க பக்கம். உங்க பக்கம்..!"

கூட்டம் கூச்சலிட்டது.

"நன்றி."

ஹேமா கை கூப்பினாள்.

"இன்று நான் தலைநகர் போகிறேன். ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கப் போகிறேன்.. மரத்தை வெட்டாமல் இருக்க சட்டரீதியாக நடவடிக்கைஎடுக்கலாம்..!"

"கிடைக்குமா..?"

"கிடைக்கும்.. என் தோழி ஸந்த்யா.. பிரபல வக்கீல். அவளால்முடியும்..!"

கூட்டம் கலைந்தது.

ரயில்வே ஸ்டேஷனுக்கு ராஜு மட்டும் வந்திருந்தான்.

ஹேமா சந்தோஷமாய்ச் சிரித்தாள்.

"என்ன ராஜு? சந்தோஷம் தானே... ஸ்டே கிடைச்சதில்..!"

ராஜு மௌனமாய் இவள் சூட்கேஸை எடுத்துக் கொண்டான்.

"நேத்தே போன் செய்து ஸ்டே வாங்கின விஷயம் சொன்னேன். ஏன் மத்த யாருமே வரலை...?"

"சொல்றேன்...!"

ராஜு திசை மாறி நடந்தான்.

"என்ன ராஜு? அந்தப் பக்கம் போறிங்க..? வீட்டுக்குப் போகலையா..?"

"கொஞ்சம் என்னோட வாங்க...!"

"எங்கராஜு..?"

"வாங்க..!"

நடந்தார்கள்...

பத்து நிமிடங்களுக்குப் பிறகு அந்தக் காட்சி தென்பட்டது.

ஹேமா பதறினாள்.

"ஏன் ராஜு... என்ன இது..?"

"ஸ்டே வாங்கின செய்தி கிடைத்ததும், இந்த வேலை ஆரம்பிச்சிடுச்சு..!"

"ஏன்?"

"மரங்களோட அடிப்பக்க பட்டைகளை உரிச்சுட்டா. கொஞ்ச நாள்ல அதுக்குத் தேவையான சக்தி கிடைக்காமப் பட்டுப் போயிடும். அது மட்டுமல்ல; எல்லா மரங்களுக்கும் ஆஸிட் வைக்கிறாங்க..!"

"ஏன் ராஜு?"

"எல்லா மரமும் பட்டுப் போக..!"

"அதான் ஏன்..?"

"சொன்னீங்களே.. உங்களின் பிரபலமான சட்டங்கள். அதிலுள்ள பிரபலமான ஓட்டைகள். நீங்க வாங்கின ஸ்டே பச்சை மரங்களை வெட்ட மட்டுமே. காய்ந்த, பட்டுப் போன மரங்களை வெட்ட அல்ல... இன்னும் கொஞ்ச நாள்ல இங்க உள்ள எல்லா மரங்களும் பட்டுப் போயிடும்..!"

"ஏன்..?"

ஹேமா முகம் பொத்தி தவித்தாள்.

"இதுதான் மேடம்... இதுதான் நம் தேசம். நிஜத்தைப் புரிஞ்சுக் கோங்க..!"

"இல்லை..இல்லை..!"

ஹேமா தலையாட்டினாள்.

"எனக்கு நம்பிக்கை இருக்கு. நிச்சயமா நம்பிக்கை இருக்கு..?"

"இந்த அசட்டு நம்பிக்கையின் பெயர் என்ன மேடம்..?"

"மங்கள் ராம் சேட்".

மங்கள் ராம் சேட்டின் வீட்டு அழைப்பு மணி குயிலாய்க் கூவியது.

அவன் மனைவிதான் கதவைத் திறந்தாள்.

"நான் ஹேமா. உங்ககிட்டப் பேசணும்..!" கை கூப்பினாள்.

உள்ளே போனார்கள்.

சோபாவில் உட்கார்ந்தாள்.

"ஒரு நிமிடம் இருங்க..!"

சேட் மனைவி உள்ளே போனாள். ஹேமா சுற்றுப்புறம் ஆராய்ந்தாள்.

சோபாவுக்கு சற்றுத் தள்ளி அந்தக் குழந்தை படுத்திருந்தது.

கை, கால்களை உதைத்தது. மேல் துணி விலகியிருந்தது.

ஈரமாயிருந்தது.

எழுந்தாள்.

அருகில் போனாள். குழந்தையின் வாயிலிருந்து எச்சில் வடிந்து கொண்டிருந்தது. பக்கத்துத் துணி எடுத்துத் துடைத்தாள். குழந்தை மாதிரியும் இல்லை. பெரிய உருவமாக இருந்தது. அதன் வாயிலிருந்து வார்த்தைகள் இல்லாமல் சப்தம் வெளிப்பட்டது.

மெல்ல நகர்த்தினாள். துணியிலேயே மலம் கழித்திருந்தது. நகர்த்தினாள். தோளில் கை பட்டது.

"வேண்டாம். வேண்டாம்... நான் பாக்கறேன்..!"

சேட் மனைவி தடுத்தாள். இவளை அழைத்துப் போய் வாஷ் பேசின் காட்டினாள்.

பரபரவெனச் செயல்பட்டாள். துணி மாற்றி அருகில் வந்தாள். "சொல்லும்மா.. என்ன விஷயம்..?" ஹேமா விவரமாகச் சொன்னாள். "எல்லாத்துக்கும் காரணம் உங்க கணவர் மங்கள் ராம் சேட்தான்..!"

அமைதியாக இருந்தாள்.

"அம்மா..! உங்க கணவர் மரங்களை வெறும் காசாப் பாக்குறார். அவர்கிட்ட சொல்லுங்க. மரங்களைக் குழந்தைகளாகப் பார்க்கச் சொல்லுங்க. சிசுவதை பெரிய பாவம். ஒரு தாய்க்கு இது புரியும். அதனாலதான், நான் உங்ககிட்ட வந்தேன்.!"

சேட் மனைவி கண் கலங்கி நின்றாள்.

"நல்லா அழகாச் சொன்னே பெண்ணே..! குழந்தை படற வேதனை தாய்க்குத்தான் தெரியும். எனக்குத் தெரியும். அதோ பார்..!"

குழந்தை வாயிலிருந்து எச்சில் வழிந்து கொண்டிருந்தது.

"இதுக்குப் பத்து வயசு. தெரியுமா? குழந்தை பிறந்தவுடனே தெரிஞ்சுடுச்சு மூளை வளர்ச்சி கிடையாதுன்னு. குழந்தையிடம் அம்மாங்கிற வார்த்தை கிடையாது. தளிர்நடை, மார்பு உதை எதுவும் கிடையாது. வெறும் சதைப் பிண்டம். எல்லாம் படுக்கையிலே. அழக் கூடத் தெரியாது.!"

அவள் முகம் பொத்தி விம்மினாள்.

ஹேமா அருகில் போய் தோள் தடவினாள்.

"பெண் குழந்தை. என்ன பாடு படப்போறதோ? நான்கூட இது




செத்துட்டா நல்லதுன்னு நினைப்பேன். ஆனா இவ அப்பாவுக்கு இவ மேல ரொம்ப உசிரு. தெரியுமா? நேரம் கிடைச்சப்பல்லாம் அப்படி கொஞ்சுவார். எவ்வளவு செலவானாலும் அம்மா அப்பான்னு ஒரு வார்த்தையாவது பேச வச்சிடணும்னு சிரமப் படறார்..!"

"வேறே குழந்தை..?"

அவள் முகம் மாறியது. சின்ன தாய் வெட்கம் வந்தது.

"இப்பத்தான் டாக்டர்கிட்ட போனேன். கன்ஃபர்ம் செஞ்சுட்.



டாங்க. ஆனா கொஞ்சம் பயமா யிருக்கு!"

"பயப்படாதீங்க..!"

"என் வீட்டுக்காரர்கிட்ட இன்னும் சொல்லலை. ரொம்ப சந்தோஷப்படுவார். ஆனா இது மாதிரி செய்றாருன்னு நீ சொல்றியே. அம்மாடி! நான் பேசறேன். நான் சொன்னா கேட்பார். பத்து வருடம் இந்த பயத்துல குழந்தை பெத்துக்கலை. இப்பத்தான் கொஞ்சம் தைரியம் வந்து இது உண்டாயிருக்கு. ஆனா இப்படி ஊர் சாபம் கொட்டிகிட்டா பயமாருக்கு. இதுவாவது நல்லா இருக்குமா..?"

"அம்மா..! கவலைப்படாதீங்க. கடவுள் ஆசீர்வாதத்துல இது நல்லாருக்கும்..!"

அவள் அருகில் வந்து இவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"நான் பேசறேன். இப்ப வந்துடுவார். நல்ல முடிவோட வர்றேன். உன்னை எங்கே பாக்கலாம்..?"

சொன்னாள்.

"சரி. வர்றேன்..!"



திரு. மதுமிதா
இயற்பெயர்:
பி.சந்தானகிருஷ்ணன்.
தஞ்சையில் எல்.ஐ.சி.யில்
பணியாற்றுகிறவர்.

கை கூப்பினாள்.

சேட் மனைவி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

கதவு தட்டப்பட்டது.

ஹேமாவுக்கு விழிப்பு வந்தது.

இந்த நேரத்தில் யார்?

கதவைத் திறந்தாள்.

மங்கள் ராம் சேட்.

அருகில் அவள் மனைவி.

சேட், கை கூப்பினார்.

"உள்ளே வரலாமா..?"

வந்தார்.

"மன்னிச்சிடும்மா. இவள் எல்லாம் சொன்னாள். மனசு மாறிட்டேன். இதுவாவது நல்லாப் பிறக்கணும்னு சுயநலம்தான். நான் சொல்லிட்டேன். காண்ட்ராக்டை வாபஸ் வாங்கிட்டேன்...!"

ஹேமா விழி விரித்தாள்.

"இனி நானும் உங்கள் பக்கம். இன்னோர் ஆள் இதை மீண்டும் எடுக்கலாம்..!"

சேட் தயங்கினார்.

"எடுக்கட்டும் சேட்..! அவரும் மனிதர்தானே.. மனுஷங்க மேலே எனக்கு ரொம்ப நம்பிக்கை இருக்கு சேட்! அவரும் உங்க மாதிரி மாறுவார்...!"

ஹேமா மெல்லிய புன்னகையுடன் சொன்னாள்.

சேட் வியப்புடன் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தார். ஃ

பகலில் நட்சத்திரங்கள்

வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ்.

அந்தக் கோயிலின் வழியே போகிற யாருமே ஒரு நிமிடம் நின்று நிதானித்துக் கையெடுத்துக் கும்பிட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டுதான் போவார்கள்.

விஸ்வநாத குருக்கள் கைகளில் மட்டும் என்ன அப்படியொரு காந்த சக்தியோ? அவர் அலங்காரம் செய்தாரென்றாலே முருகனுக்கு அப்படியோர் அழகு. முருகன் எதிரே வந்து சிரிப்பதைப் போலத் தோன்றும். உகந்த நாள்கள் மட்டுமல்ல; மற்ற நாள்களிலும் அவர் அலங்காரம் செய்யத் தொடங்கிவிட்டால் மெய்மறந்து தன்னையிழந்த ஒரு லயிப்புடன் அதில் முழுவதுமாய்த் தன்னை மூழ்கடித்துக் கொண்டு மகிழ்ச்சியில் மூச்சுத் திணறும் ஒரு விசித்திர சுபாவம். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழியும். கர்ப்பக்கிரகத்தின் உக்கிரத்தில் வியர்த்து வழிவது தெரியாமல் இறைவனின் பாதாரவிந்தங்களைத் தொட்டுக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு மோன நிலையில் தான் அலங்காரம் நடக்கும். தியானத்தைப் போன்ற ஈடுபாட்டுடன் செய்கிற அந்தப் பணியினும் உயர்ந்தது உண்டோ என வியந்தபடி பகவானுக்குச் சேவை செய்யும் ஆனந்தத்துடன் வறுமையிலும் களிப்புடன் இருந்தார் அவர்.

மிகவும் பிரசித்தி இல்லாதது அந்தக் கோயில். சிக்கல் வருகிறவர்கள் அதன் மிக அருகிலேயே அமைந்திருக்கும் அந்தக் கோயிலின் அருமையை அறியாமலேயே சென்று விடுவார்கள். உட்புறத்தில் மெயின் ரோட்டிற்கு உள்ளே ஒரு சந்து வழியாகப் பாதை அமைந்திருந்த அந்தக் கோயில் பாழடைந்து இடிபாடுகளுக்கு இடையே இருந்தது. அந்தக் கோயிலின் மூலவர் முருகப் பெருமான் அப்படி ஒரு சுண்டியிழுக்கும் அழகு. ஒரே கல்லில் முருகனின் ஆறு முகங்களும், பன்னிரண்டு கரங்களும், நரம்போடும் கால்களும், மயில்மேல் அமர்ந்திருக்கும் பாங்கும், மயிலின் வாய் பாம்பைக் கவ்விக் கொண்டிருக்கும் நேர்த்தியும் எந்தச் சிற்பி செதுக்கினானோ என ஆச்சரியப்பட வைக்கும் ஓர் அதிசயம். கிருத்திகையன்று மட்டுமே விசேஷம் என்பதால் கொஞ்சம் கூட்டம் வரும். கூட்டம் வருவதைப் பற்றியெல்லாம் குருக்கள் கவலைப்பட்டதில்லை. தட்டில் விழுகிற காசுகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு ஒரு நாளும் தீபாராதனை காட்டியதில்லை. அவரைப் பொறுத்தவரை அது தியானமாய்ப் பொங்கி வழியும் ஒரு வழிபாடு. அந்த முருகனை அங்கம் அங்கமாய்க் கற்பூர ஒளியில் காட்டி அந்தச் சிற்பத்தின் மகிமையை நளினத்துடன் விளக்கும் போது கடவுளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பது போல் ஓர் உணர்வு.

எப்போதும் அந்த முகத்தில் உதிர்கிற ஒரு புன்சிரிப்பு. அந்தக் கோயிலின் தலபுராணத்தைக் கூறும்போது ஏதோ தன் குடும்பப் பெருமையைக் கூறுவது போல் ஓர் உற்சாகம். சின்னக் குழந்தையைப் போல் ஆகிவிடுவார். அந்தப் பெருமையெல்லாம் தனக்கே சொந்தம் என்பது போலவும், அந்தச் சிற்பத்தைத் தானே செதுக்கியது போலவும் இருக்கும் அவரது பேச்சு.

அர்ச்சனை செய்யும் பொழுது அவர் மந்திரங்களை உச்சரிக்கும் அழகே தனி. ஸ்பஷ்டமாய், ஒவ்வொரு வார்த்தையும் மெல்ல உதிர்ந்து விழுகிற பழுத்த இலையாய் வந்து விழும். இசை நயத்துடன் அவர் சொல்கிற மந்திரங்கள் ஒவ்வொன்றும் இறைவனின் பதமலர்களைச் சென்று சேர்ந்து அர்ச்சிக்கின்றனவோ என நினைக்கும் அளவுக்கு, அற்புதமாய் அந்த இசை காதுகளை வந்து நிறைக்கும்.

புனுகு, ஜவ்வாது, அரகஜா, சந்தனாதி தைலம் ஆகியவற்றிற்கு மட்டுமே இந்த அளவு அழகைச் சேர்க்கும் சக்தியிருக்கிறதா? உதடுகளில் ஒரு குமிழ்ச் சிரிப்பை உண்டாக்க முடியுமா? நிச்சயம் முடியாது. ஆனால் அவற்றிற்கும் மேலாக இழையோடிக் கொண்டிருக்கும் சிலந்தி இழையைப் போல் மென்மையாக, ஆனால் திடமாக, குருக்களின் கைகளில் இருந்து உற்பத்தியாகும் லாகவம்.

இப்போதெல்லாம் குருக்களால் முன்பு போல் முடியவில்லை. கோயிலும் பழுதாகிக் கொண்டேயிருந்தது. சுவர்களெல்லாம் விரிசல்கள் விடத் தொடங்கிவிட்டன. செடிகள் வேறு முளைத்து வேர் விடுவதால் சில இடங்கள் வாயைப் பிளந்து காட்டிக் கொண்டிருந்தன. பஜனை என்றோ விசேஷ பூஜை என்றோ இருந்த காலம் போய் இப்போது கோயிலுக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.

குருக்களுக்கும் வயதாகி விட்டது. கால்களில் சற்று வீக்கம் வரத் தொடங்கிவிட்டது. யாராவது "டாக்டரிடம் சென்று செக்அப் செய்து கொள்ளுங்கள்" என்றால் குருக்கள் அதற்கு "சதா சர்வகால


அமரர் சின்னிகிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி '94 - இரண்டாம் பரிசு ரூ 1500/- பெற்ற சிறுகதை

மும் பகவானோட சேவையைத் தானே பண்ணிண்டிருக்கேன்? அவனுக்குத் தெரியாதா நேக்கு என்ன பண்ணனுமுன்னு? மனுஷாளப் போய்ப் பார்த்து என்ன பிரயோஜனம்?" என்பார். அது அவராகச் சொல்வதில்லை. அவருக்குத் தெரியும், தனக்கு நிச்சயம் ஏதாவது கோளாறு இருக்க வேண்டுமென்று. ஆனால் அது தெரியாத வரைக்கும்தான் நல்லது. பணத்தைத் தொலைத்தவர் ஒருகால் இந்த இடத்தில் வைத்திருப் போமா என நினைக்கிற இடத்தைத் தேடாமலேயே நம்பிக்கையை கைகளுக்குள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பது மாதிரி ஓர் எண்ணம்.

குருக்களுக்கு இரண்டு குழந்தைகள். பெரிய மகனுக்கு பூஜை. மந்திரங்கள் எல்லாம் முறையாகச் சொல்லிக் கொடுத்தார். 'அலங்காரத்தை மாத்திரம் நோக்கு சொல்லித் தரமாட்டேன். நீயே நன்னா கவனிச்சுக் கத்துக்கோ. இதெல்லாம் உபவாசம் பண்ணாக்கூட வராது. யாருக்கு சிரத்தையும், பகவானோட அனுக்கிரஹமும் இருக்கோ அவாளுக்குத்தான் வரும்" என்று பிடிவாதமாகச் சொல்லி விடுவார்.

இரண்டாவதாக ஒரு பெண். சற்று தாமதமாகப் பிறந்தவள். தொடக்கப்பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறாள். ஒன்றுமே தெரியாத கள்ளம் கபடமில்லாத மனைவி. அக்ரஹாரத்தில் அக்கம் பக்கத்தினர் வைத்திருக்கும் பெயர் "லூஸ் மாமி". குருக்கள் தன் மனைவியையும் இன்னொரு குழந்தையாகவே பாவித்து வருகிறார். அமாவாசை, பௌர்ணமி நாள்களில் சற்று மனநலம் பாதிக்கப்படும். மோட்டு வளையையே பிரக்ஞையற்றுப் பார்க்கிற நேரங்களில் புடைவை நழுவுவதுகூடத் தெரியாது. அந்த மாதிரி நேரங்களில் குருக்கள்தான் புடைவையைச் சரிசெய்து கொசுவம் வைத்துக் கட்டுவார். அப்போதும் அவர் முகத்தில் அம்மனுக்குச் சேலை சாத்துகிற மாதிரி அதே மலர்ச்சி முகத்தில் தெறிக்கும்.

குருக்கள் மகன் பத்தாவது படித்துக் கொண்டிருக்கிறான். அப்படி ஒன்றும் படிப்பில் சுட்டி



என்று சொல்ல முடியாது. "இந்தக் காலத்தில் படிச்சவாளுக்கே வேலை எதுவும் கிடைக்க மாட்டேங்கறது. இதில் இவன் என்ன பண்ணப் போறானோன்னு நேக்கு பயமாயிருக்கு" என்று சமயத்தில் குருக்களின் மனைவி சொன்னால் சாந்தமாகக் குருக்



கள். "அவனுக்கு என்ன பகவான் விதித்திருக்கிறானோ அது நடக்கும்" எனச் சொல்வார்.

அன்றைக்குக் கோயிலில் அபிஷேகம். வரிசையாக நல்லெண்ணெய், சிகைக்காய், அரப்புப் பொடி, மஞ்சள் பொடி, மாப் பொடி, அபிஷேகப் பொடி, நாட்டுச்சக்கரை, தேன், இளநீர், பால், தயிர், எலுமிச்சம்பழம் என்று செய்து கொண்டே வந்தவர் திடீரெனத் தலைசுற்ற, சட்டென்று உட்கார்ந்து விட்டார். கண்களெல்லாம் இருள்வது போல ஒரு மயக்கம். கசக்கிப் பிழிந்தது போல் ஒரு சோர்வு. தூணைப் பிடித்தபடி, கண்ணை மூடி உட்கார... என்ன நடக்கிறது என்றே கொஞ்ச நேரத்திற்குத் தெரியவில்லை.

விழித்துப் பார்த்தபோது ஒரு சிறு கூட்டம். "என்ன ஆச்சு அய்யரே?" என்றான் கோயில் வாட்ச்மேன். பக்கத்தில் இரண்டு பேர் விசிறிக் கொண்டிருந்தனர். "ஒண்ணுமில்லே. நேக்குக் கொஞ்சம் கேஸ் ட்ரபிள். காலைலேர்ந்தே ஒரு மாதிரியா இருந்தது" என்று எழுந்து பஞ்சாமிர்தத்தையும் ஊற்றி அபிஷேகம் செய்து முடித்தார். அபிஷேகம் செய்ய வந்திருந்த மிராசுதார் ஓர் ஐம்பது ரூபாய் நோட்டைத் தந்து, "ஐயரே! உடம்பை அப்படியே கவனிக்காம உட்ராதீர். போய் நாகப்பட்டினத்தில பெரிய டாக்டரா பார்த்துக் காட்டும்" என்று சொல்லிவிட்டுப்போனார்.

வீட்டிற்கு வந்ததும் குருக்களின் மனைவி, "ஏன்னா ஏதோ மயக்கம் போட்டு விழுந்திட்டேளாம். பக்கத்தாத்து பங்கஜம் மாமி வந்து சொன்னா..." என்று கலக்கத்துடன் கேட்டதற்கு, "அதெல்லாம் ஒண்ணுமில்லேடி. நேக்கு என்ன பிரச்னை? குத்துக்கல் மாதிரி நன்னாயிருக்கேன். கொஞ்சம் தலைவலி. அதுதான் சித்த உக்கார்ந்தேன்" என்று சொல்லி விட்டுப் போய்ப் படுத்தார்.

கொஞ்சம் கொஞ்சமாகக் குருக்களுக்குப் பயம் அதிகமானது. முன்பு போல் உடம்பு இல்லை என்பது பட்டவர்த்தனமாய்த் தெரிந்தது. இப்போதெல்லாம் மாரில் அடிக்கடி வலி வந்து



திரு வெ.இறையன்பு
ஐ.ஏ.எஸ்.,
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு அதிகாரி.
வயது 31.

விடுகிறது. யாருக்கும் சொல்லாமல் மாவிலங்கொம்பை அரைத்து அரைத்துப் பூசி வலியைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. தலை சுற்றல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. கால்கூட வீங்கி விடுகிறது. ஏதோ பெரிய கோளாறு தனக்கு இருக்கிறது என்பது அவருக்குப் புரிந்து போனது. ஆனால் எப்படியும் நகரத்துக்குப் போனால் அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட் என்று இருக்கிற வியாதி பெரியதாகுமே தவிர குணமாவது கஷ்டம். பெரிசா ஏதாவது ஆபரேஷன் அது இதுன்னா எங்கேயிருந்து கொண்டு போய்க் கொட்ட முடியும்?

குருக்களையும் அறியாமல் இப்போது தான் அவருக்காக அவர் கண்களிலிருந்து தண்ணீர் வழிந்தது. புரண்டு படுத்தார். நெஞ்சு வலிப்பதைப் போல் தோன்றியது. தான் போய் விட்டால் இந்தக் குடும்பம் என்ன ஆகும் என நினைத்துப் பார்த்தார். ஒன்றும் தெரியாத அப்பாவி மனைவி. சின்னப் பெண். இவர்களை எப்படித் தன் பையன் காப்பாற்றப் போகிறான்? நன்கு படித்துத் தொலைந்தாலாவது பரவாயில்லை. அவனும் படிப்பில் கவனம் செலுத்துவது போல தோன்றவில்லையே. ஒருநாளும் தன் மகனைத் தான் திட்டிப் படிக்க வைத்திருக்கிறோமா? நாம் தான் அவன் சரியாகப் படிக்காததற்குக் காரணம். இன்று வந்தால் ஒரு பிடி பிடிக்க வேண்டும்.

மதியம் பள்ளி முடிந்து சாப்பிட வந்த பையன் ரேங்க் ஷீட்டில் குருக்களின் கையொப்பம் வாங்குவதற்கு அவரிடம் எடுத்து வந்தான். குருக்கள் என்றுமில்லாமல் ரேங்க் ஷீட்டை வாங்கிப் பார்த்தார். எல்லாப் பாடத்திலும் பாஸ் மார்க்கிற்கு மேல் சற்று மூக்கை நீட்டிக் கொண்டிருக்கும் மதிப்பெண்கள். சர்ரென்று ரேங்க் ஷீட்டை மகன் முகத்தில் விட்டெறிந்தார். எப்போதும் சாந்தமாயிருக்கும் தன் தந்தையிடம் அப்படியொரு கோபத்தை எதிர்பார்க்காத அவன் ஒரு நிமிடம் நடுங்கி விட்டான். "ஏண்டா! நோக்குக் கொஞ்சமாவது பொறுப்பிருந்தா இப்படிச் செய்வியா? நன்னாப் படிக்காம இந்தக் காலத்தில் என்ன பண்ண முடியும்? கொட்டிக்கத் தெரியுதே. ஒழுங்காப் படிக்க வேணாமா?". அவர் குரல் திட்டுவதற்காக உச்சஸ்தாயியில் போனதை அன்றுதான் அவர் குடும்பம் தரிசித்தது.

சாப்பிடாமலே அவன் பள்ளிக்குப் போய்விட்டான். அதிகமாகத் திட்டி விட்டோம் எனத் தோன்ற தானும் சாப்பிடாமலேயே படுத்து அசதியில் அப்படியே தூங்கிப் போனார். விழித்த பொழுது லேசாக இருட்டி இருந்தது. "எப்படி என்னைக்குமில்லாமே இத்தனை நாழி தூங்கினேன்? லக்ஷ்மி! ஏண்டி என்னை எழுப்பலே? ஆறுகால பூஜைக்குப் போகணுமே. லேட்டாயிடுத்தே" என எழுந்து குளித்து முடித்து அவசரமாய்க் கோயிலுக்கு ஓடினார்.

கோயிலில் பூஜை நடந்து கொண்டிருந்தது. முருகன் அழகாய்ச் சிரித்துக் கொண்டிருந்தான். அவர் மகன் பூரணமாய் பூஜை நடத்திக் கொண்டிருந்தான். ஒவ்வொரு மந்திரமும் ஸ்பஷ்டமாய் இசையாய் வந்து விழுந்தது. தன்னை நோக்கிப் புன்முறுவலுடன் முருகன் வருவதைப் போல் அவருக்குப் பட்டது. கண்களை மூடி, தியானமாய் நீர் வழிய மெய் மறந்து நின்றார். அந்த அலங்

காதல் மலரே...

— கவிஞர் இரவிபாரதி



உற்றவளே என்நெஞ்சில் ஓவிய மாகி
உருவெடுத்த பைங்கிளியே காதல் மலரே!
வற்றாத பேரழகே! அமுத ஊற்றே!
வடிவழகே எனையாளும் அன்புப் பாவாய்!

காலங்கள் மாறிடினும் நெஞ்சம் போட்ட
கோலங்கள் மாறாவாம்! இணைக்கும் அன்புப்
பாலங்கள் போலநாம் ஒன்று சேர்ந்து
பவனிவரப் புறப்படுவோம், காதல் தேரில்!

கட்டழகுப் பெட்டகமே, கவிதை ஊற்றே!
கனிஇதழில் தேன்சுமக்கும் கன்னிப் பாவாய்!
மொட்டவிழ்ந்த பின்னாலே பட்டுப் போலே
முன்வந்து எழில்கூட்டும் முல்லைப் பூவே!

பருவத்துத் தோட்டத்தில் பூத்துச் சிரிக்கும்
பனிமலரே! பளிங்குஉடல் பவளத் தேரே!
மருவற்ற உள்ளத்தால் தொட்டுத் தொட்டு
மடிமீது தவழ்கின்ற தென்றல் காற்றே!

உன்னழகைப் பார்க்கின்ற நேர மெல்லாம்
ஓடிவந்து பாய்கிறது கங்கை வெள்ளம்!
பின்னழகைக் காட்டிநடை பயிலும் போது
பேதலித்து நிற்கிறது எந்தன் உள்ளம்!

என்மானே இளமானே என்றும் நெஞ்சில்
எழில்காட்டி நிற்கின்ற காதல் மானே!
பொன்மானே புகழ்மானே புன்னகைத் தேரில்
புறப்பட்டு வருகின்ற புள்ளி மானே!

என்னுயிரை உன்னுயிரில் எழுதி வைத்தேன்
இன்னுயிரைப் பொன்னுயிரில் இணைத்து வைத்தேன்
மண்ணுலகை விட்டு நாம் பிரிந்த பின்னும்
மறுபடியும் சந்திப்போம் விண்ணு லகத்தில்!

காரம், தாம் வழக்கமாய்ச் செய்யும் அலங்காரத்தைவிட அழகாய், கம்பீரமாய், தெய்வீகமாய், கவர்ச்சியாய், பிரம்மாண்டமாய், மலர்ச்சியாய் இருப்பதாய் அவருக்குப் பட்டது.

அன்று இரவு குருக்களின் பாதங்களை இரண்டு சொட்டு சூடான கண்ணீர் நனைக்க... எழுந்தார்.

"அப்பா! என்னை மன்னிச்சிடுப்பா. நேக்குப் பாடம் வரமாட்டேங்கறது. நேக்கு நீ சொல்லிக் கொடுத்த மந்திரம்தான் எப்பவும் காதுல ஒலிச்சிண்டிருக்கு. எதைப் படிச்சாலும் அது ஏறமாட்டேங்கறது. பரீட்சை எழுதறப்போ நீ செய்யற அலங்காரத்தோடு அந்த சுப்ரமணியன் வந்து சிரிக்கிற மாதிரி தோண்றதுப்பா. என்னால முடியலைப்பா. என்னை மன்னிச்சிடுப்பா".

குருக்களுக்கு ஒரு நிமிடம் அதிர்ச்சியாய் இருந்தது. அந்த ஒவ்வொரு சொல்லும் பிரணவ மந்திரத்தின் பொருளை உணர்த்தியதுபோல் அவர் செவிகளில் விழுந்தது. மகனை வாஞ்சையோடு தடவிக் கொடுத்தார். அவருக்கு அந்த சுப்ரமணியன் எப்படியும் காப்பாற்றுவார் எனும் பழைய நம்பிக்கை மீது படிந்திருந்த புகை விலகியது போல் தோன்றியது. அந்த நம்பிக்கை போதும். அவர் கைகளில் வலுவிருக்கும் வரை அந்தக் குறும்புச் சிரிப்பு முருகனின் இதழ்களிலிருந்து உதிர்ந்து கொண்டேயிருக்கும், முடிவில்லாமல்தொடர்ந்து...

அன்னதான புவனேஸ்வரி

புவனேச்வரிதாசன்

பனிமலையான இமயத்தின் உயர்ந்த பகுதியில் மானஸ ஸரஸ் என்ற ஓடையிருக்கிறது. அதில் அன்னப்பட்சிகள் வசிக்கும். மிகத் தூய நீரில் விருப்பம் கொண்ட அவை வேறிடத்தில் வசிக்கப் பிரியப்படுவதில்லை. மானஸம் மிகத் தெளிந்த நீருடையது. ஆதலால் அன்னங்கள் அங்குதான் வசிக்கும். புவனேஸ்வரி தேவியும் ஓர் அன்னப்பேடு. அவள் வசிக்கத் தக்க மானஸ ஓடையாகப் பக்தர்களின் மனத்தைத் தேர்ந்தெடுத்தாள். பக்தர்கள் மனம் அன்பால் மிகத் தூய்மையானது. மிகத் தூய்மையான அடியார்களின் மனத்தையே மானஸ ஓடையாக மதித்து அதில் அன்னப்பேடு போல் மகிழ்ந்து உலவுகிறாள் புவனேஸ்வரி. புவனேஸ்வரி தேவி அமரும் பீடங்களில் அடியார்களின் மனம் முதலிடம் பெறுகிறது. தமது மனமாகிய பீடத்தில் யோக மாயா புவனேஸ்வரியைக் கொலுவீற்றிருக்கும்படி செய்த பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள், தம்மை அண்டி வரும் மெய்யடியவர்கள், பக்தர்கள் உய்யவேண்டி ஸ்ரீபாரத்வாஜ ஆச்ரமம் என்கிற ஸ்ரீ யோக மாயா புவனேஸ்வரி பீடத்தை, சென்னை அம்பத்தூர் ரெட்ஹில்ஸ் சாலையிலுள்ள கள்ளிக்குப்பம் கங்கைநகரில் நிறுவியிருப்பது கலியுகத்தில் கண்கண்ட அற்புதமாகும்.





இந்த பீடத்தில் பௌர்ணமி தோறும், அஷ்டமிதோறும் நடக்கும் விமரிசையான பூஜைகள், யாகங்களைக் காணவே பாரத தேசம் மட்டுமல்லாது, வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் கூடுவர். பௌர்ணமியன்று நடக்கும் அபிஷேகத்தைக் காணவும், அஷ்டமியில் நடக்கும் சண்டிபாராயணத்தைத் தரிசிக்கவும் காணக் கண்கோடி வேண்டும். மூன்று பௌர்ணமி பூஜையைத் தொடர்ந்து தரிசனம் செய்வதால் எண்ணிய காரியம் நிறைவேறும் என்பது பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகளின் அருள்வாக்காகும். இந்த ஆசிரமத்தில் ஆயிரக்கணக்கில் வரும் பக்தர்களுக்கு பௌர்ணமி தினத்திலும் சரி, அஷ்டமி தினங்களிலும் சரி அன்னைக்கு நிவேதனம் செய்யப்பட்ட அமுத உணவு அனைவர்க்கும் பரிமாறப்படுகிறது. சுவாமிகளின் நோக்கமெல்லாம் பூஜையைத் தரிசிக்கிற அத்தனை அடியார்களுக்கும் அன்னதானம் வழங்கப்படவேண்டும் என்பதே. அன்னதானத்தின் மகிமையை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாது. அம்பிகை புவனேஸ்வரிக்கு அந்நதா என்ற ஒரு நாமமுண்டு. நம்மை வாழ வைப்பது உணவாகிய அன்னம் (சாப்பாடு) தேவி அன்னபூர்ணா. ஒருகையில் உணவு நிரம்பிய பாத்திரமும் மற்றொரு கையில் அதனை வாரிவழங்கும் கரண்டியும் கொண்டவள். அவள் அளிக்கும் உணவு ஊட்டமளிப்பதுடன் ஞானமும் வைராக்கியமும் தரவல்லது. அன்னமளிப்பவரின் மனப்பான்மையும் அளிக்கப்படும் அன்னத்துடன் அதனைப் பெறுபவரைச் சேரும். புவனேஸ்வரி பேரறிவு வடிவினள். அவள் தரும் உணவு ஞானமூட்டவல்லது. "சங்கரரது உயிரைப் போன்ற பிரியநாயகியே! அன்னம் நிரம்பியவளே! எப்போதும் எல்லாம் நிரம்பியவளே! ஞானமும் வைராக்கியமும் நிலைத்திருக்க எனக்கு உணவிடுவாயாக!" என்று ஆதிசங்கரர் அன்னபூர்ணாஷ்டகத்தில் நெக்குருகப் பாடுகிறார். இந்த ஸ்லோகத்தைக் கூறுவதால், கூறி அன்னதானம் செய்வதால், அன்னதோஷம் வராது. தேவியே அன்னமளிப்பதாகப் பாவித்து உண்பதால் உடல்நோய் வராது. அறிவும் வைராக்கியமும் நிலைத்திருக்கும்.

மழை முதலியவற்றைத் தரும் தேவர்களுக்கு யாகத்தை நடத்தித்



திருப்திப்படுத்த வேண்டும். நம் குலத்தைக் காக்கிறவர்களும் வம்சத்தைச் செழிக்கச் செய்பவர்களுமான ரிஷிகளுக்கு தர்ப்பணத்தால் திருப்திப்படுத்த வேண்டும். வாழையடி வாழையென வாழ வைக்கும் பித்ருக்களுக்கு (மறைந்த மூதாதையர், முன்னோர், பெற்றோர்) கட்டாயம் மற்றவர்க்கு அன்னமிட்டே திருப்திப்படுத்த முடியும். இந்த மூவரும் பூமியைக் குளிரச் செய்தும், குலத்தை வாழ வைத்தும், குடும்பத்திற்கு க்ஷேமத்தைச் செய்தும் பிரயோஜனப்படுகின்றனர். ஆனால் நாம் காலப் போக்கில் அவசரச் சூழ்நிலையில், கர்மபூமியாகிய இந்தியாவை விட்டு வெளிநாட்டில் இருப்பதால் மேற்கண்ட தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பித்ருக்களுக்கும் திருப்தி செய்தோம், கர்மம் செய்தோம், கடமையைச் செய்தோம் என்றில்லை. பித்ருக்களுக்கு சிரார்த்தம் (திவசம்) ஒழுங்காக அல்லது சரிவரச் செய்ய முடியாமல் போகிறது. இதைச் செய்ய முடியவில்லையே என ஏங்குபவர் பலர். இப்படி தவிக்கும் பக்தர்களுக்கு இந்த ஸ்ரீபாரத்வாஜ ஆசிரமத்தில் சரியான ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் அன்னதானக் கட்டளை என்ற - பக்தர்களுக்கும், பசுவிற்கும் உணவளிக்கும் உன்னத ஏற்பாடு. தேவர்கள் வடிவாயும், ரிஷிக்ள் ரூபமாகவும், பித்ருக்கள் (முன்னோர்கள்) வடிவாகவும் இருப்பவள் என்பதை லலிதா ஸஹஸ்ரநாமம் கூறும். கோமாதா - இங்கு அம்பிகை உறைகிறாள். கோமாதாவே அம்பிகைதானே! கோவின் (பசுவின்) உடம்பில் சத்தியலோகம், வைகுண்டம், கைலாஸம் ஆகிய அனைத்தும் உறைகின்றன. தேவர்கள், பித்ருக்கள், ரிஷிகள் யாவரும் வாசம் செய்கின்றனர். ஆக அன்னத்தை - உணவை பக்தர்களுக்கும் பசுக்களுக்கும் அளிப்பதன் மூலம் எப்பேர்ப்பட்ட பாக்கியத்தை அனுபவிக்கிறோம்! முன்னர் கூறிய அத்தனை பலனும் நம்மை வந்து சேர்கிறது. வந்தடைகிறது. ஆக அம்பிகையைத் தொழுதால் போதும், அவளுக்குப் படைக்கப்பட்ட அன்னத்தைப் பக்தர்களுக்கும், பசுவிற்கும் அளித்தால் போதும், கர்மம் செய்த பலன் கிட்டுகிறது. கடமை செய்த திருப்தி உண்டாகிறது. பூமாதாவும், ஜகன்மாதாவும் வாசம் செய்யும் ஸ்ரீபாரத்வாஜ ஆசிரமத்தில் இதைச் செய்யலாமே!

மறைந்த முன்னோர்களின் பெற்றோரின் நினைவு நாளைக் கொண்டாட முடியாமல் போகிறதே என்ற கவலை வேண்டாம். குறிப்பிட்ட அந்த நினைவு நாளில் அன்னை புவனேஸ்வரிக்கு நிவேதனம் செய்யப்பட்ட அமுத உணவு பக்தர்களுக்குப் பரிமாறப்படும், பசுக்களுக்கும் உணவு அளிக்கப்படும். அன்னதானம் என்பதே பசுக்களுக்கும் சேர்த்ததுதான். மிக எளிதான இந்தக் கைங்கர்யத்திற்கு பக்தர்கள் விரும்பும், பிறந்த நாளிலும் சரி, விவாக தினத்திலும் சரி, ரூபாய் இரண்டாயிரத்தை ஒருமுறை வைப்பு நிதியாகச் செலுத்தி, மேற்குறிப்பிட்ட நாள்களில் அன்னதானம் செய்யலாம். ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து வருடத்திற்கொரு முறை கிடைக்கும் வட்டியிலிருந்தே இந்த அன்னதானம் நடக்கும். தொகையை ஸ்ரீபுவனேஸ்வரி மந்த்ரம் என்ற பெயருக்கு அனுப்பலாம். இது ஒரு டிரஸ்ட் அமைப்பாகும்.

இம்மாதிரி அருள்புரியும் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள் தரிசனம் பாக்கியத்தைத் தரவல்லது. இவரிடம் அருள் பெற்ற பக்தர்கள் அல்லல் தீர்ந்து ஆனந்தமடைந்துள்ளனர். இன்னல் நீங்கி இன்பம் பெற்றுள்ளனர். இந்த மகானின் தேஜஸின் ஒளி பட்டாலே பாபம் பறந்து போகும். ஒரு நாளா இரண்டு நாளா? அன்னையை ஐம்பது வருடமாய் ஆராதனை செய்த அவதார உருவம் அது. புனிதத் திருமேனி அது. அந்த மகானின் வாரிசாய் மலர்ந்தவரே ஸ்ரீபரத்வாஜ சுவாமிகள்.

அன்பும் அருளும் சேர்ந்து ஒளிரும் கண்கள். அம்பிகையின் அற்புதத்தை இவர் சொல்லிக் கேட்க வேண்டும். ஆனந்தம் பொங்கும். தந்தை புவனேஸ்வரி சுவாமிகளின் அருளமுதத்தை அப்படியே பெற்ற ஞானக்கன்று. இவர்களின் உபாசனையில் யோக மாயா புவனேஸ்வரி குளிர்ந்து பக்தர்களின் மனக்குறை நீக்குகிறாள். சம்சாரமாகிய குடும்பச் சேற்றிலிருந்து மூழ்கியவனைத் தூக்கி வெளியே விடுவதில் திறமையுள்ளவள் இந்தப் புவனேஸ்வரி தேவியே! துர்ப்பாக்கியமாகிய இலவம் பஞ்சைப் பறக்கச் செய்து, சிதறச் செய்யும் சுழற்காற்றாக இருக்கும் தேவியும் இவளே! மூப்பாகிய இருட்டைப் போக்கும் கதிரவனின் ஒளியாக இருப்பவளும் இவளே! பாபமென்னும் காட்டை அழிக்கும் காட்டுத்தீயாக இருப்பவளும் இவளே! ஸம்ஸாரம் என்னும் காட்டுத்தீயை அணைக்கும் அம்ருத மழையும் இவளே! எது பொருந்தாதோ அதைப் பொருந்தச் செய்பவள்! எதிர்பாராத முடிவைத் தருபவள்! ராஜமாதா புவனேஸ்வரியைச் சரணடைவோம். மாதாராணியைத் தரிசிக்க வாருங்கள்! அவளை நினைந்து உணர்ந்து, நெகிழ்ந்து, அன்பு நிறைந்து போற்றுவோம்! அன்னதான புவனேஸ்வரியைப் போற்றுவோம். நீங்காத செல்வம் நிறைந்து இருப்போம்!



எஸ்.ஐ.சி. குருப்பின் ஊக்கப் பரிசு விழா

எஸ்.ஐ.சி. குருப் நிறுவனத்தின் ஊக்கப்பரிசுகள் வழங்கும் விழா சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

இசை அமைப்பாளர்கள் எம்.எஸ். விஸ்வநாதன் – ராமமூர்த்தி தொடங்கி வைத்த இனியவன் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு சென்னை அரசுப் பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் மேஜர் டி. ராஜா தலைமை தாங்கினார்.

எஸ்.ஐ.சி. குருப்பின் தலைவரும், கந்தகோட்டம் முதன்மை அறங்காவலருமான பி. பாலசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றார்.

திரைப்பட இயக்குநர்கள் பி.வாசு, ஷங்கர், நடிகை இந்து, பத்திரிகையாளர் மஞ்சுளா ரமேஷ், வலம்புரி ஜான் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

ஆட்டோ, ஸ்கூட்டர், 40 கிராம் தங்கச் சங்கிலி, கலர் டி.வி., பிரிஜ் போன்ற 113 ஊக்கப் பரிசுகள் விழாவில் வழங்கப் பட்டன. நிறுவனத்தின் இயக்குநர் ஆர். லட்சுமணசாமி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியை, தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் செந்தமிழ் அரசு தொகுத்து வழங்க – விழா ஏற்பாடுகளை கே.சுந்தரம், ஆர், விவேகானந்தன், டாக்டர் எஸ். பிரகாஷ், பி. ராமலிங்கம், ஆர்.பி. பாரி ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். ●

18 ஆவது புத்தகக் காட்சி

தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் – பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 18ஆவது புத்தகக் காட்சி தொடக்க விழாவில் தமிழக சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஏ. கிருஷ்ணசாமி கலந்துகொண்டு புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்தார்.

சங்கத் தலைவர் எஸ். சந்திரசேகர் அனைவரையும் வரவேற்றார். அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எம். அனந்த கிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார்.



சென்னை, அரசு காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் திருமதி ஜெ.எஸ். கௌரி, நல்லி சில்க்ஸ் அதிபர் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

விழாவில் கலைமாமணி விக்கிரமன், எஸ். முத்தையா, கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் நீண்டநாள் இலக்கிய சேவையைப் பாராட்டி, பொன்னாடை அணிவித்து, பரிசளித்து கௌரவிக்கப் பட்டனர்.

சங்கச் செயலாளர் அகிலன் கண்ணன் நன்றி கூறினார். ●

குன்றக்குடி
பெரியபெருமாள்



விகேயென் நிறுவனம்

வித்தியாசமான தொழில் நிறுவனம் விகேயென்



விகேயென் அதிபர் திரு. கண்ணப்பன

உண்மைதான்!

"அப்படியா?" என அதிசயித்துக் கேட்க வைக்கும் ஓர் அரிய தொழில் நிறுவனம் - விகேயென்!

'எப்படி?' என்கிறீர்களா?

எங்கேயாவது ஒரு தொழிலதிபதி, தமது நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை இலட்சாதிபதிகளாக உருவாக்கி, உள்ளம் உவக்கும் ஒரு 'பெருஞ்செயல்' நிகழ்ந்ததுண்டா?

வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளரும், ஒரு தொழில் அதிபராக விளங்க வேண்டுமென, உரிய உதவியும் ஒத்துழைப்பும் வழங்கும் அரியதோர் அதிபரை எங்கேனும் பார்த்ததுண்டா?

நிகர இலாபத்தில் எழுபது சதவிகிதத்தை, உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கை நலத்திற்கென உவந்தளிக்கும் நிறுவனத்தைக் கண்டதுண்டா?

இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வேலை நிறுத்தமோ, தொழிற்சாலை நிறுத்தமோ இன்றி, இணக்கத்துடன், ஆண்டிற்கு ஆண்டு அபரிமிதமான வளர்ச்சியுடன் இயங்கி, நிகழாததை நிகழ வைத்து, பார்க்க முடியாததைப் பார்க்கச் செய்து, காண இயலாததைக் காண வைத்து வருகின்ற திருச்சிக்கு அருகே, துவாக்குடியிலுள்ள 'விகேயென்' பாய்லர்ஸ் - தொழில் நிறுவனங்களின் வரலாற்றிலேயே தொழத்தக்கதொரு பெருமை கொண்டு திகழ்கிறது. சொல்லப் போனால் - 'விகேயென்' ஒரு வித்தியாசமான தொழில் நிறுவனம்.



தொழிலாளர்களுக்கு இலவசக் குடியிருப்புகள்

இதுவரை பதினான்கு தொழிலாளர்கள் இலட்சாதிபதிகளாக உருவாக்கம் பெற்றுள்ளனர். தொழிலாளர்களில் சிலர் தொழில் அதிபர்களாக வளர்ந்து வருகின்றனர். இல்லக் குடியிருப்பு இலவசம் முதலாக, நல்ல பல சலுகைகளைப் பெற்று, அல்லல் ஏதுமின்றித் தொழிலாளர் ஆனந்தமாய் வாழ்கின்றனர்.

வருத்தம் இருந்தால்தானே, அங்கே வேலை நிறுத்தம் வேர் விடும்? பொருத்தமான நடைமுறைகளைப் பேணுவதில் கருத்தும் கவனமும் கொண்டுள்ள பெருமகனாரை அதிபராகக் கொண்டதால், 'விகேயென்' பாய்லர்ஸ் நிறுவனம் வித்தியாசமான தொழில் நிறுவனமாக மட்டுமின்றி, தொழில் அமைதிப் பான்மைக்கும், தொழில் வளர்ச்சி மேன்மைக்கும், இணக்கமான அணுகுமுறையைப் பேணிக் காத்து வரும் ஓர் எடுத்துக்காட்டான நிறுவனமாகவும் ஒளிர்கின்றது. இத்தகைய புகழுக்குரிய நிறுவனத்தின் போற்றுதலுக்குரிய தொழில் அதிபரைப் பற்றிக் கொஞ்சம் புரிந்துகொள்வோமே!

செட்டிநாட்டுப் பகுதியில் பெரும்பான்மையும் நகரத்தார் பெருமக்கள் வாழ்ந்து வருகின்ற ஒரு சிற்றூர் கண்டரமாணிக்கம். அவ்வூரில் செல்வத்தோடும் செல்வாக்கோடும் வாழ்ந்த நகரத்தார் பெருமகனார் இலட்சுமணன் செட்டியாருக்கும், கல்யாணி ஆச்சிக்கும் 1946ஆம் ஆண்டு பிறந்த கண்ணப்பன், தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியில் பயின்ற பின்னர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'பி.இ.' பட்டப் படிப்பில் இணைந்து, 1970ஆம் ஆண்டு 'சிவில்' துறையில் பட்டம் பெற்றார். பட்டம் பெற்றவுடன் வேலை வாய்ப்புக் கருதி, விண்ணப்பங்களை அனுப்புவதுதானே இளைஞர்களின் பழக்கம்? அந்தப் பழக்கத்திற்குக் கண்ணப்பனும் ஆட்பட்டார். திருச்சியில் 1965ஆம் ஆண்டு நிறுவிய 'பாரத் ஹெவி இன்ஜினியரிங் லிமிடெட்' அதாவது 'பி.எச்.இ.எல்' நிறுவனம் பிரபலமாக வளர்ந்து கொண்டிருந்தது. அந்த நிறுவனத்திற்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார் கண்ணப்பன். அதன் முடிவு தெரியும் முன்னரே, அப்போதைய தொழில் அமைச்சர் மாதவன் திருச்சியில் கூட்டிய தொழில் முனைவோர் கூட்டத்தில் கலந்து கொண்டார் கண்ணப்பன்.

பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவை, தமிழகத்தில் தொழிற் புரட்சியை நிறுவிட முன்னின்ற நேரம் அது. எனவே தொழில் அமைச்சர் பொறுப்பேற்றிருந்த மாதவன், தொழில் முனைவர்களை ஊக்கப்படுத்தியும், உற்சாகப் படுத்தியும் அங்கங்கே தொழில் வளம் செழுமையுறச் செய்யும் முயற்சியில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். அந்த வகையில் திருச்சி 'பி.எச்.இ.எல்' பாய்லர் தொழிற்சாலைக்கு வேண்டிய உதிரிப் பாகங்களையும், உபகரணங்களையும் உருவாக்கிக் கொடுக்கும் தொழில்



விகேயென் பாய்லர்ஸ் உருவாக்கம்

நிறுவனங்களைத் திருச்சியில் உருக்கொள்ள வைக்கும் நோக்கத்தில்தான், தொழில் முனைவோர் கூட்டத்தை அமைச்சர் மாதவன் கூட்டியிருந்தார்.

மூலதன ஒதுக்கீடு, தொழிற்சாலைக்குரிய நலங்களைச் சலுகையுடன் வழங்கல், உதிரிப் பாகங்களை உருவாக்கிக் கொடுக்கும் ஏற்பாடு ஆகிய உதவிகளை அரசாங்கம் வழங்குமென அமைச்சர் மாதவன் அறிவித்தபோது 'ஏன் நாம் இவற்றை ஏற்று ஒரு நிறுவனத்தை உருவாக்கிச் செயற்படக் கூடாது?' என்ற வினா கண்ணப்பனின் உள்ளத்தில் எழுந்து நின்றது.

அந்த வினாவிற்குரிய விடையாக 1972ஆம் ஆண்டு துவாக்குடியில் தோற்றமானது தான் 'விகேயென்' பாய்லர்ஸ் நிறுவனம். விகேயென் உதயமான போது 'பி.எச்.இ.எல்' நிறுவனத்திற்கு உதிரிப் பாகங்கள் தயாரித்தளிக்கும் தொழில் யுனிட்கள் இருபதே இருந்தன. இன்று இருநூறுக்கும் மேற்பட்ட யுனிட்கள் இருப்பினும், 'விகேயென்' நிறுவனம், தயாரிப்பில் தலைசிறந்த யுனிட்டாகப் போற்றப் பெறுகிறது; புகழப் பெறுகிறது.

நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொரு தொழிலாளியின் உள்ளத்திலும் "இது எங்கள் நிறுவனம். எங்கள் வாழ்வும், வளமும் இதனால் சிறந்தன. எனவே இந் நிறுவனத்தை நலமும் பலமும் கொண்டதாய் உன்னதம் அடையச் செய்வோம்!" என்ற எண்ணம் கிளைத்துச் செழித்து விழுதூன்றி இருப்பதைக் காண முடிகிறது. உழைப்போரின் உணர்வில் உன்னதம் அடையச் செய்வோமென்ற உறுதியைத் தழைக்கச் செய்த அருமை – விகேயென் அதிபர் கண்ணப்பன் பெற்றுள்ள தனிப் பெருமை.

அதிபர் கண்ணப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த காலத்தில், மொழியுணர்வு, இனவுணர்வு மிக்க பல இளைஞர்கள் மாணவர்களாகப் பயின்று கொண்டிருந்தனர்.



விகேயென் பாய்லர்ஸ் தயாரிப்பு

இயல்பாகவே பொது நன்மைகளில் ஆர்வமும், அளப்பரிய ஈடுபாடும் கொண்டிருந்த இளைஞர் கண்ணப்பனின் உள்ளம், மொழி, இனம் ஆகிய உணர்வுகளில் பற்றிப்படர்ந்து, பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகிய தலைவர்களிடம் வெகுவாகப் பிரியம் கொண்டது.

தொழிற் துறை, மூல தனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; உழைக்கும் தொழிலாளியின் கருத்தும் கரமும் இணைந்து செயலாற்றினால்தான் தொழில் தழைக்கும்; தழைத்து ஆரோக்கியமாகச் செழிக்கும்; செழித்து நிலையாக விழுதூன்றும்; என்பதைத் தெளிவாக அறிந்திருந்த கண்ணப்பன், தொடக்க காலத்திலிருந்தே பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்வை வளப்படுத்துவதிலும், நலப்படுத்துவதிலும் தனிக் கவனம் கொண்டார். அதன் பரிணாம வளர்ச்சி 1987ஆம் ஆண்டு முதலாக தொழிலாளியை இலட்சாதிபதியாக்கி வருகின்றது.

தி.மு.க. தலைவர்களை ஆண்டுதோறும் அழைத்து, அண்ணா, கலைஞர், அன்பில், பெரியார் பிறந்த நாள் பெருவிழாவாகவும், தொழிற்சாலையின் ஆண்டுத் திருவிழாவாகவும் ஐம்பெரும் விழாவெடுத்து அவ்விழாவில் தலைவர்களால், கட்டுக்கட்டாய் தட்டில் வைக்கப்பட்ட இலட்ச ரூபாய் தொழிலாளர்களுக்கு உவந்து அளிக்கப்பட்டு வருகிறது. அவ்விழாவிலேயே, புதிய தொழில் தொடங்கும் தொழிலாளருக்கு உரிய சாதனங்கள் வழங்கப்படுகின்றன. நீண்ட காலப் பணியாளருக்கு நினைவுப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு அளிக்கும் அரிய உதவிகளால், 'பி.எச்.இ.எல்' நிறுவனத்திற்கு உபகரணங்களும், உதிரிப் பாகங்களும் அளிக்கும் இருநூறுக்கு மேற்பட்ட தொழிலகங்களில், 'விகேயென்' தனித்தன்மையும், தனிப் புகழும் கொண்டு 'நம்பர் ஒன்' என்ற நல்ல பெயர் பெற்று விளங்கி வருகின்றது.

அதிபர் விகேயென் கண்ணப்பன் அற மனச் செம்மலாகவும் விளங்குகிறார். பொதுவாக, தமிழ் நாட்டுச் சமூகங்களில் நகரத்தார் பெருமக்கள், தர்மம் செய்வதைத் தங்கள் குலப்பண்பாகவே கொண்டுள்ளனர். அந்த வகையில் தமது சமூகப் பழக்கத்தை, பண்பை விகேயென் கண்ணப்பன் வெகு காலமாகப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது. தமது தந்தை தாயார் திருப்பெயர்களில் 'கல்யாண் லேனா அறக்கட்டளை;'யை நிறுவி, அந்த அற அமைப்பின் வழியாக இது வரை ஒரு கோடி ரூபாய்க்கும் மேலாக பொது நன்மைகளுக்காக உள்ளம் உவந்து அள்ளிக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு பள்ளிக்கும் ஓராயிரம் அறக்கட்டளையாக, ஒன்றியம் ஒன்றியமாக பல ஒன்றியப் பள்ளிகளுக்கு பல இலட்ச ரூபாய் வழங்கப் பெற்றுப் பயன் பெற்றுள்ளன.

→

எம். பாட்டு!

கவியரசு நா.காமராசன்

நான்
சரஞ்சரமாய்ப் பாட்டுகளை
அள்ளிவிடப் போறேன்.
சுதந்திரமாய் மனம் திறந்து– உண்மைகளைச்
சொல்லிவிடப் போறேன்.

களத்து மேட்டில் அடிச்ச நெல்லு–
ஏழை கண்ணீரிலே உதிருது.
நெலத்து மேல பாடுபட்டவன்
நெஞ்சமெல்லாம் உடையுது.
கருக்கலிலே
பருக்கையைப் போல்
நட்சத்திரம் சிரிக்குது.
காத்து வீசும் தெக்குத்திசை
கவிதைபாடத் துடிக்குது.
பாக்குமரத் தோப்புக்குள்ளே
பாளையெல்லாம் வெடிக்குது.
பாலைவனச் சோலையிலே
பாரிஜாதம் மணக்குது.
சலசலக்கும் அருவியெல்லாம்
சதங்கைகட்டி நடக்குது.
சாயங்காலத் தாமரைபோல்
'ஞாயம்' மட்டும் உறங்குது!

அமுதசுரபி ஏப்ரல் 95 முதல் மாவட்ட இலக்கியச் சிறப்பு மலர்கள் மடலவிழ்ந்து மணம் பரப்புகின்றன!

ஏப்ரல் 95 இதழில் புதுக்கோட்டை மாவட்டம் இடம்பெறுகிறது.

மாவட்ட இலக்கிய அன்பர்கள் சிறப்பு மலர் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

குன்றக்குடி பெரியபெருமாள்,
'அமுதசுரபி' சிறப்பு மலர்ப் பொறுப்பாளர்
'பாரதி இல்லம்'
குன்றக்குடி - 623 206.

காரைக்கால் - சம்புவரயர்

மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ்களும் தயாராகின்றன

விகேயென் நிறுவனம் 'போர்வெல்' அமைத்துக் கொடுக்கும் தொழிலையும் ஏற்று இயங்கி வருகின்றது. இது தொழிலா? தொண்டா? என்ற சந்தேகம் நமக்கு வருகிறது. ஏனென்றால் விகேயென் நிறுவனம், கிராமங்களுக்கும், பள்ளிகளுக்கும் இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட 'போர்வெல்' அமைப்புகளை இலவசமாகச் செய்து கொடுத்துள்ளது.

கல்யாண் லேனா அறக்கட்டளை, ஏழைப் பெண்களுக்கு இல்லற வாழ்வைக் கூட்டி வைக்கின்ற அபூர்வ தர்மத்தையும் ஆற்றி வருவது நினைக்கத் தக்கது; நெஞ்சார்ந்து போற்றத் தக்கது. முந்நூறுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு, முன் நின்று திருமண உதவியை அறக்கட்டளை வழங்கி உள்ளது.

விகேயென் நிறுவனம் இதுவரை உருவாக்கி அளித்துள்ள பாய்லர்கள், 'பி.எச்.இ.எல்' வழியாக இந்திய நாட்டின் பல மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப் பெற்றுப் பெரும் புகழ் கொண்டுள்ளன. தரமான வேலைப்பாட்டில் தேர்ந்த திறமையுடன் ஆழ்ந்த சிரத்தை பேணப் பெற்று வருவதால், நிறுவனத்தின் பெருமை நாளுக்கு நாள் ஏறுமுகமாகவே இருந்து வந்துள்ளது. பெருமை மட்டுமா? அதன் பொருளாதார வளமை, இருபத்திரண்டு ஆண்டுகளில் முந்நூறு மடங்கு பெருகி உள்ளது. இரண்டு இலட்ச ரூபாய் முதலீட்டில் தொடங்கப் பெற்ற விகேயென் நிறுவனத்தின் இன்றைய மூலதனம் ரூபாய் ஆறு கோடி என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தொழிலாளர் குடியிருப்புக்கென விகேயென் நகரில் உருவாக்கப் பெற்ற இல்லங்களை 1988 ஆம் ஆண்டு 'அன்பில்' தலைமையில் கலைஞர் திறந்து வைத்தார். தமது பேரன்புக்குரிய அண்ணா, பெரியார், கல்யாண் லேனா, கலைஞர், பேராசிரியர், சாதிக் பாட்சா, அன்பில், மன்னை, ஆகிய தலைவர்களின் திருப்பெயர்களை இல்லங்களுக்குச் சூட்டி இதயம் மகிழ்ந்தார் அதிபர் கண்ணப்பன்.

கண்ணபெருமானுக்கு உரிய நிறம் நீலம் என்பதை அறிவோம். அதிபர் விகேயென் கண்ணப்பனின் நெஞ்சைக் கவர்ந்த வண்ணமும் நீலம்தான் என்பதறிந்து வியந்தோம். அவரது கார் - நீல வண்ணம். இல்லங்கள் நீல நிறம். தொழிலகம் நீல நிறம். பயன்படுத்தும் பொருள்களெல்லாம் நீல வண்ணம். ஏன், அவர் உடுத்தும் உடைகளும் நீல வண்ணத்தில் நம் கண்களை வியப்பால் விரிய வைக்கின்றன. "நீல வண்ணத்தில் தங்களுக்குள்ள மோகத்தை அறியத் தாகமாக உள்ளதே?" என்று நாம் கிசுகிசுத்த கேள்விக்கு, விகேயென் சொன்னார்: "கடலும் வானமும் நீல வண்ணமல்லவா? அவை எளிமைக்கும், அமைதிக்கும் எடுத்துக்காட்டுகள் இல்லையா? இந்த இரண்டு பண்புகளும் என்னைக் கவர்ந்தவை. எனவே எனது கண்ணும் கருத்தும் நீலத்தை விரும்பின!" என்றார்.

எளிமை, அமைதி ஆகிய இரு பண்புகளை விரும்பி ஏற்றுள்ள விகேயென் கண்ணப்பன் உருவாக்கிய நிறுவனம் போற்றுதலுக்குரிய திறமை, பெருமை கொண்டு நாளும் செழுமையோடு வளர்ந்து வருகிறது. ∴

கங்காபுரிக் காவலன்

20. கங்கை வரும்

கோதாவரிக் கரையில் நின்று கொண்டிருந்த பெரும் படகுகளில் ஏறுவதற்கு ஆயத்தமான இராசேந்திர சோழ தேவர், கரையை நெருங்கிக் கொண்டிருக்கும் புலிக் கொடி பறக்கும் படகுகளைக் கண்டவுடன் படகில் ஏறாமல் நின்றார்.

அருகில் இருந்த திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து, "வருவது நம் படை வீரர்களா?" என்று கேட்டார்.

சற்று உற்றுப் பார்த்த ஓலை நாயகம், "ஆம், வெற்றிக் களிப்புடன் வருகிறார்கள் என்று தெரிகிறது" என்றார், நாயகம்.

"இந்த வயதிலும் தங்கள் பார்வை தெளிவாக, தொலை நோக்குடன் இருக்கிறது. எப்படி அறிந்தீர்கள் வெற்றிக் களிப்புடன் அவர்கள் வருகிறார்கள் என்பதை?" என்று கேட்டார்.

"பெரிய பெரிய படகுகள் நான்கிலும் புலிக் கொடிகள் தெளிவாகக் காற்றில் அசைந்தாடிப் பறக்கின்றன. தளர்ச்சியைக் காணோம்; படகின் தளத்தில் வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அதோ பாருங்கள், அவர்கள் தங்கள் கரத்தை உயர்த்தி வேல், வாளுடன் நிற்பதை! அவர்கள் உரத்த குரலில் ஒன்றாகச் சேர்ந்து வெற்றிக் கீதம் இசைப்பதைக் கேளுங்கள். வானை நோக்கி அவர்கள் வீசுகிறார்களே அவை பூங்கொத்துகள், அவை காற்றில் மிதந்து வருகின்றன".

இராசேந்திரர், திருமந்திர ஓலை நாயகத்தின் முதுகைத் தட்டிக் கொடுத்து, அவர் கூறியபடியே வெற்றி முழக்கக் குரல் விண்ணை எட்டும் அளவிற்கு எழும் வாழ்த்தொலியைச் செவிமடுத்தார். தேவர்கள் பூமாரி பொழிவது போல் படகுகளிலிருந்து மலர்களைத் தூவுவதையும் பார்த்தார்.

"புறப்பட ஆயத்தமாக இருக்கும் நம் படகுகளில் விரிக்கப்பட்ட பாய்களைச் சுருட்டச் சொல்லுங்கள்" என்றார்.

பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பி, "தேவி! நல்ல செய்தியை வீரர்கள் கொண்டு வருகிறார்கள் என்றே தோன்றுகிறது. நீ, இருப்பிடம் செல்; வரும் வெற்றி வீரர்களை நான் வரவேற்று அழைத்து வருகிறேன்" என்று கூறும்போது அவர் குரலில் பரபரப்பு நிறைந்திருந்தது. உள்ளத்தில் பொங்கித் ததும்பும் மகிழ்ச்சி மிகுதியால் அவர் பேசுகிறார் என்பதும் புலப்பட்டது.

நான்கு பெரும் படகுகள் நதிக்கரையின் சற்றுத் தொலைவில் வரிசையாக நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன.

தொலைவிலிருந்து பார்க்கும்போது சிறியவைபோல் தோன்றிய அந்தப் படகுகள், கரையருகே வந்து நின்றபோது பெரும் மரக்கலங்கள் போல் காட்சியளித்தன. அவற்றினின்று தோணிகள் போன்று சிறு படகுகள் கரை இறக்கப்பட்டன. ஏணியின் வழியே, சிறிய படகுகளில் வீரர்கள் ஒவ்வொருவராக இறங்கினர். அந்தப் படகுகள் கரையை நெருங்கின.

ஒரு பகுதிப் படைகளின் தலைவனான வீரர் ஒருவர் அரசரை வணங்கி, "ஜய விஜயீ பவ! சோழ சக்கரவர்த்திகள் வாழ்க! நும் கொற்றம் வாழ்க! வடபுலத்திலுள்ள நாடுகளிலெல்லாம் புலிக் கொடியை நாட்டிய செம்பியன் வழிவந்த கோப்பரகேசரி வர்மர் உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் வாழ்க! வாழ்க! அவர்தம் பட்டத்து அரசியார் பஞ்சவன் மாதேவியார் வாழ்க! வாழ்க!" என்று கூறி பட்டுத் துகிலால் போர்த்தப்பட்ட தந்தப் பேழையொன்றை அரசரிடம் அளித்து வணங்கி, பின்புறமாக நகர்ந்து, சற்றுத் தொலைவு சென்று நிமிர்ந்து நின்றார்.

மூடப்பட்ட பட்டுத் துகில் நீக்கி, தந்தப் பேழை திறந்து, அதன் நடுவே இருந்த ஓலைச் சுருள் ஒன்றையெடுத்துப் படித்தார்.

விக்கிரமன்

அவர் முகம் மலர்ந்தது. திருமந்திர ஓலை நாயகத்துடன், நதிக்கரை மாளிகைக்கு விரைந்தார். அவரைத் தொடர்ந்தனர் மற்ற அதிகாரிகள்.

செய்தி கொண்டு வந்த தூதன் கூறியவற்றை, இராசேந்திரன் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டார்.

சென்ற இடங்களிலெல்லாம் வெற்றி! வேங்கி, சக்கரக்கோட்டம், மதுரை மண்டலம், கலிங்கம், ஒட்டரம், நாமணைக்கோணப் பஞ்சப்பள்ளி நாடுகளிலெல்லாம் நம் படைவீரர்கள் வென்று வெற்றிவாகை சூடியுள்ளனர் என்று பெருமிதத்துடன் உரக்கக் கூறினர்.


மகிழ்ச்சியான இந்தச் செய்தியைப் பஞ்சவன்மாதேவி கேட்டுக் கொண்டிருந்தார். இனி கங்கையில் நீராடச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை. வேற்று நாட்டு மன்னர்கள் சமாதானமாகி, அரசரை வரவேற்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதையும் அரசி அறிந்து கொண்டாள்.

ஆனால் நதிக்கரை வரையில் சென்று படகில் ஏறும் தருணத்தில், பயணம் தடைப்பட்டது. அது நல்ல சகுனமாக அரசிக்குத் தோன்றவில்லை.

தூதுவர் கொண்டு வந்த செய்தியிலிருந்து அடுத்து நிறைவேற்ற வேண்டியவற்றைப் பற்றி அரசர் கலந்தாலோசனை செய்து கொண்டிருந்தபோது, பழையாறையிலிருந்து மிக முக்கியமான செய்தியைச் சோழ வீரர்கள் கொண்டு வந்திருப்பது தெரியவந்தது.

அடுத்து நிறைவேற்ற வேண்டியவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது பழையாறையிலிருந்து வந்த சேதியைக் காண அவருக்கு நேரமில்லை. "தேவி! தூதுவர்களிடம் நீயே கேட்டறிந்து கொள்" என்று கூறிவிட்டு அரசர் அதிகாரிகளுடன் கலந்து பேசுவதில் முனைந்தார்.

அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகக் கவலைக்கிடமாக இருப்பதாகவும், உடனே பழையாறை வருமாறு இளவரசர் கைப்படத் தெரிவித்திருந்தார். செய்தி



யறிந்த பஞ்சவன் மாதேவிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அடங்கச் சில கணங்களாயின.

ஓலையை எடுத்துக் கொண்டு அரசரிடம் விரைந்து, "சக்கரவர்த்திகளே! இந்தச் செய்தியைக் கேட்டீர்களா? அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துச் செய்தியைப் பாருங்கள். கணம்கூடத் தாமதிக்கக் கூடாது, நாம் உடனே புறப்பட வேண்டும். நம் பயணம் இன்று தடைப்பட்டபோதே என் மனம் துணுக்குற்றது. அதுமுதல் மார்பில் ஒருவிதப் படபடப்பு. வயிற்றில் கலக்கம். ஏதோ நிகழப்போகிறது என்ற பீதி ஏற்பட்டது. கங்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று சொல்ல முடிவு செய்தேன். இன்றே பழையாறைக்குப் புறப்பட்டால் போய்ச் சேரப் பல நாள்கள் பிடிக்கும். அதற்குள் தேவிக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? ஐயோ என்னால் நினைக்க முடியவில்லையே" – வார்த்தைகள் முடிக்கக்கூட அரசியால் இயலவில்லை.



சக்கரவர்த்திகளால் உடனே முடிவெடுக்க இயலவில்லை. கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசிக்கலானார். நடைபெற வேண்டிய பற்பல சம்பவங்கள் அவர் மனமேடையில் கூத்தாடின. சில அவரைப் பார்த்துச் சிரித்தன. சில அவ்வரைப் பார்த்துக் கேள்விகள் கேட்டன. சில அவரைப் பயமுறுத்தின.

கட்டப்பட்ட புதிய பெரிய கோயில் அவர் கண்முன் கம்பீரமாக நின்றது. வெட்டப்பட்ட பரந்த ஏரி தோன்றியது. அகலமான வீதிகளும், புதிய வீடுகளும் அவர் எதிரே கம்பீரமாகக் காட்சியளித்தன. விமானம் உயர்ந்து நிற்கிறது. திருச்சுற்றிலுள்ள மாடங்களில் காட்சிதரும் கோயிலில் அழகிய சிற்பங்களை, சித்தர் பார்த்துப் பாராட்டுகிறார். அருகே வீரமாதேவி புன்முறுவலுடன் நிற்கிறாள். சிற்பி மாணிக்க சேகரன் அருகே நிற்கிறார். அந்தக் காட்சி இராசராசனை மெய்சிலிர்க்க வைக்கிறது.

"கோயிலின் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதாக முடிவெடுத்துச் சென்றேனே – கங்கை நீரைக் கொண்டு வராமல் சோழநாட்டின் எல்லையில் அடியெடுத்து வைக்கமாட்டேன் என்று உறுதி பூண்டேனே... கங்கை நீரைக் கொண்டு வராமல் எப்படித் திரும்புவது?

'பழையாறையில, என் அன்புக்குரிய அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அங்கே கங்கைக் கரையின் படைத் தலைவன் அரையர் இராசராசன் காத்திருக்கிறான். வடபுலத்து மன்னர்களை அவன் அடிபணிய வைத்துவிட்டான். அவனுடைய வீரத்தை, சேவையைப் பாராட்டி அவனுக்குப் புகழ்ப் பெயர் சூட்ட முடிவு செய்திருந்தேனே – கங்கைக் கரைக்குச் செல்வதா, பழையாறை திரும்புவதா, குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வராமலிருப்பதா – என்ன செய்வது?" – இராசேந்திரன் மிகக் குழப்பத்துடன் இரு கரங்களாலும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு அங்கேயே குனிந்த தலையுடன் அமர்ந்தார்.

அதைப் போன்ற சமயங்களில் அவர் எதிரே நிற்காமல், அதிகாரிகளும், பணியாளர்களும், காவலர்களும் அங்கிருந்து சென்றுவிடுவர். அதைப்போல் ஒவ்வொருவராகச் சென்றனர்.

பஞ்சவன் மாதேவிக்கு ஒன்றும் புரியவில்லை. அன்று பகல் முழுவதும் அரசர் ஏதும் பேசவில்லை. சிந்தனை – சிந்தனை – ஒரே சிந்தனையில் ஆழ்ந்தார். அதுபோன்ற வேளைகளில் அவர் மௌனமாக உட்கார்ந்திருப்பார். குறுக்கும் நெடுக்கும் நடப்பார். கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருப்பார். நெடுநேரமிருப்பார்.

பகல் கழிந்து, இரவு வந்தது. அவர் உறங்கவில்லை என்பது அவர் புரண்டு படுப்பதிலிருந்து தெரிந்தது.

ஒருமுறை பஞ்சவன் மாதேவி அவரிடம் ஏதோ கேட்க முனைந்தாள். பழையாறை திரும்ப வேண்டும் என்ற பரபரப்பு அவர்களிடம் இருந்தது. பயணத்திற்கு இப்போதே ஆயத்தம் செய்தால்தானே பரிவாரங்களுடன் புறப்பட முடியும்? ஒரு வேளை கங்கைக் கரைக்குச் செல்வது என அரசர் முடிவெடுத்துவிட்டால்...?

கங்கையில் நீராடுவதில் அரசிக்கு விருப்பமோ ஆர்வமோ முன்பு எப்போதுமில்லை. காவிரியைவிட கங்கை எந்த விதத்தில் உயர்வு பெற்றது என்று அரசி நினைப்பாள்; பேசுவாள்; விவாதிப்பாள். ஆனால், அரசர் எதிரே தன் கருத்தை வெளியிடும் துணிவு அரசிக்கு இல்லை.

வீரமாதேவிதான் கங்கை மீது ஆசையை உண்டாக்கினாள் என்று அவள் எண்ணினாள். கங்கையில் அரசருடன் சென்று நீராடவேண்டும் என்ற ஆசையால், கங்கை நீரைக் கொண்டு வந்து குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை அரசர் மனத்தில் அவள்தான் தூண்டிவிட்டாள் என்றும் எண்ணினாள். அதனால் கங்கைக் கரைக்குப் புனித நீராடச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அரசருக்குத் தோன்றிய போது வீரமாதேவியின் மீது ஏற்பட்ட வெறுப்பில் அவள் கங்கைப் பயணத்திற்கு ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், கங்கை மீது அரசருக்குள்ள பற்றும் மரியாதையும் அசைக்க முடியாதவை என்று அவள் உணர்ந்தாள்.

திருஞானசம்பந்தரும், சுந்தரரும், நாவுக்கரசரும் இறைவன் மீது பதிகங்கள் பாடிய போதெல்லாம் அரசர் உள்ளம் உருகி, சிவபெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் பெருமை பெற்ற கங்கையைப் போற்றிப் பாடிய பதிகங்களை அரசர் விரும்பிக் கேட்பதும், மீண்டும் மீண்டும் கேட்பதும், பாடலிலே உள்ளம் தோய்ந்து மெய் மறந்து நிற்பதும், அவர் சிந்தனையிலிருந்து கங்கை எனும் புனித நதியை மறக்க வைக்க முடியாது என்பதை அரசி உணர்ந்தாள்.

சக்கரவர்த்திகள் பேசாமல், முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறார் என்பதை பஞ்சவன்மாதேவி உணர்ந்தாள். அவருடைய குழப்பத்தைத் தீர்த்து சரியான முடிவை எடுக்க அவளால் முடியும். ஆனால் அதை அவரிடம் எப்படி எடுத்துச் சொல்வது? அவரருகே சென்று அமர்ந்து மெல்ல அவரைத் தொட்டால், அவர் சீற்றமுற்று கடுஞ்சொல் கூறிவிட்டால்...?

பஞ்சவன் மாதேவியும் கவலையுடன் விழித்திருந்தாள். அரசரிடம் செல்வாள்; திரும்பி வருவாள். பிறகு எப்போது உறக்கம் வந்ததோ தெரியாது; தன்னை மறந்து உறங்கினாள்.

பொழுது புலர்ந்தது. விதவிதமான புள்ளினங்கள் இசைத்த பூபாளம் அரசியை விழித்தெழச் செய்தது. அருகே இருந்த அரசரைக் காணவில்லை. அரசர் வெளியே வந்து மாளிகையை ஒட்டி ஓடிக்கொண்டிருந்த கோதாவரியை உற்று நோக்கியவாறிருந்தார்.

நதியின் கீழ்த்திசை வெளுத்து, வானச் சீலையில் மெல்லிய செங்கோடுகள் வரையப்பட்டு, படர்ந்து வரும் மேகக் கூட்டத்தின்மீது செம்பொன் நிறம் பூசப்பட்டு வானத்தின் விளிம்பில் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறப்பட்டது.

வட்டத் திகிரி போல் சுழன்று கொண்டு செங்கோளமாகக் கதிரவன் கீழ்த் திசையில் தோன்றினான்.

முதல் நாள் இருந்த குழப்பம் தீர்ந்தது போன்ற உணர்வு, புதிய தெம்பு அவர் மேனியெங்கும் பரவியது.

இராசேந்திர சோழ சக்கரவர்த்தி கதிரவனைக் கையெடுத்துக் கும்பிட்டுத் தன்னை மறந்து நின்றார்.

கோதாவரியின் கீழ்த் திசைக் கோடியினின்று வெண்பஞ்சு மேகங்கள் மெல்லப் படர்ந்து வானவெளியில் மேலெழுந்து மிதந்தன. அவற்றின் இடையே ஓர் உருவம். புனிதமான தோற்றம். அருள் ஒளிரும் திருமேனி. மெல்ல மெல்லப் பூமியில் இறங்கி வருகிறது. அந்த உருவம் சிறிது நேரத்தில் தன்னை நோக்கி வருவதை உணர்ந்தார்.

அவர் மேனி சிலிர்த்தது. விழிகள் அத்தோற்றத்தை நோக்கி அசையாது நிலைபெற்று நின்றன.

அந்தப் புனிதமான வடிவுடையவர் வானத்து மேகக் கூட்டங்களில் அமர்ந்து வந்தார்.

நீலவானக் கடலில் நீந்தி வந்தார். ஓடும் பிரவாகத்தில் நடந்து வந்தார்.

'யார்... யார்...?' வார்த்தைகள் வரத் தடுமாறின.

'அவரா? அவராக இருக்க முடியாது. அவர் இங்கு வருவாரா?'

'அவர் இங்கு இப்போது வந்தால் நான் பெரும் பேறு பெற்றவனாவேன். எந்தத் திசை செல்வது என்று தெரியாமல் திகைக்கிறேன். என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் குழம்புகிறேன். எனக்கு வழிகாட்ட நான் யாரை அழைப்பது என்று தடுமாறுகிறேன். அவர் வந்தால் எனக்குத் தெளிவு பிறக்கும். குழப்பம் தீரும்.

'என்னுடன் என்றுமே இருந்து வழி காட்டும் தேவ புருடராகிய அவர் இப்போது இந்தக் கணம் இங்கு வந்தால் ஆடவல்லான் அருள் எனக்கும் பரிபூரணமாக இருக்கிறது என்றுதான் பொருள்'.

அதோ அவர் கரம் உயர்த்துகிறார். அஞ்சாதே என்று அபயமளிக்கிறார். வெண் தாடிக்கு இடையே முத்துப்பல் ஒளிரச் சிரிக்கிறார்.

ஆம்; அவரேதான்! நான் எதிர்பார்த்த தேவபுருடனேதான். சோழர்குலத்தின் உயர்வுக்குத் தோன்றாத் துணையாயிருந்து காப்பாற்றுபவர்தான். அவர்தான் கருவூர்ச் சித்தர்.

விழிகளை அகல விரித்துப் பார்த்தார் அரசர். தான் காண்பது கனவா - நனவா என்று கண்களைக் கசக்கிப் பார்த்தார்.

சூரியக் கதிர்கள் ஊடுருவ, ஒளி வீசும் மற்றொரு கதிரவன் போல் சித்தர் திகழ்ந்தார்.

"இராசேந்திரா!" என்று அன்பைக் குழைத்து வடித்தெடுத்த அதே குரல். யாழிசை போலும், கந்தர்வர்கள் மீட்டும் வீணை நாதம்போலும் அந்தக் குரல் ஒலித்தது.

"சித்தர் பிரானே! எங்கள் குலம் காக்க வந்த தேவரே!" என்று கூறியவாறு இராசேந்திர சோழ தேவர் சித்தரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

சித்தர் குனிந்து, இராசேந்திரனைத் தொட்டு எழச் செய்து, "மகனே! கதிரவனைப் பார்த்து வணங்கி நிற்கும் உன் முகத்தில் காலைப் பொழுதில் கவலைக் கோடுகள் ஏன்?" என்று சக்கரவர்த்தியின் கரத்தை மெல்லப் பிடித்தவாறு கேட்டார்.

இராசேந்திரன் வியப்புடன், சித்தரைப் பார்த்தார். 'சித்தர் எங்கிருந்து வருகிறார்? இந்த இடத்திற்கு வந்தது எப்படி?'

"இராசேந்திரா! நீ சொல்லாவிட்டாலும் உன் குழப்பத்தை நான் அறிவேன். உன் கவலைக்கு மருந்தளிக்கிறேன். நான் சொல்கிறேன் - கங்கைக் கரைக்கு நீ செல்ல வேண்டாம்" என்று கூறி மாளிகை மண்டபத்தின் உள்ளே சென்றார்.

"சித்தர் பிரானே! கங்கை நீரைக் கொண்டு வரவேண்டும் என்று நான் எடுத்த முடிவு என்னாவது?" என்று பதற்றத்துடன் கேட்டார் இராசேந்திரன்.

"கங்கை வரும்.. புனிதக் கங்கை நீரால் புதிய கோயில் கலசத்துக்கு குடமுழுக்கு செய்யத்தான் போகிறாய்" என்றார்.

'கங்கை வருமா? கங்கைக் கரைக்குச் செல்லாமல் கங்கை வருமா? சித்தர் என்ன வழி கூறப் போகிறார்?' என்று இராசேந்திரன் வியப்புடன் சித்தரை நோக்கினார்.

(தொடரும்)



இந்திரா காந்தி பரிசு

உலகக் கவிஞர்கள் தலைவர் டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ், 1994 ஆம் ஆண்டு கவிதைக்காக இந்திரா காந்தி பரிசு பெறுகிறார்.

இவருடன் சினிமாவில் நடிக்கும் நடிகை ஷர்மிளா டாகூர், சங்கீதத்துக்கு பன்னாடே, உஸ்தாத் விலாயட் கான், சமூக சேவைக்கு டாக்டர் சுனில் தாகூர், விளையாட்டு வீரர் சைலன் மன்னா ஆகியோரும் வங்கக் கவிஞர்கள் சங்கத்தால் கௌரவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இதற்கு முன் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரஸா, பிரபல டைரக்டர் சத்யஜித்ரே, இலக்கிய மேதை பிரபாகர் மாச்வே ஆகியோர் இப்பரிசைப் பெற்றிருக்கிறார்கள். ●

ஜி. ஈ. சி. அலைவரிசை

வர்த்தக உலகில் ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்துள்ள கோல்டன் ஈகிள் நிறுவனம், செயற்கைக் கோள் மூலம் பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி முதல் ஒரு புதிய அலைவரிசையைத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்ப உள்ளது.

வார நாள்களில் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையும், சனிக்கிழமை மதியம் 2 மணி முதல் இரவு 11 மணி வரையும், ஞாயிறன்று காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரையிலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகவுள்ளன.

சிங்கப்பூரில் இருந்து ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் வாரத்திற்கு ஐந்து முழு நீளத் தமிழ்த் திரைப்படங்களும், சத்த சபை, மகேசன் தீர்ப்பு, செய்திகள், செய்தி அலசல், யாதும் ஊரே, இங்கே எதுக்கு வந்தீங்க, நம்பினார் கெடுவதில்லை, தல புராணங்கள், சங்கீத – நாட்டிய மேடை, மருத்துவம், சட்டம் என்ன செய்கிறது, கதை விடும் நேரம், டிரண்ட் மாறிப் போச்சு, பாடல் பிறக்கிறது, சவாலே சமாளி, சினிமா க்விஸ், எல்லா இசையமைப்பாளர்களும் பங்கு கொள்ளும் இன்னிசை அரங்கம் போன்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாக உள்ளன.

சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை கங்கை அமரனும், பொது நிகழ்ச்சிகளை 'சோ'வும் தயாரித்துத் தொகுத்தளிக்கின்றனர்.

செயற்கைக் கோள் மூலம் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்று மக்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்று வரும் நேரத்தில் கோல்டன் ஈகிள் கம்யூனிகேஷன்ஸ் தனியிடத்தை வகிக்க வாழ்த்துவோம்.

இந்தியா மட்டுமல்லாமல் ஆசியா முழுக்க – ஐரோப்பிய நாடுகளிலும் ஒளிபரப்பாக உள்ள ஜி.ஈ.சி., தொடங்கிய சில நாள்களில் 24 மணி நேரமும் ஒளிபரப்பாகவுள்ளதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். ●

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்க தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டக் கிளைகள் தொடக்க விழாக்கள்

மாவட்டந்தோறும் கிளைகளைத் தொடங்கி எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்ட கிழக்கு - மேற்கு கிளைத் தொடக்க விழாக்கள் கடலூரிலும், பண்ருட்டியிலும் சிறப்பாக நடைபெற்றன.

தொடக்க விழாக்களுக்கு சங்கத்தலைவர் கலைமாமணி விக்கிரமன் தலைமை வகித்தார்.

தலைமைச் சங்கத்தின் துணைத் தலைவர்கள் டாக்டர் மூவேந்தர் முத்து, டாக்டர் தாமரைக் கண்ணன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் குன்றக்குடி பெரிய பெருமாள், நீலவன், துணைப் பொருளாளர் நாகராஜகுமார், காரைக்கால் மாவட்டக் கிளைத் தலைவர் இரா. பகவானந்த தாசன், துணைத்தலைவர் திருமதி வைஜயந்திமாலா ஆகியோர் விழாக்களில் கலந்து கொண்டு மாவட்டக் கிளைகளைத் தொடங்கி வைத்தனர்.

கடலூரில் நடைபெற்ற தென் ஆர்க்காடு மாவட்ட கிழக்கு




கிளைத் தொடக்க விழாவில் கவிமுகில் இரா. முத்துக் குமரன் தலைவராகவும், கடல் நாகராசன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய தமிழ் நூல்கள் அறி முகமும், மாணவ மாணவி யருக்குப் பரிசளிப்பும், முது பெரும் கடலூர் எழுத்தாளர் ஜான் ஆரிசுக்குப் பாராட்டும் விழாவின் முக்கியமான நிகழ்ச்சிகளாக அமைந்தன.

பண்ருட்டியில் நடைபெற்ற தென் ஆர்க்காடு மாவட்ட மேற்கு கிளைத் தொடக்க விழாவில் வே. சபாநாயகம் தலைவ ராகவும், கவிஞர் தமிழரசன் செயலாளராகவும் தேர்வு பெற் றனர்.

அறிஞர் பெருமக்களின் பாராட்டுரைக்குப் பிறகு 'இளை ஞர்களைச் சிறப்பாக உரு வாக்குவது - படைப்பாளர்களே! பத்திரிகைகளே!' என்னும் தலைப்பில் சுவையான சொற் போர் நிகழ்ந்தது. ●



முதல் நாள் விழாவில் கழ கக் கவிஞர் குமரிச் செழிய னுக்கு நீதிபதி. கிருஷ்ணசாமி ரெட்டியார் 'கவிமாமணி' பட்ட மளித்துச் சிறப்பித்தார்.

இரண்டாம் நாள் மாலை நடைபெற்ற விழாவில் கலை மாமணி விக்கிரமன் தலைமை யில், கவியரசி சௌந்தரம் கைலாசம், கவிமாமணி நா.சீ. வரதராஜன் படைத்த 'வெளிச்ச வாசல்கள்' கவிதை நூலை வெளியிட்டார். கவிமாமணி மயன் எழுதிய 'வசந்தமலர்கள்' கவிதை நூலை காயத்திரி சுவாமிகள் வெளியிட்டார். ●

பாரதி கலைக்கழக 43ஆம் ஆண்டு விழா டிசம்பர் 24,25,26 தேதிகளில் சைதாப்பேட்டை யில் சிறப்பாக நடைபெற்றது.

	கேது		
சூரி சனி	இம்மாத கிரக நிலை		செவ் (வ)
புதன் (வ)			
சுக்	குரு	ராகு	

கிரக பாதசாரம்:

சூரியன் - அவிட்டம் 3, சந்திரன் - புனர்பூசம் 4, செவ்வாய் - ஆயில்யம் 4(வக்ரீ), புதன் - திருவோணம் 1, குரு - கேட்டை 1, சுக்கிரன் - பூராடம் 1, சனி - சதயம் 4, ராகு - சுவாதி 3, கேது - பரணி 1.

கிரக மாறுதல்

16-02-1995 முதல் புதன் வக்கிர நிவர்த்தி

25-02-1995 முதல் மகர சுக்கிரன்

10-03-1995 முதல் கும்ப புதன்

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

9,10,11-ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவுவதால் முக்கியமான ஓரிரு காரியங்கள் இப்போது நிறைவேறும். வசீகர சக்தி கூடும். குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலம் உண்டாகும். பெற்றோர் நலம் சீர் பெறும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு 25-ஆம் தேதி வரையிலும் நலம் பெருகும். அதன் பிறகு, சிறுசிறு சோதனைகள் சூழும். வியாபாரிகளுக்கு அனுகூலமான மாதம் இது. கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகள் லாபம் தரும். நண்பர்கள், உற்றார் உறவினர்களது தொடர்பு, பயன்படும். மாணவர்கள் வெற்றிநடை போடுவார்கள். மக்களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும்.

தொழிலாளர்களது பிரச்சினைகள் ஓரளவு தீரும். பொதுநலப் பணியாளர்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் மதிப்பு உயரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். எதிர்ப்புக்கள் என்பவை கட்டுக்குள் அடங்கி இருக்கும். வழக்கு, விவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். அலைச்சலும் உழைப்பும் அதிகமானாலும் அதற்கான பயன் கிடைக்காமல் போகாது. பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். 4-ல் செவ்வாயும், 8-ல் குருவும் உலவுவதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி வருவது நல்லது.

பவ ஆண்டு மாசி மாதத்திற்கு

உங்கள் ராசி பலன்

13-02-1995 முதல் 14-03-1995 வரை

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

பெரியவர்களின் மனம் புண்படும் படியான காரியங்களில் ஈடுபடலாகாது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. தனுசு, மகர, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 5, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை. கிருத்திகை நட்சத்திரக்காரர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது.

ரிஷபம் : (கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்களாகிய குரு, சனி, செவ்வாய் ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் அபிலாஷைகள் எளிதில் நிறைவேறும். எதிர்ப்புக்கள் அகலும். மனத்தில் உற்சாகம் பெருகும். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். நல்லவர்களின் தொடர்பால் நலம் கூடும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காணச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இப்போது பூத்து வரும். கணவன், மனைவியரிடையே அன்புறவு நீடித்திருக்கும். கூட்டுத் தொழில் லாபம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். வியாபாரிகளுக்கு மாமூலான லாபம் கிடைத்து வரும். ஆசிரியர்களுக்கும், பேராசியர் களுக்கும் மதிப்பு உயரும்.

பொறியியல், சட்டம், காவல், ராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயர்வார்கள். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். மாதர்களது குறிக்கோள் நிறைவேறும். பொதுநலப் பணியாளர்களுக்கும், அரசியல்வாதி களுக்கும் அந்தஸ்து உயரும். பெற்றோரால் மக்களுக்கு அனுகூலம் உண்டாகும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். புத்திசாலித்தனம் காரணமாக செயற்கரிய சாதனைகளை ஆற்றி மற்றையோரின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைத் தம் விருப்பம் போல் பெற்று மகிழ்வார்கள். பிப்ரவரி 14, 17, 19, 20, 26,27, மார்ச் 1, 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூல மானவை. கடக, விருச்சிக, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6, 8, 9 எண்கள் நலம் தரும்.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலம் திருப்திகரமாக இல்லாததால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடைகளும் குறுக்கீடுகளும் இருந்து வரும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். எக்காரியத்திலும் பதற்றம் கூடாது. பொறுமையும், பக்குவமும் மிகத் தேவை. குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் அவ்வப்போது உண்டாகும். மறதிக்கு ஆட்பட்டு மற்றையோரின் அதிருப்திக்கு உள்ளாக நேரலாம்; எச்சரிக்கை. பொருளாதார நிலையில் சரிவு உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடலாகாது. சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பழகி வருவது அவசியமாகும். புதிய முயற்சிகளில் ஈடுபட இந்த நேரம் சிறப்புடையதாகாது. தீயவர்களின் சகவாசம் வேண்டாம். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை.

மக்களாலும், வாழ்க்கைத்துணைவராலும் ஒரிரு பிரச்சினைகள் உருவாகும். பெற்றோர் நலனில் கவனம் தேவைப்படும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மத போதகர்கள், மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. வியாபாரிகளுக்கு ஓரளவு வளர்ச்சி ஏற்படும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகள் ஆக்கம் தரும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் திறமைக்குரிய வரவேற்பு கிடைத்து வரும். 25-ஆம் தேதி முதல் கலைஞர்கள் வெளிச்சம் காண்பார்கள். மாதர்களது நிலைமையிலும் அபிவிருத்தி தெரியவரும். மாணவர்கள் முன்னேறுவார்கள். பிப்ரவரி 14, 17, 19, 20, 24, மார்ச் 1, 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் சுமாரானவை. வடக்கு, வடமேற்குத் திசைகள் நலம் தரும். கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

குரு பலம் காரணமாக உங்கள் எண்ணங்களில் வளர்ச்சி உண்டாகும். மனத்தில் குதூகலம் கூடும். பொருள்வரவு திருப்தி தரும். நற்பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரது ஆதரவு கிட்டும். பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு கூடும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை உருவாகும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் திறமைக்குரிய வரவேற்புப் பெறுவார்கள். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் அளவோடு லாபம் தரும். சனி, செவ்வாய் ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் ஒரிரு இடர்ப்பாடுகள் அவ்வப்போது தலைதூக்கும். உங்களைக் காட்டிலும் வயதில் மூத்தவர்களிடம் ஆலோசனை கேட்டறிந்து அதன்படி நடத்தல் நலம் உண்டாகும்.

தீயவர்களின் தொடர்பு வேண்டாம். பயணத்தின் போதும், இயந்திரங்களில் பணிபுரியும்போதும் நெருப்பு, மின்சாரம் ஆகியவற்றின்பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்பு தேவை. உடல்நலம் ஒரு நாள் போல் மறுநாள் இராது. உஷ்ணாதிக்கம் கூடும். அலைச்சலும், உழைப்பும் அதிகமாகும். மாதர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புணர்ந்து கடமையாற்றினால் சரிவுக்கு ஆட்படாமல் மீளலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. மார்ச் 10-ஆம் தேதி முதல் வியாபாரிகள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். நிலபுலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது அவசியம். நண்பர்களால் ஏமாற்றத்திற்கு ஆட்பட நேரலாம். பெற்றோர் நலனில் கவனம் தேவைப்படும். பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 3, 4, 5, 8, 11, 12, 13 தேதிகள் அனுகூலமானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. விருச்சிக, மீன, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோர் அனுகூலமான நிலையில் உலவாததால் எதிலும் முழுமையான வெற்றியைக் காண இயலாமல் போகும். சிறுசிறு இடையூறுகள் அவ்வப்போது உண்டாகும். அலைச்சல் கூடும். எடுத்த காரியத்தை நிறைவேற்றக் கடுமையாகப் பாடுபட வேண்டி வரும். உற்றார், உறவினர்கள், நண்பர்களால் அதிகம் அனுகூலம் இராது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பேசிப் பழகுவது நல்லது. கணவன், மனைவியரிடையே சிறு சிறு சலசலப்புக்கள் உண்டாகும். பயணத்தின் போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்புத் தேவை. உடல்நலனில் கவனம் தேவைப்படும். பெற்றோர் நலனில் அக்கறை செலுத்த வேண்டி வரும்.

தொலைதூரத் தொடர்பால் அனுகூலமிராது. ராகு பலம் கூடியிருப்பதால் எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். பிறமொழி, மதக் காரர்களால் அனுகூலம் உண்டாகும். 5-ல் உள்ள சுக்கிரன் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக் களை அதிகரிக்கச் செய்வார். மாதர்களது எண்ணம் நிறைவேறச் சந்தர்ப்பம் கனிந்து வரும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள், கணிதத்துறையாளர்கள் ஆகியோருக்கெல்லாம் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. 25-ஆம் தேதி முதல் சுக்கிர பலம் குறைவதால் கலைஞர்களும், மாதர்களும் விழிப்புடன் இருப்பது நல்லது. ஆடவர்களுக்குப் பெண்டிரால் சோதனைகள் உருவாகும். சகிப்புத் தன்மை தேவை. பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 5, 8, 11, 12, 13 தேதிகள் சுமாரானவை. தென்கிழக்கு, தென்மேற்குத் திசைகள் நலம் தரும். தனுசு, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4, 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி: (உத்திரம் 2- ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

சனி, செவ்வாய் பலம் காரணமாக உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். எதிர்ப்புக்களின் கரம் வலுக்குறையும். இயந்திரப்

பணிகள் லாபம் தரும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் செழிப்பான பாதை புலப்படும். இஞ்சினியர்கள் தங்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். பொதுநலப் பணியாளர்களுக்குச் செல்வாக்கு கூடும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். சட்டம், காவல், ராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். எண்ணெய் வகையறாக்கள், தாதுப் பொருட்கள், தோல் பொருட்கள் ஆகியவை லாபம் தரும். செய்து வரும் தொழிலில் சீரான வளர்ச்சி காணலாம். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். கடல் வாணிபம் லாபம் தரும்.

கணவன் மனைவியரிடையே களிப்புறவு கூடும். கூட்டுத் தொழில் லாபம் தரும். நண்பர்கள், உற்றார் உறவினர்களது தொடர்பால் பயன் உண்டாகும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திர சொத்துக்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற முடியும். மாதர்களது எண்ணம் ஈடேறும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பொருள்வரவு சீராக இருந்து வரும் என்றாலும் எதிர்பாராத ஓரிரு செலவுகளையும் அவ்வப்போது சந்திக்க வேண்டி வரும். ராகு, கேது, குரு ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. நூதன மானவர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 8, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. மேற்கும், தெற்கும் அனுகூல மான திசைகளாகும். தனுசு, கடக ராசிக் காரர்கள் உதவுவார்கள். 1, 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3- ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் அந்தஸ்தும், மதிப்பும் உயரும். பேச்சு வன்மை கூடும். குடும்பத்தில் நற்காரியம் நிகழும். உடன் பிறந்தவர்களால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். பணநடமாட்டம் திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். கடிதப் போக்குவரத்து நற்செய்தி கொண்டு வரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு பயன்படும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் உண்டாகும். மற்றையோர் மதிக்கத்தக்க வகையில் ஓரிரு சாதனைகளை ஆற்றுவீர்கள்.

திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இப்போது கனிந்து வரும். திருமணம் ஆனவர்கள் மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவார் கள். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். கணிதம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். ஆசிரியர்களது நிலை உயரும். மருத்துவம், இரசாயனம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். ரியல் எஸ்டேட் இனங்கள் லாபம் தரும். மார்ச் 10-ஆம் தேதி முதல் நற்பணிகளில் ஈடுபாடு கூடும். பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 5, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 5, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

கோசாரப்படி பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் அலைச்சலும், உழைப்பும் கூடும். எண்ணங்கள் நிறைவேறத் தடை உண்டாகும். எதிர்ப்புக்களின் கரம் வலுவடையும். உற்றார், உறவினர்கள் நண்பர்களால் அனுகூலமிராது. வியாபாரிகளுக்கு முன்னேற்றம் தடைப்படும். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்துவது அவசிய மாகும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக் கால் வைக்கலாகாது. பெற்றோர் நலனில் அக்கறை தேவைப்படும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக் கும் ஓரளவு வளர்ச்சி தெரிய வரும். மக்கள் நலம் சீர்பெறும். சுக்கிரபலம் காரணமாக சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள்.

பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இருந்து வரும். கூட்டுறவுத்துறை ஆக்கம் தரும். தொலை தூரத் தொடர்பு பயன்படும். 6-ல் உள்ள கேது பிரச்சினை களைச் சமாளிக்கக் கூடிய சக்தியை வழங்குவார். 25-ஆம் தேதி முதல் வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும். நல்ல தகவல் வந்து சேரும். கேளிக்கை, உல்லாசங் களிலும், விருந்து உபசாரங்களிலும் ஈடுபாடு கூடும். மார்ச் 10-ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். மாணவர்களது மந்தநிலை அகலும். கணிதம், எழுத்து, விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். பிப்ரவரி 14, 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 8, 13 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. தனுசு, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)

3, 11-ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புக் களைக் கடந்து வாழ்வில் முன்னேற்றம் காணச் சந்தர்ப்பம் கனிந்து வரும். தொழிலாளர்களது நிலை உயரும். விவசாயிகள் லாபம் கூடப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்கும், சமுதாய நலப்பணியாளர் களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். கவர்ச்சி அம்சம் கூடியிருக்கும். கலைத்துறையினருக்கு உற்சாகமான போக்கு நிலவி வரும். மாதர்கள் தங்கள் குறிக்கோளில் வெற்றி காண்பார்கள். பொருள் திரட்டும் ஆர்வம் கூடும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் லாபம் கூடப் பெறுவார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர் களது தொடர்பு ஆக்கம் தரும்.

தோல் பொருட்கள், ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், ஆகியவற்றால் ஆதாயம்

பெறச் சந்தர்ப்பம் கனிந்து வரும். பேச்சுத் திறமை பிரகாசிக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு இந்த நேரத்தில் சுப பலனைத் தரக் கூடிய தசா, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் அதற்கான வாய்ப்புக் கூடிவரும். நிர்வாகத் துறையினருக்கும், வியாபாரிகளுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். எழுத்தாளர்களும், பத்திரிகை யாளர்களும் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். பொருள் வரவு திருப்தி தரும். சுப காரியங்களுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரும். பிப்ரவரி 17, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 5, 8, 11, தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடக்குத் திசைகள் நலம் தரும். மகர, கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 4, 5, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும் செயல்திறமையும் பளிச்சிடும். முயற்சிக்கு வெற்றி கிட்டும். பொருள் திரட்டும் ஆர்வம் கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள், சட்ட வல்லுனர்கள் ஆகியோர் தங்கள் செல்வாக்கும், மதிப்பும் உயரப் பெறுவார்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடி வரும். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிட்டும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகள் ஆக்கம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். மக்களால் மன மகிழ்ச்சி உண்டாகும். பெரியவர்கள், தன வந்தர்கள் ஆகியோரது தொடர்பு பயன்படும்.

2-ல் சூரியனும், சனியும் உலவுவதால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் சூழும். பக்குவமாகப் பேசிச் சமாளிப்பது அவசியம். கணவன், மனைவி யரிடையே சிறுசிறு சலசலப்பைச் செவ்வாய் உண்டு பண்ணுவார் என்பதால் விழிப்புடன் இருப்பது நல்லது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவ மாகப் பழகுவது அவசியமாகும். பயணத்தின் போது பாதுகாப்புத் தேவை. 25-ஆம் தேதி முதல் வெற்றி வாய்ப்புக்கள் சற்று அதிகரிக்கும். மனத்தில் தெளிவும் பிறக்கும். மற்றையோரால் போற்றத்தக்க வகையில் ஓரிரு சாதனைகள் ஆற்ற முடியும். 10-ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். பேச்சில் திறமை கூடும். பிப்ரவரி 13, 14, 19, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 4, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : (அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)

3-ல் கேதுவும் 6-ல் செவ்வாயும் 11-ல் சுக்கிரனும் உலவுவதால் சங்கடங்களைச் சமாளிக்கக் கூடிய சக்தி பிறக்கும். எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். சட்டம் பொறியியல் துறைகள் லாபம் தரும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான வரவேற்பு குறையாது. நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் உண்டாகும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெற்றோரால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். மாதர்களது திறமை பளிச்சிடும். தொலைதூரத் தொடர்பு ஆக்கம் தரும். பொதுநலப் பணியாளர் களுக்கு வரவேற்பு கூடும்.

சூரியன், சனி, ராகு, குரு, புதன் ஆகியோரது பலம் திருப்திகரமாக இல்லாததால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். அலைச்சல் அதிகமாகும். மனத்தில் சிறுசிறு குழப்பங்கள் குடிகொள்ளும். கூட்டுத் தொழிலில் வளர்ச்சி காண அரும்பாடுபட வேண்டி வரும். எதையும் சுலபமாக நிறைவேற்றி விட இயலாமல் போகும். அலுவலகங்களில் பணிபுரிபவர் கள் சிறுசிறு சோதனைகளுக்கு ஆட்படுவார்கள். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களால் அனுகூலமிராது. மக்களால் ஓரிரு உபத்திரவங்கள் உண்டாகும். பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. இறைவழிபாடு மன அமைதியைத் தரும். பிப்ரவரி 13, 14, 20, 24, 26, 27, மார்ச் 1, 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. வடமேற்கு, தெற்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். மேஷ, கடக, தனுசு ராசிக்காரர்கள் உதவு வார்கள். 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

குரு புதன் ஆகியோரது அனுகூலமான சஞ்சாரம் காரணமாக உங்கள் அறிவாற்றல் பளிச்சிடும். முயற்சிகள் வெற்றி பெறும். நண்பர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு ஆக்கம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் ஏற்படும். மாணவர் களது, திறமை வெளிப்படும். வியாபாரி களுக்கு லாபம் கூடும். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகை யாளர்களுக்கும் செழிப்பான சூழ்நிலை உருவாகும். உடன்பிறந்தவர் களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். உடல்நலம் சீராக இருந்து வரும். தொலைதூரத் தொடர்பு பயன்படும். புதிய பொருட்களின் சேர்க்கை இல்லத்தில் நிகழும்.

ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் ஓரிரு இடையூறுகளும் அவ்வப்போது உண்டாகும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். கைப்பொருள் காணாமல் போகவும் கூடும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. பேச்சிலும் உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு அவசியமாகும். அதன் மூலம் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும், உங்கள் ஆரோக்கியத்திலும் சுமுகமான போக்கைக் காண இயலும். பிறமொழி, மதக்காரர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. அரசியல்வாதிகள் அகலக்கால் வைக்க வேண்டாம். வழக்கு வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. 25-ஆம் தேதி முதல் கலைஞர்களுக்கும் மாதர்களுக்கும் நல்ல திருப்பம் உண்டாகும். பிப்ரவரி 13, 14, 17, 24, 26, 27, மார்ச் 3, 5, 8, 11, 12, 13 தேதிகள் சிறப்பானவை. வடக்கு, வடகிழக்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

குடும்ப பட்ஜெட்-
அதன் இலட்சியமும் இலக்கணமும்

எஸ். இராஜரத்தினம்

குடும்ப பட்ஜெட் தயாரிப்பது எப்படி, அதை அமல் செய்வது எங்ஙனம் என்பதைப் பற்றி மேலை நாடுகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் கூறப்பட் டுள்ள சில கருத்துகளைக் கவனிப்போம்.

தீர்க்க முடியாத பிரச்னைகள் இல்லை:

"சுயகௌரவம் என்பது ஒரு மனிதன் தன்மானத்தோடு வாழ்தல். அவனுக்கு ஒரு விடுதலை உணர்வு வேண்டுமானால் அது அவனுடைய வருமானத்திற்குள் அவன் வாழ்வதால் மட்டுமே முடியும்" என்றார் அறிஞர் கால்வின் கூலிஜ். பிறந்தவர் யாவரும் சகல வாழ்க்கை வசதிகளோடு பிறப்பது இல்லை. வாழ்க்கையில் பல பிரச்னைகள் ஏற்பட வழியுண்டு. அவற்றில் பொருளாதாரப் பிரச்னை மிக முக்கியமான ஒன்று. முயற்சியால் ஊழையும் (விதியையும்) தோல்வி அடையச் செய்ய முடியும் என்று வலியுறுத்தினார் திருவள்ளுவர். அவரது கூற்றுப்படி எந்தவிதமான நிலைமையையும் சமாளிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஆனால் அதற்குரிய முயற்சி தேவை. ஏறிவரும் விலைவாசிகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட வேண்டிய நிர்ப்பந்தம் சமுதாயத்தில் கீழ்நிலையில் உள்ளோருக்கும், மத்திய தர வர்க்கத்தினருக்கும் என்றும் உண்டு. சிக்கல்களுக்குத் தீர்வு காணுவது என்பது திட்டமிட்டு செயல்படுவதால் மட்டுமே முடியும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குறிக்கோள் தேவை:

வாழ்க்கையில் ஓர் இலட்சியம் தேவை. பலரது குறிக்கோள், தம் சொந்த முயற்சியால் மட்டுமே முன்னுக்கு வந்து, இறுதிக் காலத்தில் தன்னுடைய பிள்ளைகளின் வருமானத்தை நம்பியிராமல் தங்களையும் காத்து தங்கள் மக்களின் கல்விக்கும், அவர்களது பிற்கால வாழ்க்கைக்கும் ஓரளவு தேவையான சேமிப்பையும் விட்டுச் செல்வதாகும். மேலும், தம்முடைய தந்தை விட்டுச் சென்ற சொத்தைத் தாமே கரைக்காமல் அவை தனது பிள்ளைகளையே சேர வேண்டும் என்பதுதான் ஒரு குடிமகனுக்கு சாதாரணமாக இருக்கும் இலட்சியம்.

திட்டமிடும் முறை:

திட்டமிடுவதில் சில படிகள் உள்ளன. அவையாவன:

1) உங்களுடைய இன்றைய மொத்த சொத்து விவரம் என்ன, கடன்கள் என்னென்ன, நிகர சொத்தின் மதிப்பு எவ்வளவு?

2) உங்களது இலட்சியம் 5 வருடங்களுக்குப் பின், 10 வருடங்களுக்குப் பின், நீங்கள் ஓய்வு எடுக்கும் காலத்தில் உங்கள் குடும்பத்திற்கு விட்டுச்செல்ல வேண்டிய அளவு; நீங்கள் உங்கள் முழு ஆயுள் காலம் இருக்கத் தவறினால், உங்கள் குடும்பத்திற்குத் தேவையான சேமிப்பு ஒவ்வொரு காலகட்டத்திற்கும் எவ்வளவு வேண்டும் என்பதையும் கணக்கிட்டுக்கொள்வது நலம். இதை மூன்று திட்டங்களாக வரையறுக்க முடியும்.

3) உங்களுடைய வருட வருமானம் வருங்காலத்தில் எவ்வளவு இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

4) உங்களுடைய வருடாந்திரச் செலவுகள் எவ்வளவு இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? இந்தச் செலவுகளைக் கணக்கிடும் போது வீட்டு வாடகை, உணவு, உடை, கார் முதலிய செலவினங்கள், பொழுதுபோக்குச் செலவினங்கள், சாதாரண மருத்துவச் செலவு, எதிர்பாராத செலவினங்கள், கடன் வாங்கியிருந்தால் அதற்கான வட்டி, வரிகள் ஆகியவை அனைத்தையும் உங்கள் மொத்த வருமானத்தில் இருந்து கழித்து நீங்கள் எவ்வளவு சேமிக்க முடியும் என்பதை இந்த மூன்று காலக் கட்டங்களிலும் காணுங்கள். இந்தச் சேமிப்பு உங்களுடைய இலக்கை அடையப் போதுமானதா என்பதையும் பாருங்கள்.

5) இந்தக் கணக்கைப் போடும் போது நிச்சயம் நீங்கள் எதிர்பார்க்கும் வரவுகள் உங்களுடைய செலவினங்களுக்குப் போதா. சேமிப்பு அப்படியே வந்தாலும் எதிர்பார்க்கிற சேமிப்புக் கிடைக்காது. இது எல்லாருடைய அனுபவமும்கூட. அப்போது தான் எந்தச் செலவினங்களைத் தவிர்க்கவேண்டும் என்ற கேள்வி வருகிறது. இது சிக்கனத்திற்கு முதல் படி.

6) எவ்வளவுதான் செலவுகளை குறைத்தாலும் வருங்காலத்தில் வர கூடிய செலவினங்கள், பெருகு குடும்பம், விலைவாசி ஏற்றம், கடன் வாங்கி வீடு கட்டுவதால் ஏற்படு வட்டி, அத்தியாவசியமான முதலீடு களால் ஏற்படக்கூடிய முதலீட்டு செலவுகள் ஆகியவற்றை எல்லா பார்க்கும்போது நீங்கள் ஓர் அ விற்கு மேலும் செலவைக் குறைக் முடியாது என்ற முடிவுக்கு வ வேண்டியது இருக்கலாம்.

7) செலவினங்களை இரண்ட வது தடவை பார்க்கும் நீங்கள் குறுகிய காலத் திட்டத்திற்கோ, நீண் காலத் திட்டத்திற்கோ உங்க இலக்கை அடையமுடியாது என்றா என்ன செய்வது? நீங்கள் ஒரேய யாக கஞ்சத்தனமாக உணவிற்கும் உடைக்கும் வஞ்சகம் செய் சேமிப்பது என்பது இயலாத காரிய அது தேவையுமல்ல. சிற்சி செலவுகளை மீண்டும், மீண்டு பார்க்கும்போது குறைக்கமுடியு வேறு வீட்டைப் பார்க்கலாமா, வாக வசதி இப்போதைக்கு அவசிய தானா போன்ற பல சிந்தனைக உங்களுக்கு எழலாம். விவாக இப்போது தேவையா, மணமாகியிரு தால் குழந்தை இப்போது அவசிய தானா அல்லது இன்னொரு குழந்தை இப்போது அவசியம்தானா என்பது போன்ற முடிவுகள்கூட எடுப்பதற் இந்தத் திட்டம் வகுத்தே முடிவுசெய் வேண்டுமென்று, மேலை நாட்டி வீட்டுப் பொருளாதாரத்தைப் பற் எழுதுவோர் விவரிக்கின்றனர் அப்படிப்பட்ட முடிவுகளைப் பலரு பொருளாதார நோக்கிலே எடுக்கின்றனர்.

ஒரு கடின முடிவு:

எந்த முயற்சி எடுத்தாலும் நம இலக்கிற்கு வழியில்லை, என்றா இப்போது சில கடினமான முடி களை எடுக்க வேண்டி வரும்.

சேமிப்பு வருமானத்தில் 20 குறைந்த பட்சம் வேண்டும் என் நீங்கள் நினைத்து, அந்த இலக் அடைய வழியே இல்லை என்றா அந்த 20% வருமானத்தை நீங்க உங்கள் கையில் எட்டாத தூரத்தி வைக்கும்படி உள்ள சேமிப்பு

திட்டங்களில் செலுத்துகள். நீங்கள் வருமானத்தில் சேமிப்பே இல்லாது 100% செலவு செய்து வரும் போது எவ்வளவு சிரமங்களை அனுபவித்தீர்களோ, அதே சிரமங்களைத் தான் உங்கள் வருமானம் 80% இருந்தாலும் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். இதை நீங்கள் நம்பாமல் இருக்கலாம். ஆனால் அது பலரது அனுபவப்பூர்வமான உண்மை. உங்களது வருமானம் இன்றைய வருமானத்தைவிட 80% தான் இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் உங்களால் சேமிக்க முடியும் என்று திட்டவட்டமாக சில நிபுணர்கள் கூறுகின்றனர். முயற்சி செய்து பார்க்கலாமே!

அத்துடன் வேறு சில வழிமுறைகளையும் கவனத்தில் கொள்ளலாம். தவணை முறையில் எதையும் வாங்குவதைத் தவிர்த்தல் நலம். பல வங்கிகளும், தனியார் நிறுவனங்களும் வழங்கும் கடன் அட்டைகளை (Crdit Cards) அறவே ஒதுக்கி விடுங்கள். இந்தக் கடன் அட்டை வசதி நம் நாட்டில் இப்போது பரவி வருகிறது. மேலை நாட்டில் இது நல்ல பழக்கத்தில் உள்ளது. "என் காதலனுக்காக நான் ஓர் உடையைத் தவணை முறையில் வாங்கினேன். என் உடை கிழிந்து போயிற்று. காதலனும் கைவிட்டான். ஆனால் தவணைகளை இன்னும் செலுத்திக் கொண்டே இருக்கிறேன்". என்ற கருத்துடன் வேடிக்கையாக அமெரிக்க நாட்டில் ஒரு பாடல் கூட உண்டு.

இறுதிப் படி

எல்லா முயற்சிகளையும் செய்தும் இலக்கை அடைவதற்குப் போதிய வாய்ப்பில்லை எனும்போது என்ன செய்வது? அப்போதும் இலக்கை எளிதில் விட்டுவிடவேண்டுமென்பதில்லை. ஒரே வழி, உங்கள் வருமானத்தைப் பெருக்குவதுதான். உங்கள் மனைவி வேலை செய்ய வேண்டுமா அல்லது, பகுதி நேர வேலை செய்ய வேண்டுமா என்று சிந்திக்க நேரலாம். ஆனால் நீங்களே பகுதி நேர வேலையை அதிகப்படியாக மேற்கொள்ள நேரிடலாம். இந்த வேலையை விட்டு வேறு நல்ல வேலையில் சேருவதற்கு உங்கள் கல்வித் தரத்தினை உயர்த்த முயற்சி செய்ய வேண்டி நேரலாம். வருமானத்தை எப்படி பல நேர்மையான வழிகளில் பெருக்கலாம் என்பதைச் சிந்திப்பதே உங்கள் இலட்சியத்தின் முக்கியக் குறிக்கோளாக இருக்கலாம். இப்படி பல வழிகளில் முயற்சி செய்தால் உங்கள் இலக்கை அடைவது எளிது. இல்லாவிடில் எவ்வளவு தான் உங்களுக்கு வருமானம் வந்தாலும் உங்களுடைய இலட்சியம் நிறைவேறாமல் போகலாம். உங்களுடைய செலவுகள் உங்கள் வருமானத்தில் பெரும்பகுதியோ அல்லது முழுவதுமோ செலவிற்கே சரியாகப் போய்விடும் நிலைகூட ஏற்படலாம். அல்லது நீங்கள் செலவை மட்டுமே பார்த்து வெறும் கஞ்சனாகவே இருந்தால் வருமானத்திற்குரிய வழியையே மறக்கக் கூடும்.

பட்ஜெட் தயாரிப்பதன் பயன்கள்

இதனால்தான் குடும்ப பட்ஜெட் தயாரிக்கும்போது நீங்கள், வியாபாரிகள் எப்படி வருட இறுதியில் இருப்புச் சரக்குகளைக் கணக்கிட்டு, வரவேண்டியவை நிலுவைச் சேதாரம் எவ்வளவு என்பதைக் கண்டு தங்கள் வியாபாரம் சரியான தடத்தில் செல்கிறதா, தங்கள் முதலுக்கு வட்டியும் உழைப்பதற்கு ஏற்ற கூலியும் கிடைக்கிறதா, எப்படி இலாபத்தைப் பெருக்க முடியும் என்பன போன்ற பல விஷயங்களை முடிவு செய்கிறார்களோ, அவ்விதமே நாம் செய்வது, நமது குடும்பத்திற்கு நாம் செய்யும் கடமையாகும். வருமானம், செலவினங்கள், சேமிப்பு என்ற மூன்றையுமே கவனத்தில் கொள்வது நல்லது. வருமானத்தைப் பெருக்கலாம். செலவினங்களைக் குறைக்கலாம். இரண்டுமே செய்யலாம். சேமிப்பு தானே கூடும். தன்னம்பிக்கை வளரும். வாழ்க்கை வளம் பெறும். ●

அனுபவ் குருப்பின் தேக்குப் பண்ணை

அனுபவ் குரூப் நிறுவனங்கள் உலக அரங்கில் தேக்குப் பண்ணை அமைப்பதன் முதற்படியாக அனுபவ்- அரப்- ஆக்ரோ கைரோ என்ற நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனம் அரப் ஆக்ரோ ஏவியேஷன் நிறுவனத்துடன் கூட்டாக இப்பணியைச் செயலாக்கத் திட்டமிட்டுள்ளது. அரப் ஆக்ரோ ஏவியேஷன் நிறுவனம் எகிப்து, கிரேக்க, ஏதன்ஸ் நாடுகளில் விமானம் மூலம் பயிரிடுதல், பூச்சி மருந்து தெளித்தல், உரமிடுதல் ஆகிய வேலைகளைத் தன்னுடைய சொந்த ஹெலிகாப்டர் விமானம் மூலம் திறம்படச் செய்து வருகின்றது.

முதல் கட்டமாக 2500 ஏக்கர் நிலப்பரப்பில் 1 மில்லியன் தேக்கு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்புதிய நிறுவனத்தில் அனுபவ் குரூப் 70% பங்கு வகிக்கும். அரப் ஆக்ரோ ஏவியேஷன் துணையுடன் இந்தியாவில் 'ஸ்ட்ராபெரி' பயிரிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அனுபவ் அரப் ஆக்ரோ- கைரோ நிறுவனம், 50 மில்லியன் டாலருக்கு வரும் செப்டம்பர் மாதம் ஐரோப்பிய நாடுகளில் பங்குகள் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

டி. ஆர். ஜி.

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001-சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. ஆசிரியர்: 'கலைமாமணி' விக்கிரமன். நிர்வாக அலுவலகம்: 145 லிங்கிச் செட்டி. தெரு. த.பெ. எண். 5043, சென்னை - 600 001. தொலைபேசி : 5228545, 510535.